
கல்கி


KALKI 16-12-1973

50 காசு






தாக்கர்ஸீஸ் சூட்டிங்குகள் & ஷர்ட்டிங்குகள்
க்ரோனலீன்
க்ரோனெஸ்டர்
ஈஸிலீன்
தாக்கர்ஸீஸ்
ஈஸிகேர்
தாக்கர்ஸீஸ்
எவர்ஃப்ரெஷ்
உள நிலைகளோடு ஒருங்கிணையும் துணிகள்!
தாக்கர்ஸீ க்ரூப் ஆஃப் மில்ஸ்
TAMIL Datamani TG-181



பச்சிளம் மேனியைக் காப்பதற்கே பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்—



மேனியிலே அதி நுட்பமான பகுதி-உங்கள் முகத்தின் சருமம்: பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாது-காக்கத்தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனியைக் காப்பாற்-றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மையோடு குளுமையாக வைத்திருப்ப-தற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். எங்கெங்குமே, எழில்கொஞ்சும் இளம் செல்வியர் உபயோகிக்கும் பவுடர்.

பிறந்த நாளையப் பிஞ்சு மென்மையோடு உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*

எங்கள் கடன் திட்டங்கள் மூலம் போக்கு வரத்து வாகனங்கள் அதிகரித்தல்...




போக்குவரத்து வாகன இயக்குனர்கள் சொந்தமாக தொழில் தொடங்கி, அதனை லாபகரமாக நடத்துவதற்கு உதவி செய்கிறோம். டிரக், பஸ், மினி பஸ், டாக்ஸி மற்றும் ரிக்ஷா முதலியவற்றின் இயக்குனர்களுக்கும் கடன்கள் வழங்கி உதவுகின்றோம். எங்கள் பரவலான கடன் திட்டங்கள், 600க்கு அதிகமான கிளைகள் மூலம் அநேகமாய் ஒவ்வொரு சமூக-பொருளாதாரப் பிரிவும் உள்பட அனைத்திற்கும் வசதிகள் வழங்குகின்றன.

தாங்களே தங்களுக்கு உதவ
மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

யூனைடெட் கமர்ஷியல் பாங்க்

UNITED COMMERCIAL BANK

UCBC-3 TAM



அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்பூரில் நம் நாட்டின் முதல் எஃகுத் தொழிற்சாலை நிறுவப்பட்ட காலந்தொட்டு, தன்னம்பிக்கைக்கு ஒரு மாதிரியை உருவாக்கி வைத்துள்ளது டாடா ஸ்டீல்.

பல்லாண்டுகளாக நாட்டின் ஒரே எஃகுத் தொழிற்சாலையாக இருந்த டாடா ஸ்டீல் தனக்குத் தேவைப்பட்ட துணையுறுப்புகளைத் தயாரித்தளிக்க வேறு நிறுவனங்கள் எதுவும் இல்லாதிருந்த காரணத்தால், உபரி உறுப்புகளைத் தானே தயாரித்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்றும் டாடா ஸ்டீல் லேரி கார், புஷர் கார் முதல் பெல்லெட்டைஸிங் கில்ன், மட் கன் மற்றும் ராக்கிங் ஷியர் வரை பல திறப்பட்ட உறுப்புகளைத் தானே டிஸைன் செய்வதோடல்லாமல், தயாரிக்கவும் செய்கிறது.

இவ்வழியில், நம் நாட்டின் பொருளாதாரச் செழுமைக்கு உதவுவது என்று டாடா ஸ்டீல் அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன் வகுத்துக் கொண்ட கோட்பாட்டை நிறைவேற்றும் பணியில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

டாடா ஸ்டீல்

AIYARS-TS-4 TM

Hosiery made of pure


GRASIM

STAPLE FIBRE

has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability

If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.

THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)



பொருளடக்கம்

பிரமாதீச, மார்கழி, 1 — டிசம்பர் 16, '73

இந்திய-ருஷ்ய நட்பு	...	9
தமிழ்நாட்டிலே...	...	10
காமாக்ஷியின் கருணை-2	...	17
சிவகாமியின் சபதம்	...	19
பத்திரிகைக் காகிதப் பற்றாக்குறை	...	29
யுத்தத்தின் முடிவில்...	...	30
ராஜாஜியின் ஜெயில் டைரி	...	33
முதல் போட்டி இரண்டாம் இடம்	...	35
தலைப்பிரசவம்	...	36
பாசதீபம்	...	37
திலீப் கோப்பை	...	41
இருட்டு மலர்	...	43
பண்பின் பெட்டகம்	...	52
நிர்மால்யம்	...	59
கல்லும் கனியாகும்	...	60
உன்னைவிட நான்...	...	66

கல்கி - சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



கல்கி

""கல்கி"யில் வெளி வரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்ப வங்களும் கற் பனையே



"பழைமையான கரகரப்-
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...!"

கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களை-யும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TP. G. 19 TM

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 — இதழ் 20

இந்திய - ருஷ்ய நட்பு

நட்பு, சமாதானம், நல்லுறவு என்பன சோவியத் அகராதியில் முன்னணியில் நிற்கும் சொற்கள். சோவியத் பெருந் தலைவரின் சமீபத்திய இந்திய விஜயத்தின்போதும் இவை விரிவாகப் பேசப்பட்டன. பங்களாதேஷ் நெருக்கடியின் போதும் பின்னரும் ருஷ்யா காட்டிய நட்பும் நல்லுறவும் மறக்க முடியாதவை. அதற்குப் பிறகு பொருளாதாரத் துறையில் வழங்கியுள்ள உதவியும், மிகச் சமீபத்தில் உணவு நெருக்கடியைச் சமாளிக்கக் கடனாக இருபது லட்சம் டன் கோதுமை அளித்ததும் ருஷ்ய நட்பை மிகவும் உயர்த்தியுள்ளன. இப்போதும் நம்முடைய நெருக்கடி தீர்ந்தபாடில்லை. பெட்ரோல், மண்ணெண்ணெய், ரசாயன உரங்கள் போன்ற பல அத்தியாவசியப் பொருள்களுக்கு இஸ்ரேல்—எகிப்துச் சண்டையின் விளைவாகத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் கணிசமான உதவி அளிக்க ருஷ்யா முன்வருகிறது என்பது நட்பின் சின்னமாகும். மிக விரிவான முறையில் வகைப்படுத்தப்பட்ட பதினைந்து ஆண்டுப் பொருளாதார உதவி உடன்படிக்கையும், ருஷ்ய நட்பைப் பளிச்சிட்டுக் காட்டுகிறது. இவற்றையெல்லாம் இந்திய மக்கள் பாராட்டுகிறார்கள். பிரதமர் இந்திரா காந்தியும், அடிக்கடி இந்தியாவின் நன்றியை வலியுறுத்திப் பேசியுள்ளார்.

ஆனால் இவையெல்லாம் பிரஷ்நேவ் விஜயத்தின் ஓர் அம்சம்தான். இந்த உடன்படிக்கையின் விளைவாகக் கனரகத் தொழில்களிலேயே மீண்டும் கோடிக் கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்யப்படும். லாபம் காணும் திறனற்ற அரசுத் துறையில் மேலும் இவ்வாறு முதலீடு செய்வது மக்களின் கஷ்டத்தை அதிகரிக்கவே போகிறது. இது தவிர பிரஷ்நேவின் வருகையில் இன்னொரு நோக்கமும் அடங்கியிருப்பதை அரசியலை ஆராய்பவர்கள் அறிவார்கள்.

இந்தியாவுக்கு மாறுபட்ட அரசியல் அமைப்பையும், பொருளாதார அமைப்பையும் கொண்டது ருஷ்ய நாடு. தனது கொள்கைகளை வெளி நாடுகளில் பரப்பி, அந்நாடுகளைத் தனது செல்வாக்குக்கு உட்பட்ட நாடுகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் உள்ள நாடு ருஷ்யா. பேச்சு வார்த்தைகளில் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பொருளாதாரத் துறை உதவி, ஒத்துழைப்பை மட்டும் பிரதானமாக வலியுறுத்தியுள்ளது போல் ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் பிரஷ்நேவின் விஜயத்தில் அரசியல் ரீதியான நோக்கங்களும் மிகுதியாக உண்டு என்பதில் ஐயமில்லை. நம் நாட்டில் பண வீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பலப் பல பிரச்னைகள் பயங்கரமாகத் தலைதூக்கி மக்களை வருத்தி இந்திரா அரசிடம் நம்பிக்கையைக் குறைத்து வரும் தருணத்தில் பிரதமரது புகழும் செல்வாக்கும் அடிமட்டத்துக்குப் போய் விடாமல் தடுக்க உதவுகிற வகையில் பிரஷ்நேவ் விஜயம் திட்டமிடப்பட்டுள்ளது என்பது தெளிவு.

ருஷ்யப் பெருந் தலைவர் இந்த விஜயத்தில் கையாண்டுள்ள மூன்று கட்டத் தொடர்புகள் உற்று நோக்கத் தக்கவை. அரசாங்கத்துடன் அரசாங்கம்; மக்களுடன் மக்கள்; ஆளும் கட்சித் தலைவர்களுடன் ஆளும் கட்சித் தலைவர்கள் — என்று தனித் தனி தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது கட்டத்தில் மிகுந்த அபாயமும் தீமையும் உள்ளன. ஏற்கனவே இந்திய அரசாங்க அந்தஸ்திலும், புதுக் காங்கிரஸ் அணிகளிலும் கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் மந்திரிகளாகவும் மக்கள் சபை அங்கத்தினர்களாகவும் ஊடுருவி, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போக்கு இனி மேலும் வலுவடையுமோ என்று ஐயமுற இந்தக் கட்சிக்குக் கட்சித் தொடர்பென்ற புது சம்பிரதாயம் இடம் அளிக்கிறது. நம்முடைய திட்டங்களையும், ருஷ்யாவின் திட்டங்களையும் ஒத்திட்டு ஆலோசனைகள் கூறப் பல நிபு

ணர்கள் அணி செயல்படும் என்ற ஏற்பாடும் சந்தேகத்தையே அதிகரிக்கச் செய்கிறது. இந்திரா காங்கிரஸ் தலைவர் சர்மா ருஷ்யத் தலைவருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும் இம்மாதிரி அச்சத்தை ஊட்டுகின்றன.

ருஷ்யத் தலைவரின் விஜயத்தைத் தொடர்ந்து செக்கோஸ்லோவேகியா தலைவரும் வந்திருக்கிறார். ஏறக்குறைய ருஷ்யத் தலைவர் நடத்திய பேச்சுவார்த்தைகளின் ரீதியிலேயே பேசிப் பொருளாதாரக் கூட்டுறவு உடன்படிக்கையும் இப்பொழுது கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் இந்தியா கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகள் பக்கமாக முன்னைவிட அதிகமாகச் சாய்கிறது என்று நினைக்க இடம் உண்டு.

இதையெல்லாம் ஒருவாறு உணர்ந்துள்ள பிரதமர் இந்திரா காந்தி ருஷ்யா — இந்தியா நட்பு நம்முடைய அரசியல் அமைப்புக்கு உட்பட்டு நாம் முன்னேற்றமடைவதைத் தடுக்காது என்றும் இதர நாடுகளுக்கு எதிராகச் செயல்படாது என்றும் அடிக்கடி கூறி வருகிறார். நிலைமையை உணர்வது பாதிக் கிணறு தாண்டியது போல்தான். ஆபத்தைச் சமாளிக்க முன் எச்சரிக்கையாகப் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்திய மக்கள் விழிப்புடனேயே இருப்பது நல்லது.

பலமுனைத் தாக்குதல் வேண்டாம்

பலசரக்கு வியாபாரம் செய்யும் சில்லறை வியாபாரிகள் பலரும் அதிகப் படிப்பு வாசனையும், கணக்கு வைத்துக் கொள்ளக் கூடிய திறனும் அற்றவர்கள். சர்க்கார் விற்பனை வரி அதிகாரிகள் அவர்களைக் கெடுபிடி செய்து மிரட்டுகிறார்கள். சிறு வியாபாரிகள் பல தொல்லைகளுக்கு இலக்காகிக் கஷ்டப்படுகிறார்கள்.

இன்னொரு விஷயம். இன்றுள்ள விற்பனை வரிச் சட்டத்தின் குழப்பம் விளைவிக்கும் தன்மை காரணமாக வியாபாரியும் குழம்புகிறார். வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தரும் குழம்புகிறார். ஆகவே இந்தச் சிக்கலான பலமுனை வரியை நீக்கிவிட்டு, எளிய வகையில் ஒருமுனை வரி விதிக்கும்படி கோருகிறார்கள் வியாபாரிகள்.

இன்று பலமுனை விற்பனை வரி மூலம் அரசாங்கத்துக்குக் கிட்டத்தட்ட 120 கோடி ரூபாய் வருகிறது. இதை ஒருமுனை விற்பனை வரியாகச் செய்தால் அரசாங்கத்துக்கு நஷ்டம் ஏற்படாதா என்ற கேள்வி பிறக்கிறது.

இன்றுள்ள சிக்கலான வரி முறைகள் காரணமாக வியாபாரிகள் அரசாங்கத்துக்குச் சரியாக வரி செலுத்துவதில்லை. வழியில் எங்கெங்கோ சென்று விடுகிறது. ஒருமுனை விற்பனை வரியில் வர்த்தகர்களுக்கு ஏய்க்கும் மனப்பான்மையும் இராது. புரியாமல், அறியாமல் செய்த பிழைகளும் இராது. வியாபாரி மகிழ்ச்சியோடு வரி செலுத்துவான். அவ்வகையில் இன்றுள்ளதைவிட அரசாங்கத்துக்கு அதிகமாகக் கூட வருமானம் கிடைக்கலாம்.

மேலும் வரி முறை எளிதாக்கப்பட்டால் நாட்டில் இன்றுள்ளதைவிடப் பலமடங்கு வியாபாரிகள் பெருகுவார்கள். வர்த்தகம் செழிக்கும். சர்க்காரின் வரி வருவாயும் பெருகும். வர்த்தகர்களின் எண்ணிக்கை பெருகுவது என்பது நாட்டில் வேலை வாய்ப்புக்களை அதிகப்படுத்தியதாகும் என்கிறார்கள் வர்த்தகப் பிரமுகர்கள்.


அரசாங்கம் வர்த்தகர்களின் குறைகளை ஆராயவும், விற்பனை வரி செயல்படும் முறையைக் கண்டறியவும் திரு எஸ். பி. சீனிவாசன் அவர்களைத் தனிநபர் விசாரணைக் கமிஷனாக நியமித்துள்ளது. விசாரணைக் கமிஷனின் முடிவுகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன. விவசாயத்துக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்ற வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் குறைகளுக்குச் செவி சாய்ப்பது ஜனநாயக அரசின் கடமை. மக்களின் நன்மையை மறவாதிருப்பது வர்த்தகர்களின் கடமை.


ராஜாஜி சிந்தனை

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத்திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்களைக் கொண்டு காணாத பொருள்கள் இல்லவே இல்லை என்று சாதிக்க முடியுமா? நம்முடைய அறிவின வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுளே இல்லை, கடவுளுக்கு அவசியமும் இல்லை என்று சாதிக்க வேண்டாம்.

* * * *

தருமமே சுகம், தருமமே சந்தோஷம், தருமமே சாதுரியம், தருமமே செல்வம். தருமம் கெட்டால் நாடு செழிக்காது. எல்லோரும் தரித்திர நிலை அடைவார்கள். மோசமும் பித்தலாட்டமும் சமுதாயத்தை நாசம் செய்துவிடும். சமுதாயம் கெட்டால் அனைவரும் கெடுவோம்.


அவுட் பேஷன்டுகளைக் கவனிக்கத்தான் நேரம் சரியாயிருக்கு... படுத்த படுக்கையாகக் கிடக்கும் நம்மை டாக்டரம்மா எங்கே கவனிக்கப் போறாங்க!
டிஸ்பென்ஸரியை மூடாதீங்க. இதோ நானும் வந்துட்டேன்!
தொழில்கள்
விவசாயம்
பொருளாதாரம்
வேலை வாய்ப்புகள்
நாகாலாந்து
கர்நாடகா
ஆந்திரா
பீகார்
உ.பி


ஆகா! எம் திருநாகம் பிரஷ்நேவ் பாதம் பட்டுப் புனிதமடைந்த மண் இது! அவருடன் அளவளாவும் பாக்கியம் பெற்றவர்கள் நீங்கள்! தன்யனானேன்!
ஆமா, இன்னும் போலந்து, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி இத்யாதி தலைவர்களையும் சாவடிக்க--கச் செய்யுங்க?
இந்தியக் கம்யூனிஸ்ட்
ஸ்தலயாத்திரை

தமிழ் நாட்டிலே...

தீரன்


அமைச்சர்களின் பெட்ரோல் செலவு

பெட்ரோல் விலையேற்றத்தைச் சமாளிப்பது எப்படி என்று பொதுமக்களும், வர்த்தகர்களும் கவலைப்பட்டுத் திணறிக் கொண்டிருப்பதுபோல் அமைச்சர்கள் கவலைப்படவுமில்லை; திணறவுமில்லை. அவர்கள் பிரச்னை மிகவும் சுலபமாகவே தீர்ந்து போய் விட்டது. நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒரு சிறு திருத்த மசோதா மூலமாக எல்லாக் கவலைகளும் தீர்வதற்கு வழி பிறந்து விட்டது. ''அமைச்சர்கள், சபாநாயகர், மேலவைத் தலைவர் ஆகியோருடைய கார்களுக்கு அலவன்ஸாக இதுவரையில் ரூ. 250 கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பதிலாக இனிமேல் அவர்களுக்கு எவ்வளவு பெட்ரோல் தேவைப்படுமோ அவ்வளவையும் அரசாங்கமே கொடுக்கும்'' என்பதுதான் புதிய திருத்த மசோதா. அமைச்சர்களுக்குத்தான் எத்தனை முன்ஜாக்கிரதை! எத்தனை அக்கறை! பெட்ரோல் விலை மறுபடியும் ஏறினாலும் ஏறலாம். அதனால்தான் வம்பே இல்லாமல் எந்த விலை ஏறினாலும் எவ்வளவு ஏறினாலும் பாதிக்காதபடி ''அவர்களுக்கு எவ்வளவு பெட்ரோல் தேவையோ அவ்வளவையும் அரசாங்கமே கொடுக்கும்'' என்று திருத்த மசோதா வந்து நிறைவேறி அவர்களைப் பொறுத்தவரை பருத்தி புடவையாகவே காய்க்கிறது.

முதல்வரே ஒரு தரப்பா ?

சென்னையில் டிசம்பர் முதல் வாரம் திரு ஈ. வெ. ரா. நடத்தவிருக்கும் மகாநாட்டை ஒட்டி இந்துக் கடவுளர்கள் பற்றி ஆபாசமான ஊர்வலம் நடக்குமானால் அதை எதிர்த்துப் பதில் ஊர்வலம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு இந்து மிஷனும், சர்வ கட்சித் தலைவர்களும் அறிவித்ததை யொட்டி சட்டசபையில் முதல்வர்,


''நான் திராவிடர் கழகத்தினரை அழைத்துப் பேசியதன் விளைவாக அந்த ஊர்வலம் கைவிடப்பட்டுள்ளது. அந்த ஊர்வலம் நடைபெறாது. புராணங்களையும், கடவுள்களையும் ஈ. வெ. ரா. இழிவுபடுத்துவதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய பல கோவில்களில் புராணங்களில் கடவுள்களைக் களங்கப்படுத்தி உள்ள பகுதிகளை, சிலைகளாக, சிற்பங்களாகக் காண முடியும். எனவே பக்தர்கள் மனத்தை நீங்கள் புண்படுத்த வேண்டாம். பிரசாரம் செய்ய வேண்டாம். நேரடியாக அவர்களே போய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும் என்று நான் சொல்லி விட்டேன்'' என்று கூறியிருக்கிறார். இவ்வாறு முதல்வரே ஈ.வெ. ரா.வின் தரப்புக்கு ஆதரவாகப் பேசியிருப்பதைக் காண்கிறோம். பக்தர்களின் மனத்தை











டில்லியில் நடைபெற்ற விழாவில் பஞ்சாப் முதல் மந்திரி ஞானி ஜெயில் சிங் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். பாராளு மன்றத் தலைவர் திரு ஜி. எஸ். தில்லான், வெளியுறவு அமைச்சர் ஸ்வரண் சிங், தமிழ் நாட்டு முன்னாள் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

படங்கள்: 1.பம்பாயில் வெளியீட்டு விழா. 2.மத்திய சர்க்கார் அமைச்சர் ஸ்வரண் சிங். 3. தமிழக முன்னாள் ஆளுநர் உஜ்ஜல் சிங். 4. புதுதில்லி விழாவில் ஞானி ஜெயில்சிங்கிடம் இசைத்தட்டு வழங்குதல்.

'எதற்காகக் காட்டைத் தேடிப் போகிறாய்?' 'ராமனே பஜனே செய்', 'ஆண்டவனே நின்னைச் சரண் அடைந்தேன்' 'ராமனே நீனே' என்று பொருள் தரும் குரு நானக்கின் பாடல்கள் மிகப் புகழ் பெற்றவை.

இவற்றை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இனிய குரலில் இசைத்தட்டுக்களாக வழங்கியிருக்கிறார்கள் கிராமபோன் கம்பெனியார்.

அண்மையில், குரு நானக் பிறந்த நாள் விழா வன்று இவ்விசைத்தட்டு வெளியீட்டு விழா பம்பாய், தில்லி நகரங்களில் நடைபெற்றது.

பம்பாயில் நடைபெற்ற விழாவுக்கு டாக்டர் நாராயண மேனன் தலைமை தாங்கினார். பஞ்சாப் அசோசியேஷனின் தலைவர் ஸ்ரீ தரன் இந்தர் சிங் வெளியிட்டார். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆசிரியர் குஷ்வந்த் சிங் பாராட்டிப் பேசினார்.

ச. வெ. ரா. புண்படுத்த வேண்டாம் என வேண்டிக்கொண்ட முதல்வருக்குத் தமது பேச்சின் மூலமாகவே அதைச் செய்ய உரிமை உண்டு போலும். ஊர்வலம் நடந்தாலும் நடக்கா விட்டாலும், மகாநாட்டுக்குள் இந்துக்களின் மனத்தைப் புண்படுத்தும் நாடகங்களும் காட்சிகளும் இருக்கும் எனத் தெரிவதால் மகாநாடு நடக்கும் இடத்துக்கு முன்னால் கறுப்புக்கொடி காட்டுவது என்று தமிழ்நாடு இந்து சமயப் பேரவை முடிவு செய்திருக்கிறது.

'கவிதை'க்கு விளக்கம்

சமீபத்தில் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் 'கவிதை' என்ற வார்த்தைக்கு விளக்கம் கூறும்போது முதல்வர், ''கவிதை என்ற சொல்லில் முதலெழுத்து 'க' போய்விட்டாலும்'விதை'என்ற பொருளைத் தரும்.'வி' என்ற எழுத்தை எடுத்துவிட்டால் 'கதை' என்ற பொருளைத் தரும். 'தை' என்ற எழுத்தை எடுத்து விட்டால் 'கவி' என்ற பொருளைத் தரும். ஓர் எழுத்தோ, இரண்டு எழுத்தோ போய்விட்டால் எப்படி அந்த வார்த்தை அழியாதோ அதுபோல் தி. மு. க. விலிருந்து சிலர் போய்விட்டாலும் தி.மு.க. ஒன்றும் அழிந்து விடாது'' என்று சமத்கார மாகப் பேசியிருக்கிறார். எதை மறந்தாலும் தி. மு. க.விலிருந்து சிலர் பிரிந்து போனதை அவரால் மறக்கவே முடியவில்லை. இது அவரது பலமா, பலவீனமா?

மாநகராட்சி 'மா ஊழல்'

சென்னை மாநகராட்சியின் பல கோடி ஊழல் பற்றிய மேல் விவரங்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. அதன் தொடர்பாக இரு கவுன்சிலர்கள், ஒரு குமாஸ்தா, ஒரு மானேஜர், டைம் கீப்பர், உதவி சூபர்வைசர் முதலிய சிலர் கைதாகி இருப்பதாகத் தெரிகிறது. மாத ஊதியமாக ரூ. 200 மட்டுமே பெறுகிற ஒரு கார்ப்பரேஷன் குமாஸ்தாவைப் பற்றிய விவரங்கள் ஆச்சரியப்படும்படியாக உள்ளன. அந்த 200 ரூபாய் சம்பளமுள்ள குமாஸ்தா ரூபாய் ஒரு லட்சம் பெறுமானமுள்ள வீடு ஒன்றைச் சென்ற வருஷம் கட்டிக் குடியேறி



யிருக்கிறார். வீடு லட்ச லட்சமாகச் சம்பாதிக்கும் சினிமா அதிபர் ஒருவருடைய வீடுபோல் இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தியும், வீட்டின் படமும் பிரசுரமாகியுள்ளன. இந்த வீட்டில் நான்கு கனமான மெத்தையுடன் கூடிய பெரிய கட்டில்கள், விலைமதிப்புள்ள பிரிஜிடேர், அழகிய பல சோபா செட்டுகள், மரச் சாமான்கள், அலமாரிகள், அலங்காரப் பொருள்கள் எல்லாம் இருந்தனவாம். மாதம் 200 ரூபாய் சம்பளம் பெறும் கார்ப்பரேஷன் மின்சார இலாகா குமாஸ்தாவால் எப்படி இவ்வளவும் வாங்க முடிந்தது என்று கேட்டால் தி. மு. க. ஆட்சியில் இதொன்றும் அதிசயமில்லை என்ற பதில்தான் மக்களிடம் கிடைக்கிறது.

பெற்றால்தான் பிள்ளையா?


மாணவர் கிளர்ச்சியைப் பற்றி ஏதோ பேசும்போது எம். ஜி. ஆரைக் கிண்டல் செய்ய வேண்டும் என்ற அரிப்பில் (இது வழக்கமான அரிப்பு) "பெற்றவர்களுக்குத்தான் தெரியும் பிள்ளையின் அருமை" என்பது போல் பேசிவிட்டார் முதல்வர் கருணாநிதி. ஏதோ சமத்காரமாக இதைப் பேசிவிட்டதாக முதல்வர் நினைத்துப் பெருமைப்பட்டுக்கொண்டிருக்கையில், "இப்படிக் கூறியதன் மூலம் மக்கட் பேறு இல்லாதவரான மறைந்த முதல்வர் அண்ணாதுரையை மறைமுகமாகக் கேலி செய்வதற்காகவே கருணாநிதி பேசுகிறார் என்று தெரிகிறது. அண்ணாவுக்குக் குழந்தைகள் இல்லை. ஆனால் சமூகத்தின் மேலும் எல்லாக் குழந்தைகள் மேலும் பிரியமாக இருந்தார்" என்று எம். ஜி. ஆர். பதிலைத் திருப்பிவிட்டவுடன் கருணாநிதி மூச்சு விடவில்லை. அரசியல் ரீதியாகப் பேசாமல் தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட வாழ்வை அநாகரிகமாக மேடையில் பேசினால் இப்படித்தான் பதிலுக்கு வாங்கிக்கட்டிக்கொள்ள வேண்டியிருக்கும்.

எம். எல். ஏ. எழுதாத கடிதம்


கிருஷ்ணராஜபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு சவுந்தரபாண்டியன் தமது கார் திக்குப் பணம் கேட்டு ஒருவருக்கு எழுதியதாகச் சட்டசபையில் முதல்வர் படித்த கடிதம் பற்றியும் அக்கடிதம் தம்மால் எழுதப்படவில்லை என்று மேற்படி உறுப்பினர் மறுத்தது பற்றியும் இப்பகுதியில் எழுதியிருந்தோம். இப்போது கடிதம் உறுப்பினர் எழுதியதா இல்லையா என்ற பிரச்னையின்மீது தீர்ப்புக் கூறிய சபாநாயகர் "அந்தக் கடிதம் உறுப்பினர் எழுதியது இல்லை" என்று கூறிவிட்டார். கூடவே, "சவுந்தர பாண்டியன்மீது களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் எழுதாத கடிதத்தை வேண்டும் என்றே அவர் எழுதியதாக முதல்வர் இந்தப் பேரவையில் வாசித்தார் என்று கொள்வதற்கில்லை. ஆகவே இதில் உரிமை மீறல் எதுவும் கிடையாது" என்று கூறிவிட்டார். குறைந்த பட்சம் முதல்வர் வருத்தம் தெரிவித்தாவது இருக்கலாம்.

நடேசன் மறைவு

சென்னை நகரத்து ரசிகப் பெருமக்களுக்கு மயிலை ரசிகரஞ்சனி சபையைத் தெரியாமல் இராது. பிரசித்தியான அந்தச் சபையின் காரியதரிசியாகப் பலவாண்டுகள் பணியாற்றிப் புகழுடன் விளங்கிய [illegible] நடேசன் அண்மையில் காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் திறமை வாய்ந்த சங்கீத சபைச் செயலாளராக மட்டும் அல்லாமல், சிறந்த குழந்தை எழுத்தாளராகவும் விளங்கினார். "ராஜீ" என்ற புனைபெயரில் அவர் கல்கியிலும் இதர பத்திரிகைகளிலும் நீண்ட நெடுங் காலமாக எழுதி வந்திருக்கிறார். குழந்தைகளுக்கான சிறப்புப் பணிக்காக ஜனாதிபதி டாக்டர் ஹுஸேனிடமிருந்து பத்திரம் கிடைக்கப் பெற்றார். அவருக்கு ஈடில்லாத் துயருற்று வருந்தும் அவர் சகோதரர் அவர்களுக்கும், மற்றுமுள்ள குடும்பத்தினருக்கும் நமது அனுதாபங்கள்.



சிறந்த 'டெரீன்' சூட்டிங்குகளின் அறிகுறி, எஸ். குமார் என்னும் பெயருள்ள குறி!



நவீன காலத்துக்கேற்ற மேன்மையான மனம் கவரும் அணிகள்! கைஃபி, மதுரா மற்றும் லக்ஷ்மி விஷ்ணு போன்ற பிரபல நிறுவனங்களின்மூலம் உருவான அழகிய 'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளை வழங்குகின்றனர்: எஸ். குமார்.

நாடெங்குமுள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுடன் நாங்கள் கொண்டுள்ள பரவலான நெருங்கிய தொடர்புகளின் மூலம் கிடைத்துள்ள தகவல்கள், உங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள உதவியிருக்கின்றன. இதனால் உங்கள் விருப்பமே எங்கள் விருப்பம்.

வாழ்க்கையின் வண்ண ஜாலங்களில் ஊறிய உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற துணிகளின் அறிகுறி. அழகு தோய்ந்த ஓர் அனுபவத்தின் மறு பெயர்தான்: எஸ். குமார்.

எஸ்.குமார் ® ரஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளுக்கு ஒரு நம்பகமான பெயர்.

எஸ். குமார், நிரஞ்சன், 99, மெரீன் ட்ரைவ், பம்பாய்-400 002

SISTA'S-SK-3027-TAM


எஸ்ட்ரெலா சக்தி
இந்த சக்தி தரும் ஒலி உங்கள் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.
132
ESTRELA
112
இந்த சக்தி தரும் ஒளியை நீங்கள் கண்ணெதிரே காணலாம்
உங்கள் டிரான்ஸிஸ்டர் மற்றும் டார்ச்சில் எஸ்ட்ரெலா சக்தி காட்டும் அதிசயம் பாரீர்!
எஸ்ட்ரெலா பாட்டரிகளின் சக்தி:
CMEB-2-203



காமாக்ஷியின் கருணை

2

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

சொப்பனம் என்பது படைப்புத் தொழிலைக் காட்டுகிறது. அப்போது நாம் ஸ்ருஷ்டி செய்கிறோம். ஜாக்ரத் என்கிற விழிப்பு நிலையில் நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களையும் ரட்சித்துக் கொள்வதற்காகக் காரியங்களைச் செய்கிறோம். இது விஷ்ணுவின் பரிபாலனம் மாதிரி. ஸுஷுப்தி எனப்படும் தூக்கத்தில் நம் இந்திரியங்கள், மனசு எல்லாம் அழிந்து போனது போல் எந்த வேலையும் செய்யாமல் ஓய்ந்து போய் விடுகின்றன. இது ருத்ரனின் ஸம்ஹாரம் போன்ற நிலை. அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் உண்டு என்பார்கள். அம்பாளுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகியவை ஒவ்வொரு ஜீவனிடத்திலும் இருக்கின்றன. ஆனால் அவள் ஸ்ருஷ்டி — ஸ்திதி — ஸம்ஹாரம் செய்பவள் மட்டும் அல்ல. இவையெல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டிருக்கிற நிலைகளுக்கு நாலாவதான துரீய வஸ்துவே அவள். அந்த நிலை எப்படி இருக்கும்? ஒரு கற்கண்டு கட்டியை உடைத்து எந்தப் பொடியை வாயில் போட்டுக் கொண்டாலும் எப்படித் தித்திக்குமோ அதுபோல் ஆனந்தத்தைத் தவிர வேறெதுவுமே இல்லாத நிலைதான் அந்தத் துரீயம். ஆனந்தானுபவம் என்கிற ரஸமொன்றே இருக்கிற அந்த நிலையை ரஸகனம் என்று சொல்வார்கள்.

ஸ்ருஷ்டியிலும், ஸ்திதியிலும் நிறைவான, நிரந்தரமான ஆனந்தம் இல்லை. ஸம்ஹாரத்தில் எந்த அலைச்சலும் இல்லாத ஆனந்தம் இருந்தாலும் 'ஆனந்தமாக இருக்கிறோம்' என்ற பிரக்ஞை இல்லை — இதுவும் பிரயோஜனமில்லை. துரீயத்தில்தான் இந்த மூன்றுமே அடிபட்டுப் போய் இவற்றுக்கு ஆதாரமான ஒரே சத்தியம் மட்டும் ஆனந்த ஸ்வரூபமாகப் பூரணப் பிரக்ஞையுடன் பிரகாசிக்கிறது. அந்த ஒன்றுதான் மாயையால் இந்த மூன்றாகவும் தெரிந்தது. மாயை போனதும் மூன்றும் போய்விடும்; துரீயமான ஒன்றுமட்டுமே நிற்கும். ஜீவனை இந்த மூன்றின் கட்டிலிருந்து, மாயா பந்தத்திலிருந்து அம்பாள் விடுவித்தால் அந்த ஆனந்தத்தை அநுபவிக்கலாம். இந்த உலக மாயையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும்போதே பரீட்சையில் பாஸ் பண்ணுவது, உத்தியோகத்தில் பிரமோஷன் பெறுவது, வியாதி வந்தால் குணமாவது இதற்கெல்லாம் பிரார்த்தனை செய்கிறோம். நம் பிரார்த்தனை நிறைவேறிவிட்டால் "ஸ்வாமி 'அநுக்கிரகம்' செய்துவிட்டார்" என்று சொல்கிறோம். ஆனால் பராசக்தியின் பஞ்ச கிருத்தியங்களை (ஐந்தொழில்கள்) எடுத்துக்கொள்ளும்போது 'அநுக்கிரகம்' என்றால் அது மாயா லோகத்திலிருந்து நம்மை விடுவித்து நம்முடைய ஆத்ம சொரூபமான மோக்ஷ நிலையில் சேர்ப்பிக்கிறதைத்தான் குறிக்கும். லலிதா ஸஹஸ்ர நாமமும் 'பிரம்மாவாக உலகைப் படைக்கிறாய், விஷ்ணுவாகக் காக்கிறாய், ருத்திரனாகச் ஸம்ஹரிக்கிறாய், மஹேச்வர சக்தியாக மாயையை ஆளுகிறாய், சதாசிவ ஸ்வரூபமாக அநுக்கிரகத்தைச் செய்கிறாய்' என்று ஐந் தொழில்களைச் சொல்கிறது.

ஜீவன் விஷயத்தில் கனவு, விழிப்பு, உறக்கம் இவையே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்றேன். இங்கேயும் துரீயம் இருக்கிறது. குடை ராட்டினத்தில் சுற்றுகிற மாதிரி விழிப்பிலும், கனவிலும், தூக்கத்திலும், மாயைக்குள் சுற்றிச் சுற்றி வருகிறோம். சிலர் இந்தக் குடை ராட்டினத்தில் யானை மேல் இருக்கிறோம், சிலர் குதிரை மேல் இருக்கிறோம், சிலர் சிங்கத்தின் மேல் இருக்கிறோம். ஆனால் எதுவானாலும் இந்தக் குடை ராட்டின வட்டத்தை விட்டு அப்பால் சவாரி செய்ய முடியாது — மாயைக்குள்ளேயே நம் பெருமை, சிறுமை எல்லாம் சுழன்று வருகின்றன. அதைக் கடந்து போக முடியவில்லை. சுற்றி வரும்போது எத்தனை சந்தோஷமாக இருந்தாலும் அது பிறகு அலுத்துத்தான் போகிறது. இந்தச் சலிப்புத் தீரத் தூக்கத்தை ஒரு மருந்தாகத் தந்து ஓய்வு கொடுக்கிறாள் அம்பிகை. இதுவும் மாயை வட்டத்துக்குட்பட்டதுதான். குடை ராட்டினப் பொம்மை மீதே தலைசுற்றி மயங்கிச் சாய்கிற மாதிரிதான் தூக்கம் — ராட்டினத்தை விட்டு இப்போதும் இறங்கின பாடாக இல்லை. இந்தத் தூக்கத்துக்கு அப்பால்தான் மூன்று நிலைகளுக்கும் ஆதாரமான, துரீயம் இருக்கிறது. நாம் தூங்குகிறபோதும் எதுவோ ஒன்று நமக்குள் தூங்காமல் விழித்துக் கொண்டு உயிரை இயக்குவிக்கிறது அல்லவா? அதுதான் துரீயம். குடை ராட்டின வட்டத்துக்கு அப்பாற்பட்ட சத்தியம் அதுவே. அம்பிகையை மாயை, மாயை என்றே பொதுவாகச் சொல்வார்கள். மூகர் காமாட்சியிடம், "ஹே மகா மாயையே! உன் துளிர் போல் சிவந்த பாதங்களில் லயித்துப் போகிறேன்" என்கிறார். மாயையில் லயிப்பதாகச் சொன்னாலும், மாயைக்கு அதீதமான துரீயானந்தத்தில் இரண்டறக் கலப்பதாகத்தான் அர்த்தம். மாயையாகிற காமாக்ஷிதான் அதை நீக்குகிற அநுக்கிரக மூர்த்தியும் ஆவாள்.

(அடுத்த இதழில்: காமாக்ஷியின் பெருமை)

மக்கள் நம்பிக்கை என்னும் இனிதான சுமையை மகிழ்வுடன் ஏற்று செயல்படுவதே எங்கள் குறிக்கோள்.



60 ஆண்டு காலமாக உழைத்து உழைத்து நாங்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருக்கிறோம். எனவேதான் சிறிய பார்சல்கள் முதல் பெரிய பார்சல்கள் வரை நாங்கள் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.


இந்த நம்பிக்கைக்கு அடிப்படை இவைதான்:

- எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்த மானவையே. எனவே காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- அதிக அளவில் பார்சல்களை ஏற்றிச் செல்ல நிறைய டிரெய்லர்களும் எங்களிடம் உண்டு. எனவே காத்திருக்கத் தேவையில்லை.
- லாரிகளில் பழுதேற்பட்டால் வழித் தடங்களில் அமைந்துள்ள எங்கள் பட்டறைகள் உடனடியாகச் சீர் செய்கின்றன. எனவே தாமதம் தவிர்க்கப்படுகிறது.
- ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடையான பார்சல் சர்வீஸ் இருப்பதனால் நேரம் மிச்சப்படுகிறது. பார்சல்கள் இறக்கி ஏற்றப்படுவது தவிர்க்கப்படுவதால் சேதமும் விளைவதில்லை.
- தென்னகத்தின் பெரு நகரங்களுக்கிடையே மின்னல்வேக சர்வீஸ்களும் நடத்துகிறோம். எனவே உங்கள் பொன்னான நேரம் மிச்சப்படுகிறது.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

TVS உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

TDS 58 1954 TMB



சிவகாமியின் சபதம்

முப்பத்தொன்பதாம் அத்தியாயம்

கமலியின் மனோரதம்

விவரிக்க முடியாத இன்பத்தையும் வேதனையையும் ஒருங்கே தந்த மேற் கூறிய நிழல் நினைவுகளைப் பொறுக்க முடியாமல், சிவகாமி சாளர மாடத்தி லிருந்து எழுந்தாள். அறையின் பின் புறக் கதவை ஓசைப்படாமல் மெது வாய்த் திறந்து கொண்டு பூந்தோட் டத்துக்குள் பிரவேசித்தாள். அப் போது இரவில் மூன்றும் ஜாமம் நடந்து கொண்டிருந்தது. பிறைச் சந்திரன் விரித்த இளம் நிலவின் மோகன ஒளியில் அந்தப் பூந்தோட்டம் கனவு உலகத்தில் காணும் ஒரு காட்சி போல் தென் பட்டது.

பூந்தோட்டத்தில் உலாவி வர எண் ணிப் புறப்பட்ட சிவகாமி, வீட்டுச் சுவரோரமாகச் சற்றுத் தூரம் சென்ற போது, பேச்சுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். கமலியும் கண்ணபிரானும் தான் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்த அறையின் பின்புறப் பலகணியின் வழியாக அவர்களுடைய பேச்சுத் தெளிவாகக் கேட்டது. அந்தப் பக்கம் போகாமல் திரும்பி விட வேண்டுமென்று எண்ணிய சிவகாமியின் செவியில் ''மாமல்லர்'', ''குமார சக்கரவர்த்தி'' என்ற வார்த் தைகள் விழுந்தன. பிறகு அவளுடைய கால்கள் திரும்பிச் செல்ல மறுத்து விட் டன. பலகணியின் அருகில் சுவர் ஓர மாக நின்று பேசுவதைக் கேட்டாள்.

''மாமல்லருக்குப் பெண் கொடுக் கிறேன் என்று பாண்டிய மன்னர்





அமரர் கல்கி

தூது அனுப்பியதில் என்ன ஆச்சரியம்? பூலோகத்தில் உள்ள ராஜா ராஜாக்கள் எல்லாம் 'நான் முந்தி, நீ முந்தி' என்று அவருக்குப் பெண் கொடுக்கப் போட்டியிட மாட்டார்களா?'' என்றாள் கமலி.

''மாமல்லருக்குச் சீக்கிரத்தில் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று நமது சக்கரவர்த்தி தேசத்து ராஜாக்களுக்குத் திருமணத்தூது அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார். அதற்குள்ளே இந்த யுத்தம் வந்து விட்டதால் அது தடைப்பட்டுப் போயிற்று. இப்போது பாண்டிய ராஜாவே தூது அனுப்பி விருப்பதில் மகாராணிக்கு அசாத்திய சந்தோஷம்!'' என்றான் கண்ணபிரான்.

''பெண் பிள்ளைகளிடம் இரகசியம் சொல்லக் கூடாது என்று உனக்குத் தெரியாதா கண்ணா?'' என்றாள் கமலி.

''ஓஹோ! நீ பெண் பிள்ளையா? மறந்து போய் விட்டேன்!'' என்று கண்ணன் நகைத்துக் கொண்டே கூறினான்.

''ஆமாம். நீ ஆண்பிள்ளை என்பதையும் மறந்து போய் விடுவாய்! சீக்கிரத்தில் யுத்தம் வருகிறதல்லவா?''

''யுத்தம் வரட்டும்! அப்போது தெரிகிறது, 'யார் ஆண் பிள்ளை யார் பெண் பிள்ளை' யென்று! நீ என் காலில் விழுந்து 'கண்ணா! யுத்தத்துக்குப் போகாதே!' என்று கதறப் போகிறாய். நான் உன்னை உதறித் தள்ளிவிட்டுப் போகப் போகிறேன்....''



''சரி; அப்புறம் என்ன நடந்தது?'' என்று கமலி கேட்டாள்.

''அரண்மனையில் மாமல்லரை விட்டேன். உடனே, தாயாருக்கும் பிள்ளைக்கும் சண்டை ஆரம்பமாகிவிட்டது...!''

''சண்டையா! எதற்காக?''

''குமார சக்கரவர்த்தியிடம் 'கல்யாணம்' என்று யாராவது சொன்னாலே அவருக்குப் பிரமாதமான கோபம் வந்து விடுகிறது. 'இதற்குத்தானா இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்? போர்க்களத்திலிருந்துதான் ஏதோ செய்தி வந்திருக்கிறதாக்கும் என்று நினைத்தல்லவா ஓடி வந்தேன்?' என்று அவர் மகாராணியிடம் கோபமாகப் பேசினார்...! கமலி! உனக்கு ஓர் இரகசியம் சொல்லட்டுமா? மிகவும் முக்கியமான இரகசியம். கேட்டால் பிரமித்துப்போவாய்!'' என்றான் கண்ணன்.

''அப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனத்தில்? யுத்தம் கிட்டி வரும்போது நீ போகா விட்டால் நானே உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள மாட்டேனா?... கல்யாணம் ஆன பிறகு நீ இப்படிப் பயங்கொள்ளியாகப் போனதைப் பார்த்து விட்டுத்தான் குமார சக்கரவர்த்தி 'கல்யாணம்' என்றாலே எரிந்து விழுகிறார் போலிருக்கிறது!''

'' இப்படித்தானே நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்? யுத்தம் வந்திருக்கிறபடியால் குமார சக்கரவர்த்தி கல்யாணம் வேண்டாம் என்கிறார் என்றுதான் எல்லோருமே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிசகு, கமலி, பிசகு!''

''எது பிசகு கண்ணா?''


''எல்லாரும் நினைத்துக் கொண்டிருப்பது பிசகு. மாமல்லர் கல்யாணப்

பேச்சை வெறுப்பதற்கு வேறு காரணம் இருக்கிறது: அது பெரிய இரகசியம். அதிலும் உன் தங்கச்சி சிவகாமியைப் புற்றிய இரகசியம் கமலி!''

''என்ன? என்ன? என் தங்கச்சியைப் பற்றி எனக்குத் தெரியாத இரகசியம் என்ன இருக்கிறது? ஏதாவது இசை கேடாகச் சொன்னுயோ, பார்த்துக் கொள்!''

''இசைகேடு ஒன்றுமில்லே; பெருமை யான விஷயம்தான்!— சொன்னுல் எனக்கு என்ன தருகிருய்?''

'' சொல்லிவிட்டுக் கேள்! பொருளைப் பார்த்து விட்டல்லவா விலையைத் தீர்மானிக்க வேண்டும்?'' என்ருள் கமலி.



''அப்புறம் ஏமாற்றக் கூடாது, தெரியுமா? பல்லவ சாம்ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி, வீரத்தில் அர்ஜுனனையும், அழகில் மன்மதனையும், ரதம் ஓட்டுவதில் கண்ணபிரானையும் ஒத்தவரான மாமல்ல நரசிம்மர் உன்னுடைய தங்கச்சி சிவகாமியின் மேல் காதல் கொண்டிருக்கிருர், கமலி!''

''ஆ!'' என்ற சத்தம் மட்டும்தான் கமலியின் வாயிலிருந்து வந்தது. அவள் ஆச்சரியத்திருல் திகைத்து விட்டாள். வெளியி லிருந்து கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் நெஞ்சில் அந்த 'ஆ!' சத்தமானது கூரிய அம்பைப்

போல் புகுந்தது. தன்னிடம் இவ்வளவு ஆசையும் நம்பிக்கையும் வைத்துள்ள அருமைத் தோழியிடம் தனது அந்தரங்கத்தை வெளியிடாமல் இத்தனை நாளும் ஒளித்து வைத்திருந்தது பற்றி அவள் வெட்கினாள். அறைக்குள்ளே சம்பாஷணை மேலும் தொடர்ந்து நடந்தது.

''கமலி! நான் சொன்ன செய்தி உனக்கு அதிசயமாயிருக்கிறதல்லவா?'' என்று கண்ணபிரான் கேட்டான்.

''அதிசயம் என்ன? நம்முடைய குமார சக்கரவர்த்தி புத்திசாலி என்றுதான் அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேனே? அதனால்தான் அவருக்கு என் தங்கச்சியின் மேல் மனம் சென்றது'' என்று கமலி சமத்காரமாக விடை சொன்னாள்.

''ஓஹோ! அப்படியா? நீயும் உன் தங்கையும் சேர்ந்து பேசிக் கொண்டுதான் இந்த வேலை செய்தீர்கள்



போலிருக்கிறது! உன்னுடைய வலையில் என்னை நீ போட்டுக் கொண்டாய்! உன் தங்கச்சி மாமல்லரையே வலை போட்டுப் பிடித்து விட்டாள்!''

''என்ன சொன்னாய்?'' என்று கமலி கம்பீரமாகக் கேட்டுவிட்டு மேலும் சொல்லம்புகளைப் போட்டாள்: ''நானா உன்னைத் தேடி வந்து என்னுடைய வலையில் போட்டுக் கொண்டேன்? நானா வீட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உன்னைத் தொடர்ந்து வந்து கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, 'கண்ணே! பெண்ணே! நீ கருணை செய்யாவிட்டால் நான் உயிரை விடுவேன்!' என்று கதறினேன்? நானா, 'என்னைக் கல்யாணம் செய்துகொள்' என்று கெஞ்சினேன்?...''

''இல்லை, கமலி, இல்லை. நீ உன்னுடைய கண்ணாகிற வலையை வெறுமனே விளையாட்டுக்காக விரித்தாய்! அதிலே நானாக ஓடிவந்துதான் அகப்பட்டுக் கொண்டேன்!''

''நம்முடைய கதை இருக்கட்டும். மாமல்லருக்கும் என் தங்கைக்கும் நேசம் என்கிற விஷயம் உனக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லு!'' என்றாள் கமலி.

''ஆ! பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா, என்ன? கள்ளனுக்குத் தெரியாதா கள்ளனின் சமாசாரம்? நான் உன்னை உன் தகப்பனார் வீட்டில் அந்தக் காலத்தில் என்னமாய்ப் பார்த்தேன்! ஞாபகம் இருக்கிறதா? அம்மாதிரியே உன் தங்கையை இப்போது மாமல்லர் ஆர்வத்தோடு பார்க்கிறார்!''

''இவ்வளவுதானா?''

''இன்னும் என்ன வேண்டும்? நாவுக்கரசர் மடத்தில் அபிநயம் பிடித்தானதும் உன் தங்கை மூர்ச்சையாகி விழுந்து விட்டாள் என்று சொன்னேனல்லவா? உடனே மாமல்லர் ஓடிவந்து சிவகாமியைத் தூக்கி ஆயனர் மடியின்மீது வைத்தார். கமலி! அப்போது அவருடைய கைகளும் தேகமும் எப்படிப் பதறின தெரியுமா? இதுவரையில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது. இன்றைக்குத்தான் சர்வ நிச்சயமாயிற்று.''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் தேகமெல்லாம் சிலிர்த்தது. விம்மலுடன் அழுகை வரும்போலிருந்தது. சமாளித்துக் கொண்டு மேலும் நடந்த சம்பாஷணையைக் கேட்டாள்.

''இவ்வளவு கூர்மையாகக் கவனித்தாயே; நீ ரொம்பப் புத்திசாலிதான்; மாமல்லரும் பாக்கியசாலிதான்!'' என்றாள் கமலி.

''மாமல்லர் பாக்கியசாலி என்றா சொல்கிறாய்? இதனால் ஏற்படப் போகிற சங்கடங்களையெல்லாம் நினைத்தால்...''

''சங்கடம் என்ன வந்தது?''

''குமார சக்கரவர்த்தியின் கல்யாணம் என்றால், நம்முடைய கல்யாணத்தைப் போல் என்று நினைத்துக் கொண்டாயா? எத்தனை எத்தனையோ யோசனைகள் செய்வார்கள்...''

''கண்ணா! என் தங்கையை மட்டும் சாமானியமான பெண் என்று நினைத்தாயா? தமயந்தியை மணந்து கொள்ளத் தேவலோகத்திலிருந்து தேவர்கள்




குடும்பங்களின் பேராதரவு பெற்றது
லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட் டீ
நல்லதோர் தேயிலேயிடம்
நீங்கள் கோரும்
அனைத்தையும் அளிக்கிறது
LIPTON'S
GOLDEN DUST TEA
பாக்கிங் செய்த தேயிலே மட்டுமே
புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது
LHGC-12-72 TAM

வந்தது போல் சிவகாமியைத் தேடிக் கொண்டு வரமாட்டார்களா? ஏதோ தமயந்தி மனம் வைத்து நள மகாராஜனுக்கு மாலையிட்டாள்!...''

''ஆனால் தமயந்தி அரண்மனையில் பிறந்த ராஜகுமாரியாச்சே, கமலி!''

''என் தங்கை ஆயிரம் ராஜகுமாரிகளுக்கு இணையானவள், கண்ணா! நீ வேணுமானால் பார்! என்னுடைய மனோரதம் ஒரு நாள் கட்டாயம் நிறைவேறப் போகிறது!''

''அது என்ன மனோரதம், கமலி!''

''இந்த யுத்தமெல்லாம் முடிந்தபிறகு மாமல்லருக்கு மகுடாபிஷேகம் நடக்கப் போகிறது. தங்க ரதத்தில், நவரத்ன சிங்காசனத்தில் அமர்ந்து நரசிம்ம சக்கரவர்த்தி இராஜ வீதிகளில் பவனி வருகிறார். அவருக்குப் பக்கத்தில், தேவேந்திரனுக்கு அருகில் இந்திராணியைப் போல் என் தங்கை சிவகாமி அமர்ந்திருக்கிறாள். தங்க ரதத்தில் முன் தட்டில் நீ 'ஜம்' என்று உட்கார்ந்து ரதத்தை ஓட்டிக் கொண்டு வருகிறாய். நான் அரண்மனைக் கோபுர வாசலில் மேல் மாடத்தில் நின்று கொண்டிருக்கிறேன். ரதம் அரண்மனை வாசலில் வந்து நின்றதும் கூடை கூடையாக மல்லிகை மலர்களையும் சண்பகப் பூக்களையும் அவர்கள் மேல் கொட்டுகிறேன். நடுவில் உன் தலையிலும் ஒரு கூடை பூவைக் கவிழ்க்கிறேன் — இப்படி நடக்க வேண்டும் என்பதுதான் என் மனோரதம் கண்ணா!''

''கமலி, உன் மனோரதம் நிறைவேறினால் எனக்கும் அளவில்லாத சந்தோஷம்தான்'' என்றான் கண்ணன்.

சிவகாமி திரும்பித் தன்னுடைய அறைக்குள்ளே சென்று படுக்கையில் படுத்துக் கொண்டாள். இருதயத்தின் அடிவாரத்திலிருந்து பொங்கி வந்த விம்மலையும் அழுகையையும் ஆன மட்டும் முயன்றும் அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

இரவு நாலாவது ஜாமத்தில் விழிப்புமில்லாமல், நித்திரையும் இல்லாமல் அரைத் தூக்க நிலையில் சிவகாமி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தபோது, முன்னர் அவள் மனக் கண் முன் தோன்றிய நிழல் தோற்றங்கள் உருவம் எடுக்க ஆரம்பித்தன.

ஒரு செண்பக மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள் உட்கார்ந்து ஒன்றோடொன்று கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கின்றன. திடீரென்று சுற்றியிருந்த மரங்களெல்லாம் தீப்பட்டு எரியத் தொடங்குகின்றன. ஆண் புறாவானது பெண் புறாவைப் பார்த்து, ''நீ இங்கேயே இரு; நான் திரும்பி வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்'' என்று சொல்லி விட்டுப் பறந்து செல்கிறது. அது போன வழியையே பெண் புறா பார்த்துக் கொண்டிருக்கிறது. தீயோ நாலு புறமும் வந்து கொண்டிருக்கிறது. ஆண் புறா திரும்பி வருமா? வந்து பெண் புறாவைத் தப்புவிக்குமா?— இதை அறிய முடியாதபடி பெண் புறாவை நாற்புறமும் புகை வந்து சூழ்ந்து விடுகிறது. அந்த நேரத்தில் அவ்விதம் புகையினால் சூழப்பட்டிருப்பது பெண் புறா அல்ல, தானே என்று சிவகாமி பிரமையுறுகிறாள்.

கற்பனை உலகக் காட்சி மாறுகிறது. மல்லிகைத் தோட்டத்தில் ஆணும் பெண்ணுமான ஒரு கலைமானும் ஒரு புள்ளி மானும் துள்ளி விளையாடிக்கொண்



டிருக்கின்றன. விளையாட்டின் இடையே புள்ளி மானானது மல்லிகைப் புதருக்குள் அருகில் மறைந்து நிற்கிறது. மல்லிகைப் புதரில் பூத்துச் சிரித்திருந்த வெள்ளி மலர்களுக்கும், புள்ளி மானின் மீது அள்ளித் தெளித்திருந்த வெள்ளிப் பொட்டுகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் கலைமான் புள்ளி மானைத் தாண்டிக் கொண்டு அப்பால் போகிறது. அதைக் கண்டு புள்ளி மான் சிரிக்கிறது. இப்படி அவை விளையாடிக் கொண்டிருக்கையில் ஒரு தடவை பெண் மான் ஒளிந்து கொண்டிருந்தபோது சற்றுத் தூரத்தில் ஒரு மல்லிகைப் புதரில் இரண்டு பிரகாசமான நட்சத்திரங்கள் ஜொலிப்பதைக் கண்டு அதிசயித்தது. பிறகு, அவை நட்சத்திரங்கள் அல்ல, அனல்

கட்டிகள் என்று தோன்றியது. பின்னர் அந்த இரண்டு அனல்கட்டிகளும் ஒரு பெரிய புலியின் இரண்டு கண்கள்தான் என்று தெரியவே, பெண் மானின் சகல நாடியும் ஒடுங்கி விட்டது. கலைமானைக் கூவி அழைக்க அது முயன்றது. ஆனால், அதன் தொண்டையிலிருந்து சத்தமே உண்டாகவில்லை.

மேலே என்ன ஆயிற்று? புள்ளிமான் தப்பித்துச் சென்றதா? கலைமானுடன் சேர்ந்ததா? — அதுதான் தெரியவில்லை. அத்தகைய பயங்கர அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்த பெண் மான் உண்மையில் மான் அல்ல — தானே அந்த மான் என்று மட்டும் சிவகாமிக்கு அந்தக் கணத்தில் தெரிய வந்தது.

நாற்பதாம் அத்தியாயம்

கட்டாயப் பிரயாணம்

மகேந்திர விடுதியிலிருந்து அதிகாலையில் கிளம்பிய பரஞ்சோதி அன்று பகலெல்லாம் பிரயாணம் செய்து, வட பெண்ணையுடன் பாபாக்கினி நதி கலக்கும் இடத்திலுள்ள புத்த விஹாரத்தைச் சூரியாஸ்தமன நேரத்தில் அடைந்தான்.

விஹாரத்தின் வாசலில் புத்த பிக்ஷு ஒருவர் நின்று கொண்டிருந்தார். மாலை நிறத்து மஞ்சள் வெயிலில் பிக்ஷுவின் காவி உடையானது தங்க நிறமாகப் பிரகாசித்தது. பரஞ்சோதி குதிரையிலிருந்து இறங்கிப் பிக்ஷுவை அணுகியதும், அவர் இவனை என்னவோ கேட்டார். அவர் பேசிய பாஷை பரஞ்சோதிக்குப் புரியவில்லை. ஆனாலும், தான் யார் என்பதை விசாரிக்கிறார் என்று ஊகித்துக் கொண்டு தமிழிலேயே, தான் நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவதாகவும், தன்னை இவ்விடம் தங்கி வழி கேட்டுக் கொண்டு போகும்படி நாகநந்தியடிகள் பணித்தார் என்றும் கூறினான்.



நாகநந்தி என்று கேட்டதும் அந்தப் பிக்ஷுவின் முகத்தில் மாறுதல் காணப்பட்டது. சமிக்ஞையினால், "கொஞ்சம் இங்கேயே இரு!" என்று பரஞ்சோதிக்குச் சொல்லி விட்டு, பிக்ஷு உள்ளே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பி வந்து பரஞ்சோதியையும் விஹாரத்துக்குள் அழைத்துச் சென்றார். அந்தப் பௌத்த விஹாரம் காஞ்சியில் பார்த்த இராஜவிஹாரத்தைப் போலக் கல், மரம், சுண்ணாம்பினால் கட்டப்பட்டதல்லவென்பதையும், குன்றிலே குடைந்து அமைக்கப்பட்டதென்பதையும் பரஞ்சோதி கவனித்தான். காஞ்சி இராஜ விஹாரத்தைப் போல் இது அவ்வளவு பெரிதாக இல்லை. அவ்வளவு விலையுயர்ந்த பூஜாத் திரவியங்களும் இங்கே காணப்படவில்லை. ஆனால், விஹாரத்தின் அமைப்பு முறை அதே மாதிரி இருந்தது. நடுவில் பிக்ஷுக்கள் கூடிப் பிரார்த்தனையும் தியானமும் செய்வதற்குரிய சைத்யமும், அதன் பின் பக்கத்துப் பாறைச் சுவரில் பிரம்மாண்டமான புத்தர் சிலையும் இருந்தன. அந்தப் புத்தர் சிலையும், சிலைக்கு மேலே கவிந்திருந்த போதி விருட்சமும் புத்தர் மீது புஷ்ப மாரி பொழிந்து கொண்டிருந்த கந்தர்வ வடிவங்களும்—எல்லாம் பாறையில் குடைந்து அமைக்கப்பட்டிருந்தன. அலங்கார தீபங்கள் வரிசை வரிசையாக ஒளிர்ந்தன. புத்த பகவானுக்கு எதிரில் பலவித வண்ண மலர்கள் தனித் தனிக் கும்பலாகக் குவிக்கப்பட்டுக் கண்ணைக் கவரும்படி காட்சியளித்தன. புஷ்பங்களின் நறுமணத்துடன் அகிற் புகையின் வாசனையும் சேர்ந்து, சிந்தையை ஒருமுகப்படுத்த உதவி செய்தது.

சைத்யத்துக்கு இரு புறத்திலும் புத்த பிக்ஷுக்கள் தங்குவதற்கும் மாணாக்கர்கள் கல்வி பயில்வதற்கும் உரிய குகை அறைகள் குடையப் பட்டிருந்

தன. ஒரு பக்கத்தின் கோடியில் மச்சுப் படிகள் போன்ற படிக்கட்டுகள் காணப் பட்டன. அந்தப் படிகளின் வழியாகப் பரஞ்சோதியைப் பிக்ஷு அழைத்துச் சென்றார். கீழேயுள்ள அறைகளைப் போல் மேலேயும் பாறையில் குடையப் பட்ட அறைகள் காணப்பட்டன. அவற் றில் விசாலமான அறை ஒன்றில் பத்மா சனமிட்டு அமர்ந்திருந்த பெரிய புத்த பிக்ஷுவிடம் பரஞ்சோதி அழைத்துச் சென்று விடப்பட்டான்.

அந்த விஹாரத்தின் தலைமைப் பிக்ஷு அவர்தான் என்பதைப் பரஞ்சோதி ஊகித்துக் கொண்டு அவரைக் கை கூப்பி வணங்கினான். ''புத்தம் சரணம் கச்சாமி'', ''தர்மம் சரணம் கச்சாமி'', ''சங்கம் சரணம் கச்சாமி'' என்று தலைமைப் பிக்ஷு கூறி மூன்று முறை புத்த பகவானுக்கு வணக்கம் செலுத்தி



விட்டுப் பரஞ்சோதியைப் பார்த்துத் தமிழ்ப் பாஷையில், ''குழந்தாய், நீ யார்? என்ன காரியமாக வந்தாய்? யார் உன்னை அனுப்பினார்கள்?'' என்று கேட்டார்.

பரஞ்சோதி நாகநந்தியடிகள் தன்னை ஓலையுடன் அனுப்பி வைத்தது பற்றி விவரமாகக் கூறினான்.

''நாகநந்தி கொடுத்து அனுப்பிய ஓலை எங்கே? அந்த ஓலையை நான் பார்க்கலாமா?'' என்று பிக்ஷு கேட்டார்.

''மன்னிக்க வேண்டும். ஓலையைச் சத்யாச்ரயரைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாதென்று நாகநந்தியடிகளின் கட்டளை'' என்றான் பரஞ்சோதி.

சத்யாச்ரயர் என்ற பெயரைக் கேட்டதும் பிக்ஷுவின் முகத்தில் ஒரு மர்மமான புன்னகை தோன்றியது. அதைப் பரஞ்சோதி கவனித்தானாயினும் அதன் பொருளை அறிய முடியவில்லை.

''நாகநந்தியடிகள் என்ன கட்டளையிட்டாரோ, அவ்விதமே செய். இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள். ஸ்ரீபர்வதத்துக்குப் போகும் வழியெல்லாம் இப்போது அபாயம் நிறைந்ததாயிருக்கிறது. இன்று ராத்திரியே அவ்விடத்துக்குப் போகும் வீரர்கள் சிலர் இங்கே வரக்கூடும். அவர்களுடன் சேர்த்து அனுப்பி வைக்கிறேன். அவர்கள் உனக்கு வழிகாட்டுவதுடன் பத்திரமாகவும் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்!'' என்று ஆசார்ய பிக்ஷு கூறி, இன்னொரு பிக்ஷுவைப் பார்த்துச் சமிக்ஞை செய்தார்.

அவர் பரஞ்சோதியை அங்கிருந்து அழைத்துச் சென்று உணவருந்தச் செய்த பிறகு, கீழே ஓர் அறையில் அவன் படுத்துக் கொள்வதற்கு இடம் காட்டினார். சென்ற இரவில் நல்ல தூக்கம் இல்லாமையாலும் நெடுந் தூரப் பிரயாணத்தினாலும் களைப்புற் றிருந்த பரஞ்சோதி இன்று படுத்தவுடன் நிம்மதியாகத் தூங்கலானான்.

• • •

தோளைப் பிடித்து யாரோ குலுக்குவதறிந்து பரஞ்சோதி திடுக்கிட்டுக் கண் விழித்தான். முதல் நாள் அவனை மடத்துக்குள் அழைத்து வந்த பிக்ஷுதான் அவனை எழுப்பிக் கொண்டிருந்தார். பக்கத்தில் பெரிய பிக்ஷுவும் நின்றார்.

''தம்பி! நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவோர் புறப்படுகிறார்கள்; நீயும் கிளம்பு!'' என்றார் பெரிய பிக்ஷு.

பரஞ்சோதி அவசரமாக எழுந்து தலைமாட்டில் வைத்திருந்த ஓலைக் குழாயை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். பிக்ஷுக்களைப் பின்தொடர்ந்து மடத்தின் வாசலுக்கு வந்தான்.


அங்கே அவனுடைய குதிரையைத் தவிர இன்னும் ஆறு குதிரைகளும் ஒவ்வொரு குதிரைக்கும் அருகில் ஆஜானுபாகுவான வீரன் ஒருவனும் நிற்பதைக் கீழ் வானத்தில் தோன்றிய பிறை மதியின் மங்கிய நிலவொளியில் பரஞ்சோதி கண்டான்.

''இந்த வீரர்கள் அவசர காரியமாக ஸ்ரீபர்வதத்துக்குப் போகிறார்கள். இவர்களுடன் போனால் குறுக்கு வழியாக வெகு சீக்கிரம் போய்ச் சேர்ந்துவிடலாம்'' என்று பெரிய பிக்ஷு கூறினார்.

மனத்தில் காரணம் தெரியாத தயக்கத்துடன் பரஞ்சோதி குதிரை மீது ஏறினான். குதிரைகள் வட பெண்ணை நதிக் கரையோடு மேற்குத் திசையை நோக்கி விரைந்து சென்றன. (தொடரும்)


OBM-1898-TM
பால் குடிக்க மறுக்கும் பிள்ளைக்கு
பல்சுவையுள்ள கஸ்டார்டு தாருங்கள்.
அது அள்ளிப் பருகுவதைப் பாருங்கள்!
சு..சு..சு..சுவையோ சுவை
உங்கள் பிள்ளை பால் குடிக்க மறுக்கிறதா? கவலைப்படாதீர்கள். அதற்கு இன்சுவையுள்ள ஊட்டமிக்க கஸ்டர்டு தாருங்கள். அது மகிழ்வுடன் சாப்பிடும். அதைத் தயாரிக்கும் முறை மிகவும் எளிது. 4 தேக்கரண்டியளவு பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுதுபோல் ஆக்குங்கள். பிறகு ஒரு கோப்பை பாலை சூடாக்கி, அதில் இந்த விழுதைக் கரையுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். பின்னர் நெய்தடவிய தட்டில் ஊற்றுங்கள். அது குளிர்ந்து படியட்டும். நாள்தோறும் உங்கள் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் சுவையான வழி இது!
பழ ஸாலடைக் கிண்ணத்தில் எடுத்து, கஸ்டர்டால் அலங்கரியுங்கள். இப்போது கேக்கின்மீது கஸ்டர்டு தடவி, சுவையைக் கூட்டுங்கள். ஜெல்லியின் மீது கஸ்டர்டு தடவிப் பாருங்கள். எல்லாம் சுவைமயம்! இத்தகைய கஸ்டர்டு தயாரிக்க, 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுது போல் ஆக்குங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்குங்கள். அதில் கஸ்டர்டு பவுடர் விழுதைக் கரைத்து, கொதிக்கும் வரை கிளறுங்கள். அதை சூடாகவோ, குளிர்ந்ததாகவோ உங்கள் பிள்ளைக்குத் தாருங்கள். சுவையோ சுவை!
ஒரு விசேஷ முறை: நீங்கள் வீட்டிலேயே ஐஸ்க்ரீம், ஃபலூதா, பாயசம், ரபடி தயாரித்தால், பாலைக் கெட்டியாக்க பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் சேர்க்கவும். ஒவ்வொரு தித்திப்பும் இரட்டிப்பு சுவை தரும்! இதற்கு வெரைட்டி கஸ்டர்டு பவுடரை உபயோகியுங்கள். வனிலா, ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ரஸப்பரி, ஆகிய 6 கனிச்சுவையுள்ள கஸ்டர்டு பவுடர்கள் உள்ளன.
6 இனிமையான சுவைகள் கொண்ட வெரைட்டி கஸ்டர்டு பவுடர் பாக்கெட்டுகள் கிடைக்கின்றன.
முட்டை கலவாதது.
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப் படுத்தப்பட்டதால், கஸ்டர்டுபவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன். ஒரு டின் கைவசம் இருக்கட்டும்....எப்போதுமே!
கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரை. லிட்.
பம்பாய்-400 001.
பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்

பத்திரிகைக் காகிதப் பற்றாக்குறை



அமெரிக்காவில் ஒரு காகித ஆலை

இந்தியா போன்ற வளரும் நாடுகளிலே வர வரக் கூடுதலாகப் பத்திரிகைகளுக்கு, '' நியூஸ் பிரின்ட் '' (பத்திரிகைக் காகிதம்) தேவைப்படுகிறது. ஐரோப்பா, அமெரிக்கா போன்று செழிப்பான பொருளாதார வசதி உள்ள இடங்களில் அன்றாடப் பண்டங்களை விளம்பரப்படுத்த வர வர அதிகக் காகிதம் தேவையாகிறது.

பத்திரிகைக் காகித உற்பத்தியில் உலகத்திலேயே முதலாவதாக உள்ளது கானடா. அது 1963—ல் ஆசியாவுக்கு 66,000 டன் ஏற்றுமதி செய்தது; 1967ல் 1,56,000 டன்னும் 1971ல் 2,83,000 டன்னும், 1972ல் 3,30,000 டன்னும் அனுப்பியது. தேவை எப்படிப் பெருகியுள்ளது பாருங்கள். பத்திரிகைக் காகித உற்பத்தியில் கானடாவுக்கு அடுத்தபடியாக இருப்பது அமெரிக்காவாகும். ஆனால் அமெரிக்காவின் உற்பத்தி அதன் தேவைக்கே பற்றாது. கானடாவின் உற்பத்தியில் நூற்றுக்கு அறுபத்து நான்கு பங்கு அமெரிக்காவுக்குப் போகிறது!

அமெரிக்கப் பொருளாதாரம் 1970—71ல் கீழ் இறங்கியது; விளம்பரங்கள் குறைந்தன; ஆகவே அவற்றுக்கான காகிதச் செலவு குறைந்தது; பத்திரிகைகளின் அளவு சுருங்கிற்று. அமெரிக்காவிலும் கானடாவிலும் சில காகித ஆலைகள் மூடப்பட்டன. ஆனால் 1972—73ல் அமெரிக்கப் பொருளாதாரம் மீண்டும் செழிப்படையவே, விளம்பரத் தொழில் விரைந்து பெருகிற்று. காகிதத்துக்குத் தேவை கூடிற்று.

தேவை பெருகியுள்ளதற்கு ஏற்பக் காகித உற்பத்தியை உடனடியாகப் பெருக்க முடியாது. சென்ற குளிர் காலத்தில் கானடாவில் கடும் பனிப் புயல்கள் வீசின; தொழிலாளர் பற்றாக்குறை வேறு. அதனால் வேண்டிய அளவு மரம் கிடைக்கவில்லை; மரக் கூழிலிருந்துதானே பத்திரிகைக் காகிதம் செய்கிறார்கள். அமெரிக்காவிலும் குளிர்காலப் பனிப் புயல்களாலும், சென்ற வசந்த கால வெள்ளத்தாலும் உற்பத்தி குறைந்தது. உற்பத்தி குறையத் தேவை பெருகும் போது, விலை ஏறுகிறது.

பத்திரிகைக் காகித ஆலைத் தொழிலில் முதலீட்டுக்கு நூற்றுக்கு நான்கு பங்கு வீதமே ஆதாயம் கிடைக்கிறது. ஆகவே, தேவை குறையும் போது உற்பத்தியாளர்கள் திறமைக் குறைவான பழைய ஆலைகளை விரைந்து மூடிவிடுகிறார்கள். மீண்டும் தேவை பெருகும்போது, புதிய ஆலைகளை நிறுவுவது என்பது செலவுமிக்க ஒன்றாகும். ஒரு புதிய ஆலையை அமைக்க இரண்டு ஆண்டுகள் ஆகும். குறைந்த ஆதாயம் தரும் இத் தொழிலில் பணத்தை முடக்க உற்பத்தியாளர்களுக்கு மனம் வருவதில்லை. இருக்கும் ஆலைகளிலேயே அதிகத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்து உற்பத்தியைப் பெருக்கவும் அஞ்சுகிறார்கள்; ஏனெனில், தேவை சீராக இருக்கும் என்ற துணிவு இல்லை; தேவை குறைந்தால், தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டியதாகுமே.

பத்திரிகைக் காகித ஆலை வசதி, உலகம் முழுவதும், 1971 முதல் 1974க்குள் கிட்டத்தட்ட 21 லட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்யும் அளவுக்கு உயரும் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் இதுவும் போதாது.

தேவைக்கு ஈடு கட்டும் அளவுக்கு உற்பத்தி பெருகுவதற்குக் காலம் பிடிக்கும்; அது வரை, உலக முழுவதிலுமே பத்திரிகைகள் தங்கள் காகிதக் கையிருப்புக்களை அதிக காலம் நீடிக்கச் செய்தும் அச்சகத்தில் கழிவு கூடாத படி பார்த்தும் நிலைமையைச் சமாளிக்க முயல்கின்றன.

காகிதக் கூழ் தயாரிக்க அடுக்கப் பட்டுள்ள மரங்களைக்...



...கானகத்தில் வெட்டிச் சாய்க்கிறது ராட்சத இயந்திரம்.



யுத்தத்தின் முடிவில்...

போர் ஓய்ந்து நிரந்தர சமாதானத்துக்கான முயற்சிகள் நடக்கும்போது, யுத்தம் ஏன் நடந்தது, எப்படி நடந்தது, எதிர்காலமென்ன என்பன போன்ற விவரங்கள் தெளிவாகின்றன.

லண்டனில் பிரசுரமாகும் 'டைம்ஸ்' நாளிதழிலிருந்து சில பகுதிகள்:

எகிப்து தீபகற்பத்தின் மீது படையெடுப்பது என்ற எகிப்தியத் திட்டம் மிகக் கச்சிதமாகத் தயாரிக்கப்பட்டது. அணுவளவும் பிசகாமல் நிறைவேற்றப் பட்டது. இவ்வளவு முன்யோசனையுடன் திட்டமிட்டுக் கருத்துடன் நிறைவேற்றுவதென்பதை எகிப்திய ராணுவத்தில் சாதாரணமாகக் காண முடியாது. ஆயினும் திட்டம் தோல்வியுற்றது. காரணம் தீட்டிய திட்டம் தவறானது. அதன் அடிப்படை பலவீனம் இதுதான்: ஸூயஸ் கால்வாயின் நூற்றி ஒரு மைல் நீளத்துக்கும் எகிப்திய ராணுவத்தினர் அணிவகுத்து நின்று அக்கரைக்குப் படையெடுத்துச் சென்றனர். அதாவது நூற்றியொரு மைல் நீளமுள்ள ஒரு போர்முனையைப் பலவீனப்படாமல் காக்க முடியும் என்று நம்பினர்! கால்வாயின் குறுக்கே ஒரு பெரிய பாலம் அமைத்து அதன் வழியே எல்லோரும் செல்லாமல் பரவலாகப் பல சிறு பாலங்களை அமைத்துக் கொண்டு சாரிசாரியாக எறும்புகளைப் போன்று சுறுசுறுப்புடன் தாண்டிச் சென்றனர். ஆக இஸ்ரேலிய ராணுவத்தின் மீது இந்தத் தாக்குதல் கூரிய முனையும், தடிமனான கழியும் உடைய வேல் பாய்வது போல் விழவில்லை. அதற்கு மாறாக ஒரு மெல்லிய சிவந்த கோடாக விளங்கியது.

இந்த அணிவகுப்பு இஸ்ரேலியரை ஓரளவு குழப்பத்தில் ஆழ்த்தியது என்னமோ உண்மை. எப்படியெனில் அவர்கள் இந்த எகிப்தியப் படையெடுப்பின் உறுதியான மைய அமைப்பைத் தேடினர். அது இருந்தால் தானே? அதற்குப் பதில் பல பலவீனமான இடைவெளிகளையுடைய ஒரு நீண்ட சங்கிலித் தொடரைத்தான் கண்டனர்.

இஸ்ரேலியர் சூயஸ் கால்வாயைக் கடந்து மேற்குத் திசைக்குச் சென்றது பல சிறு பாலங்களை அமைத்து அல்ல; ஒரே ஒரு பாலத்தை உருவாக்கி ஊடுருவினர். அதன் மூலம் ஏற்கனவே சூயஸ் கால்வாய் கிழக்கிலும் மேற்கிலுமாகப் பிரித்து வைத்திருந்த எகிப்தியத் துருப்புக்களை வடக்கிலும் தெற்கிலுமாக வேறு பிரித்து வைத்து விட்டனர்.


○ பிரதமர் கோல்டா மீர்


○ தளபதி டேவிட் எலிஸார்


○ பாதுகாப்பு மந்திரி மோஷே தயான்

வெள்ளிக்கிழமையன்று எகிப்தியர் தங்கள் விமானப் படையைப் பயன்படுத்தினர். ஆனால் தங்கள் விமான பலத்தின் பத்து சதவிதத்தைத்தான் பயன்படுத்தினர். எகிப்தியரின் நிலையில் இஸ்ரேலியர் இருந்திருந்தால் தங்கள் விமான பலத்தை எடுத்த எடுப்பிலேயே நூறு சதவிதம் பயன்படுத்தியிருப்பர்! அதாவது ஒவ்வொரு விமானத்தையும் ஒரேநாளில் ஐந்து தடவைகள் தாக்குதலுக்காக அனுப்பி யிருப்பார்கள்! (ஹென்றி ஸ்டான்ஹோப் எழுதியது)

போர்நிறுத்த ஒப்பந்தத்தை யொட்டிப் பிரதமர் கோல்டா மீர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் சில பகுதிகள்:

''மத்திய கிழக்கில் உண்மையான சமாதானத்துக்கு இனி வாய்ப்பு இருக்கிறது என்று நிக்ஸன் கூறுகிறார். உங்கள் கருத்து என்ன?''

''இம்முறை நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். ஆனால் இது அவர்களை (எகிப்தியர்களை)ப் பொறுத்த விஷயம். அவர்கள் யுத்தம் புரிவதை விட அமைதி முக்கியமானது என்று கருதினால் சமாதானம் நிலைக்கும். யுத்தத்தில் வெல்

வதைவிட என்று நான் சொல்லவில்லை. ஆண்டவன் அருளால் அவர்கள் இதுவரையில் அதை அநுபவித்ததில்லை. ஆனால் தோற்றாலும் பரவாயில்லை, யுத்தம் புரிவதே முக்கியம், சமாதானம் அல்ல என்று அவர்கள் கருது வதுபோல் தெரிகிறது. இம்முறையேனும் இந்தப் போக்கு மாறும் என்று நம்புகிறேன்.''

''எங்கே, எப்போது, யாருடைய ஆதரவின் கீழ் நீங்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தச் சம்மதிப்பீர்கள்?''

''எங்களைப் பொறுத்தவரையில் பேச்சு வார்த்தை தொடங்க எந்த நேரமும் நல்ல நேரம்தான். உலகிலுள்ள எந்த இடமும் நல்ல இடம்தான். யாருடைய ஆதரவுக்குக் கீழும் ஆரம்பிக்கலாம். எவரது ஆதரவும் இல்லாமலேயேகூடத் தொடங்கலாம். எதிரிகள் கூறுவதைச் செவிமடுக்கத் தயாராக இருக்கிறோம். கேட்டு, உசிதமான முடிவெடுப்போம்.''

''யுத்தத்தின் ஆரம்பத்தில் என்ன நடந்தது? ஆக்கிரமிப்பு நடக்கப் போகிறது என்று இஸ்ரேலுக்கு முன்னதாகவே தெரியுமா? நீங்கள் முந்திக்கொள்ளாமல் முதல் தாக்குதலை ஏற்கத் தயாரானது அரசியல் நோக்கிலா?''

''ஆமாம்.''

''இம் முடிவுக்கு அடிப்படைக் காரணம் என்ன? அமெரிக்க உதவி கிடைக்காமல் போகும் என்பதா?''

''அதுவும்தான், ஆனால் அதுமட்டுமல்ல. இம் முறை வேண்டுமென்றே இந்த ஆபத்துக்கு உட்படத் தயாரானோம்.''

''முதல் தாக்குதல் உங்களை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்று கணித்தீர்களா? உங்கள் கணக்குகள் பொய்த்தனவா?''

''எனக்குத் தெரியாது. நாங்கள் முந்திக் கொண்டிருந்தால் எந்த அளவுக்குச் சேதங்கள் குறைந்திருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் வேண்டுமென்றேதான் இந்த ஆபத்துக்கு உட்பட்டோம். ஏனென்றால் சென்ற தடவை, 'யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கம் எங்களுக்குச் சிறிதும் இல்லை; எதிராளியின் எண்ணத்தைப் புரிந்து கொண்டதால்தான் தாக்குதலுக்கு முந்திக் கொள்ளும்படியாயிற்று' என்று திரும்பத் திரும்ப உலக நாடு



○ வீடு திரும்பும் இஸ்ரேலிய வீரர்.



○ இஸ்ரேலியப் பள்ளியின் இடிபாடுகிடையில்...

களுக்கு எடுத்துச் சொல்லி எங்களுக்கு அலுத்து விட்டது. எங்களிடம் ரொம்பச் சிநேகமாக இருப்பவர்கள் கூட, 'நீங்கள் அப்படிச் செய்யாதிருந்திருந்தால் உங்களுக்கு நாங்கள் இன்னும் அதிகமாக உதவியிருக்க முடியும்' என்றார்கள்.''

''பாதுகாப்பான, உறுதி பணிக்கப்பட்ட எல்லைகள் வேண்டும் என்பது இஸ்ரேலின் வாதமாக இருந்து வந்திருக்கிறது. இப்போது, இந்த யுத்தத்தின் பிறகு போர் நிறுத்த எல்லைகள் அவ்விதம் இருப்பதாகக் கூற முடியாது. இது பேச்சு வார்த்தைகள் நடத்த ஒரு பெரிய தூண்டுதல் இல்லையா?''

''நாங்கள் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருக்கிறோம். இதற்குத் தூண்டுதல் எதற்கு?

''ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஸாடட்டுக்குத் தம் தோல்வியை அநுபவித்து மகிழ அவகாசம் தரப்பட வேண்டும். உடனடியாக அதை அரசியல் தந்திரங்கள் மூலம் வெற்றியாக மாற்றிவிட அனுமதிக்கலாகாது. அவர் தோல்வி அடைவதிலோ அல்லது அவர் கொட்டத்தை அடக்குவதிலோ எனக்குச் சிரத்தை இல்லை. ஆனால் அவர் யுத்தத்தை ஆரம்பித்தார் என்பது ஆண்டவனறியச் சத்தியமானது. எங்கள் மக்கள் இறந்திருக்கிறார்கள். அவரது மக்களும் ஆயிரக் கணக்கில் இறந்திருக்கிறார்கள். அவர் தோல்வி அடைந்துள்ளார். ஆனால் பிறகு அரசியல் ஏற்பாடுகளால் அவருக்கு வெற்றி தேடித் தரப்படுகிறது. அவர் மீண்டும் எகிப்திய மக்களுக்கு 'ஹீரோ' வாகிறார். அல்லது 'ஹீரோ'வாகி விட்டதாக நினைத்துக் கொள்கிறார். இது அவருக்கு நன்மையான விஷயமா?''

தமிழாக்கம்: வெ. ராஜேந்திரன்


மைக்ரோஃபைன்ட்

ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனால்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது–

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.







சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் (N) தயாரிப்பு

A G 57 TM



ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 மார்ச், 18உ

சனிக்கிழமை: சமக்காளம் நெய்யும் தொழிற்சாலைக்குச் சென்றேன். ஒருவர் பாடுவார். அதற்கேற்பக் கைதிகள் அழகாக நெய்வார்கள். இப்படித் திருடர்கள், கொள்ளைக்காரர்கள் எல்லாரும் நெய்யும் காட்சி ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

ஒத்துழையாமைக்காரர்களில் நாலு பேர் அச்சாபீஸில் வேலை செய்யப் போயிருக்கிறார்கள். இந்தவிதமாக இளைஞர்கள் சிறையில் இருக்கும் பொழுது ஏதேனும் ஒரு வித்தை கற்றுக் கொண்டால் நலமாயிருக்கும். முகமது ஹுஸேன் சமக்காளத் தொழிற்சாலைக்குப் போக விரும்புகிறார். சமக்காளத்துக்கு வேண்டிய ரோமத்தைச் சுத்தம் செய்யும் வேலை கடினமானதன்று. அதனால்தான் நம்மில் பெரும்பாலோருக்கு அந்த வேலையையே கொடுக்கிறார்கள். சுப்பராவ் நெய்யும் வேலையை மிகச் சிரமப்பட்டுக் கற்றுக் கொண்டு வருகிறார்.

1922 மார்ச், 19உ

ஞாயிற்றுக்கிழமை: சென்ற வருஷம் செலுத்திய வருமான வரியில் ரூ. 211–11–0 எனக்குத் திருப்பித் தருவதாக வருமான வரிக் கலெக்டரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது.

இந்த இடத்தில் இருக்க வேண்டிய கடைசி நாள். இங்குள்ளவர்கள் சகலரும் என்னிடம் அன்பாக நடந்து கொண்டதால் எனக்கு இங்கிருந்து போவது என்பது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது.

1922 மார்ச், 20உ

திங்கட்கிழமை: ஏசு கிறிஸ்துக்கு பைலேட் ஆறு வருஷ வெறுங்காவல் தண்டனை கொடுத்திருப்பதாக அறிகிறேன். நமக்கு வழி காட்டுவதற்காகக் கடவுள் ஒருவரைத் தந்தார். ஆனால் அரசாங்கமோ அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட அதிகாரமுடையதாக இருக்கிறது.

நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு காலை பத்து மணிக்குச் சிறையிலிருந்து வெளியேறினேன். சிறைத் தலைமை அதிகாரி என்னுடன் வெளியே வந்தார். ''வெளியிலிருந்து பார்க்கும்போது சிறைக் கட்டடம் அழகாகத் தோன்றுகிறதல்லவா?'' என்று கேட்டார்.

அதற்கு நான் 'சாதாரணமாக எல்லோரும் எண்ணுவதுபோல் சிறையின் உள்ளேயும் அவ்வளவு மோசமாய் இல்லை' என்று பதில் கூறினேன்.

நாங்கள் பிரியுமுன் அவர் என் கையைப் பிடித்துக் குலுக்கி மறுபடியும் இங்கே வர வேண்டாம் என்று



என்னைக் கேட்டுக் கொண்டார். என்னைச் சந்திப்பதற்காகத் திரு சிங்காரவேலு செட்டியாரும் திரு ராமசாமி நாயக்கரும் வந்திருந்தார்கள். வேலூர் டவுனுக்கு வந்ததும் சுயராஜ்யா பத்திரிகை நிருபர் என்னைப் பேட்டி காண முயன்றார். 'இப்போதுதான் சிறையிலிருந்து வந்திருக்கின்றேன். இன்னும் நிலைமையை நன்றாக ஆராயவில்லை. பிறருக்கு யோசனை கூறப் புறப்படலாமா?' என்று அவரிடம் கூறினேன்.

மாலையில் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் மேற்குறிப்பிட்ட காரணத்தை உத்தேசித்தே நான் கூட்டத்தில் பேசாதிருந்து விட்டேன்.

(முற்றும்)

மோதி

இன்பக் குளியலுக்கு இந்தியாவின் இணையற்ற சோப்



இப்போது இரண்டு சைஸ்களில் உங்களை
நாடி வருகிறது. இந்த சோப் தரும்
வளம் பொருந்திய பட்டுப்போன்ற நுரை
உங்கள் மேனியில் பட்டுக் கொஞ்சும்
போது உடல் புல்லரிக்கும். அந்த
இன்பத்தில் குளித்து எழுகையில்
உலகமே இன்பமயமாகத் தோன்றும்.
மோதி உங்களுக்கெனவே
உருவாக்கப் பட்டது. மல்லிகை,
ரோஜா, வெட்டிவேர் ஆகிய மூன்று
நறுமணங்கள். இன்றே ஒன்றைத்
தேர்ந்தெடுப்பீர். நாளை முதலே
இன்பவாரிதியில் குளிப்பீர்!


மோதி

**இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்
இப்போது இரண்டு சைஸ்
களில் கிடைக்கிறது.**



டாடா தயாரிப்பு.

OBM-2384 TM



பிலிப்பைன்ஸ் நாட்டு ரோடரிக்ஸ் ஸ்போர்ட்ஸ் சென்டரில் முதன் முதலாக ஆசிய அமெச்சூர் ஓட்ட வீரர் சாம்பியன் போட்டிகள் நடைபெற்றன. ''மழைக்கு நடுவி லும் போட்டிகளில் வீரர்கள் 'டார்ட்டன்' ஓட்டப் பந்தய மைதானத்தில் ஓடியது அதி சயக் காட்சியாக இருந்தது!'' என்றார் மணிலாவுக்குச் சென்று திரும்பிய 'கோச்' ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி.

''மழை பெய்தால் ஓட்டவீரர்கள் சறுக்கி விழ மாட்டார்களா ?''

''டார்ட்டன் 'டிராக்' ரப்பரினால் ஆனது. நம் நாட்டு மண் டிராக் போலல்ல; அடாது மழை பெய்தாலும் ஓட்டப் பந்த யங்கள் நடத்தலாம். இந்தியாவிலும் இவ் வகை 'டிராக்' அமைய வேண்டும். சர்வ தேசப் பந்தயங்களுக்கு ரொம்ப அவசியம்!''

முதலாவது போட்டி, இரண்டாவது இடம்!



முதலாவது ஆசிய அமெச்சூர் ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொண்ட இந்திய அணி. அணிவகுத்திருக்கும் இவர்களில் ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி பின்னால் நிற்கிறார்.

என்றார் ஸ்ரீ டி. ஏ. கே. ஒலிம்பிக் போட்டி, காமன்வெல்த் போட்டி என்று பல போட்டி களுக்கு ஓட்டவீரர்களைப் பயிற்சி அளித்து அனுப்பியவர் ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி. பாடியாலா நேஷனல் இன்ஸ்டிடியூட்டில் 'கோச்' பயிற்சி பெற்று, பல புகழ்பெற்ற ஓட்ட வீரர்களைத் தயாரித்தளித்த பெருமை இவருக்கு உண்டு.

''மணிலாப் போட்டியில் இந்தியாவின் சாதனை என்ன ?''

''முதல் ஆசிய அமெச்சூர் ஓட்டப் பந்தயங் களில் ஜப்பான் பதினெட்டு நாடுகளில் முதன்மை ஸ்தானம் பெற்றது. இரண்டாவது ஸ்தானம் இந்தியாவுக்குக் கிடைத்தது. நான்கு தங்கப் பதக்கங்கள், ஆறு வெள்ளிப் பதக் கங்கள், ஆறு வெண்கலப் பதக்கங்கள் இந்தியாவுக்குக் கிடைத்தன.''


''தங்கப் பதக்கங்கள் யார் யாருக்குக் கிடைத்தன ?''

''ஷாட்புட்டில் ஜோகராஜ் சிங்கும், ஹாப் ஸ்டெப் அண்ட் ஜம்பில் மோஹிந்தர் சிங்கும், 'டிகாத்லான்' போட்டியில் சாவ னும், ஹாமர்வீச்சில் ஆஜ்மீர் சிங்கும் தங்கப் பதக்கங்களைப் பெற்றுத் தந்தனர்.''

''தமிழ் நாட்டிலிருந்து யாரும் மணிலா வுக்குச் செல்லவில்லையா ?''

''முப்பத்தொரு ஓட்ட வீரர்களில் தமிழ் நாட்டிலிருந்து 'கோச்' ஆக நானும், தட்டு வீச்சில் நாலாவது ஸ்தானம் பெற்ற அனுரூபா வும், ரிலே பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் பெற்ற கே. நடராஜனும் சென்றிருந்தோம்.''

நவம்பர் 18லிருந்து 23ந் தேதி வரை பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த முதல் ஆசிய அமெச்சூர் ஓட்டப் பந்தயங்கள் இந்தியாவின் பெருமைக்குச் சரியான உரைகல்லாக அமைந்தது. அடுத்த ஆசிய அமெச்சூர் ஓட்டப் பந்தயங்கள் கொரியாவில் 1975ம் ஆண்டில் நிகழவிருக்கிறது. உறுதியும் உற்சா கமும் உள்ளவர்கள் இப்போது முதலே உழைக்கத் தொடங்கலாம்! — பி. எஸ். மணி



தலைப்பிரசவம்

குட்டி எஜமானியம்மாளுக்கு சோப்பு, டவல் எல்லாம் எடுத்துக் கொடுத்து, டிபனும் தயாராக வைத்து ஊழியம் புரியும் குட்டி வேலைக்காரியின் சுறுசுறுப்பான நடிப்புடன் புதுமையாகப் படம் ஆரம்பமாகிறது. ஆற்றின் அக்கரையில் பிரசவம் பார்க்கப் போன இளம் லேடி டாக்டர் ஒருத்தி தன் வேலைக்காரியுடன் திரும்பும்போது வெள்ளத்தில் அகப்பட்டுக் கொள்ளுகிறாள். வேலைக்காரி வெள்ளத்திலிருந்து தப்பிக் கரை சேர்ந்து எஜமானியைக் காணாமல் தவிக்கும்போது ஒரு திட்டில் அவள் காப்பாற்றப்பட்டுக் கிடத்தப் பட்டிருப்பதைக் காண்கிறாள். அந்த லேடி டாக்டரின் மானத்தைக் காப்பாற்றுவதற்காகப் போர்த்தியிருந்த 'ஓவர்கோட்' படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று விடுகிறது. அந்த ஓவர்கோட்டுக்கு உரியவனைக் கண்டுபிடித்து அவனையே காதலிக்கிறாள் லேடி டாக்டர்.

நம் படங்களில் முத்துராமனுக்கென்று சில பாத்திரங்கள் கிடைப்பதை என்னவென்று சொல்லுவது! மூட நம்பிக்கையையும் தகர்த்து எறிய முடியாமல், அப்பா பேச்சையும் தட்ட முடியாமல் வேலைக்காரியின் கரம் பற்றிய வேளையில், மனமாரக் காதலித்தவளையே சந்திக்க நேர்ந்து தட்டுத் தடுமாறி, பிறகு மனைவியோடு இன்பம் நுகர முடியாமல் தவித்து உருகி.... அந்த இளைய ஜமீன்தார் பாத்திரம்... என்னவோ போங்கள்!

ஆரம்பத்தில் குட்டி வேலைக்காரப் பெண்ணாக வரும் பேபி இந்திராவின் இயற்கையான நடிப்பு உள்ளத்தைத் தொடுகிறது.

எம். கிருஷ்ணனின் டைரக்ஷன் நன்றாக இருக்கிறது. கதை, வசனம் எழுதியிருக்கும் பிரகாசத்தை வசனத்துக்காக மனதாரப் பாராட்டலாம், பழம் சம்பிரதாயத்தையும், மூட நம்பிக்கையையும் ஆதாரமாகக் கொண்ட கதையை மன்னித்து விடுவதாயிருந்தால்.

படத்தில் பின்னணிக் காட்சியாக வரும் கொட்டும் மழையில் பூரண கர்ப்பிணி பிரசவித்து உயிர் துறப்பதும், அவள் கணவன் எஸ். வி. சுப்பையா ஜமீன் குடும்பத்துக்குச் சாபம் இடுவதும் எப்படிப் பட்டவரையும் கண் கலங்க வைத்துவிடும்படி அற்புதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

ஜமீன்தார் பரம்பரையே போய்விட்டாலும், அவர்களது பழம் பெருமையை நிலைநிறுத்த மிரட்டி உருட்டும் டி. கே. பகவதி இருக்கிறார் — அருமையான நடிப்பு!

லேடி டாக்டராக வரும் லட்சுமிக்கு நல்ல வாய்ப்பு. நன்றாய்ப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். பல படங்களில் நடித்துப் புகழ் பெற்ற பிறகும் அவர் தம் உடம்பைச் 'சிக்' கென்று வைத்துக் கொண்டிருக்கிறாரே, பெரிய காரியம்!

வேலைக்காரியாக வரும் பிரமீளா நன்றாக நடித்திருக்கிறார் என்றாலும் ''சொந்தம்'' படத்தை நினைவூட்டுகிறதே!

படத்தின் நகைச்சுவைக்கும், தலைப் பிரசவ வேதனையைக் குறைப்பதற்கும் நாகேஷ் இருக்கிறார்! அது போதும் ரசிகர்களுக்கு.

தலைப் பிரசவம் என்னும் தலைப்பே நன்றாயில்லையே! தலைப்புக் கூடவா நல்லதாகக் கிடைக்கவில்லை? ''தலைப் பிரசவம்'' குறைப் பிரசவம்தான்!

—காந்தன்

பாசதீபம்

மது அரக்கனுக்கு உயிர் கொடுத்துள்ள நிலையில் மறுபடியும் குடியின் கொடுமையைப் பற்றிய கதைகள் வர ஆரம்பித்திருக்கின்றன. அந்த வரிசையில் பல குடிகாரர்களின் வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்ட வந்திருக்கிறது பாச தீபம்.

அழகிய பொம்மைகள் செய்து தொழில் நடத்துகிற ஒருவருக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும். பையன் (மாரிமுத்து) ஒரு குடிகாரன்; முரடன், தந்தைக்கு அடங்காதவன். ஆனால் தங்கையிடம் உயிரையே வைத்துள்ளவன். அந்த ஊர்ப் பண்ணையாருக்கும் ஒரு மகன், ஒரு மகள். அந்த மகனும் குடிகாரன். கிராமத்துப் பெண்ணுறுதும் மகள் ரொம்ப முற்போக்கு. பொம்மைக்காரரின் குடிகார மகனை ஆவேசமாகக் காதலிக்கிறாள். அவள் அண்ணனுக்கு அவள் காதலனின் (மாரிமுத்து) தங்கை மீது ஒரு கண். அந்த ஊரில் ஒரு பணக்காரர். அவருக்கும் ஒரு பையன், ஒரு பெண். பையன் நல்லவன். கலை உள்ளம் படைத்தவன். பெண் மூத்தவள். திருமணமான பின் இளம்பிள்ளை வாதத்தினால் நடக்கும் சக்தியை இழந்து விட்டவள். இவள் கணவனும் ஒரு குடிகாரன். இப்படிப் பல குடிகாரர்கள் குடித்துக் கும்மாளமிட்டு ஆடிப் பாடிக் கொண்டு போகிறார்கள். இதற்குத் துணையாக மனைவிக்குப் பயந்து நடுங்கும் கிராமத்து நாட்டாண்மைக்காரராகத் தேங்காய் சீனிவாசன் வந்து ஒருகிராமத்து இளம் பெண் வாய்க்காலில் குளிக்கும்போது கட்டிப் பிடித்துக் காதல் சேஷ்டை புரிந்து இரவு அவள் வீட்டுக்கு வருவதாகக் கூறி; அதற்கேற்ப மனைவியை ஏமாற்றிவிட்டு அவள் வீட்டுக்கு வந்து கள்ளக் காதல் புரியும் கண்ணாறாவி ... தமிழ்ப் படத்தின் தலைவிதி இப்படியே தான் இருக்குமோ? என்றுமே மாறாதோ?

மஞ்சுளா நல்ல துணிச்சல்காரர்தான். அதனால் தான் இவ்வளவு விரைவில் நட்சத்திரப் பதவிக்கு உயர முடிந்திருக்கிறது.

சகோதரி பாசத்தை விளக்க இதற்கு முன்பும் பல படங்கள் வந்திருக்கின்றன. அவைகளை விடப் புதுமையாகவோ, சிறப்பாகவோ இதில் ஏதுமில்லை.

நடிப்புச் சுடர் ஏ. வி. எம். ராஜன் இதிலும் நமக்குப் பழகிப்போன பாணியில் நடித்திருக்கிறார். குடிகாரனாக இருந்ததனால் தன் தங்கையின் திருமணத்துக்குத்தானே தடையாகிப் போனதை உணர்ந்து கொண்ட போதும், பண்ணையார் வீட்டில் திருடிவிட்டு அது கண்டு பிடிக்கப்பட்ட பின் அவரிடம் வந்து மன்னிப்புக் கேட்கும் போதும், மாரியம்மன்கோயிலில் தேவியிடம் பேசும்போதும் வெவ்வேறு விதமான உணர்ச்சி பாவங்களைக் காட்டி நடித்திருக்கலாம் நடிப்புச் சுடர்.

தணிந்து போகாமல் நிமிர்ந்து நிற்பது எல்லாச் சந்தர்ப்பங்களுக்குமே கைகொடுக்குமா என்ன?

வெண்ணிற ஆடை நிர்மலா பாத்திரத்துக்கு ஏற்றப் அழகாக நடித்திருக்கிறார். தந்தையாக ராகவனும் சிறப்பாக நடித்துள்ளார். பகவதி பண்ணையாராக வந்து அழுத்தமாக வசனம் பேசி அப்ளாஸ் பெறுகிறார். துகிலுரியும் காட்சி இருக்கிறது இதிலும். ஆகவே அங்கு ஸ்ரீகாந்தும் உண்டு என்று சொல்லவே வேண்டாம். முடிவில் வைத்துள்ள சஸ்பென்ஸ் படத்துக்கு விறுவிறுப்பைக் கொடுத்தாலும் ஒரு பெண் தன் தாய்மையைப் பணயமாக்கி ஒரு வாக்குக் கொடுப்பாளா என்பது யோசிக்க வேண்டிய விஷயம்.

ஒரு பாட்டினாலேயே மடாக் குடிகாரனை நல்வழிக்குக் கொண்டுவரும் சக்தி கதாநாயகனுக்கு இருப்பதைப் பார்த்தால் மதுவிலக்குப் பிரசாரத்துக்கு அரசியல்வாதிகள் இனி மேடைப் பிரசங்கங்களை விடுத்துப் பாட்டுப் பாடக் கற்றுக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஒளி, ஒலிப் பதிவுகள் திருப்திகரமாக இருக்கின்றன. பல காட்சிகளும் சம்பவங்களும் நாடக பாணியில் அமைந்திருப்பதும் இப்படத்தின் குறைகளுள் ஒன்று.

பாச தீபத்தில் பிரகாசமில்லை. - கௌசிகன்






“ஸாப்பி”

கடலை மிட்டாய்

சுவை, உணவுச் சக்தி,
முருமுருப்புத் தன்மையில்
இணையற்றது "ஸாப்பி."
இயல்பான புரதச்சத்து
நிறைந்த "ஸாப்பி"
வைட்டமின் A, B, B2,
இரும்பு, தாதுச்
சத்துக்களுடன் ஆன
தயாரிப்பு.

**20, 50, 100, 200 கிராம்
பொட்டலங்கள் கிடைக்கும்**

தித்திக்கும் வேளையின்
திதிப்பான ஆகாரம்



இது 'டால்மியா உத்யோகின்'
ஒரு தரமான தயாரிப்பு.



ஜஸ்டிஸ்

பேராசிரியர் கல்கி அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய உணர்ச்சி மயமான ''தூக்குத் தண்டனை'' என்ற அதியற்புதமானதொரு சிறுகதையை நாடகமாக்கி வெற்றிகரமாக மேடையேற்றி விட்டனர் என்னெஸ்னென் தியேட்டர்ஸார்.

ஒரு நிரபராதியை, சட்டப்படி குற்றவாளியாக்கி அவனுக்குத் தூக்குத் தண்டனையும் வழங்கிவிட்ட நீதிபதி ஒருவரின் உள்ளக் குமுறலும் பிரதிபலிப்பும்தான் மேற்படி சிறுகதையின் ஜீவநாடி.. நாடகத்துக்காகச் சில பாத்திரங்களைச் சேர்த்திருக்கிறார்கள். (மூலக் கதையின் சுவையைக் கெடுக்காமல்தான் சேர்த்திருக்கிறார்கள்.) நாடக ஆக்கத்துக்காகவும் அருமையான வசனங்களுக்காகவும் நாகநந்தியை மனமாரப் பாராட்டலாம்.


ரசிகர்கள் அதிகம் விரும்புகிற மாதிரியான நாடகங்களைத் தயாரிப்பது ஒன்று; ரசிகர்கள் அதிகமாக விரும்ப வேண்டிய பாணியில் நாடகங்களைத் தயாரிப்பது மற்றொன்று. — இப்படி நாடக உலகத்தில் இடையறாத போராட்டம் ஒன்று உண்டு. இந்த நாடகம் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தது என்றாலும் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறக்கூடிய வகையிலும் தயாரித்திருக்கிறார்கள். மேஜர் சுந்தரராஜன் ஜஸ்டிஸ் அருளப்பராகத் தோன்றி நீதிக்கும் பாசத்துக்கும், சட்டத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் இடையில் தவிக்கும் தவிப்பு, அப்பப்பா! பிரமாதம். கடைசியில், நிரபராதியான குற்றவாளி தண்டனைக்குத் தப்பி இயற்கை மரணம் எய்தியதைக் கேட்டதும் அவர் அடைந்த மனத் திருப்தியை மேஜர் வெளிப்படுத்தியது நடிப்பின் சிகரமாக அமைந்து விட்டது. டைரக்ஷன் பொறுப்பையும் அவரே ஏற்றுத் திறமையாகச் செய்திருக்கிறார்.

''ஜஸ்டிஸ்'' நாடகத்தின் இன்றியமையாத மற்றொரு பாத்திரம் பாண்டு — ஜஸ்டிஸின் உதவியாளர். எஸ். ஆர். வீரராகவன் அந்தப் பாத்திரத்துக்குத் தனி இடம் தேடித் தந்து விட்டார். அலட்டிக் கொள்ளாத, இயற்கையான நடிப்பு அவரது தனிச் சிறப்பு. நகைச்சுவை விருந்தளிக்கும் வி. ராஜகோபால் நாடகத்தின் சோக ரஸத்தைப் போக்க உறுதுணையாயிருக்கிறார். சட்டத்தின் இரும்புப் பிடியின் பலத்தை விளக்க ஒரு சாமியார் பாத்திரம் — சிவகுமார் அதை ஏற்றுச் சிறப்பாக நடித்தார்.

பானுவாக வரும் புஷ்பாராணியும், ராஜுவாக வரும் எம். பானுமதியும் உணர்ச்சி மயமாக நடித்து நாடகத்துக்குச் சுவை கூட்டியிருக்கின்றனர்.

''ஜஸ்டிஸ்'' அருமையான நாடகம். மிகவும் புதுமையான நாடகம். உள்ளத்தை உருக்கும் உயர்ந்த நாடகம். — காந்தன்


பண்டைய நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
மபத்லால்
க்ரூப் அளிக்கும்
சேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்





ஜெய் ஹனுமான்!

☐ 12.45 மணி; 1.55 மணி, 3.15 மணி என்று நேரமாகிக் கொண்டேயிருந்தது. ஆட்டம் ஆரம்பமாகவில்லை. நான்கு மணிக்கு அம்பயர்கள் வந்து 'பிச்'சைச் சோதித்தார்கள். தீர்ப்பு: ''இன்று விளையாட்டு இல்லை!'' விளைவு: இளம் ரசிகர்கள் ஆத்திரம் தீர விளையாடி 50 நாற்காலிகளை 'அவுட்' செய்தனர்!

''பூவா? தலையா?''

ஹனுமந்த் சிங் இந்தப் 'பூவா தலையா' விஷயத்தில் எப்பொழுதுமே அதிர்ஷ்டக்காரர். அவர் பக்கமே வெற்றி சாய்ந்தது! தெற்கத்தியப் பிரிவு ஆட்டத்தில் தோற்கவில்லை! அதிர்ஷ்டத்தில் பின்வாங்கியது! காப்டன் வெங்கடராகவன் முதலில் 'டாஸ்' வெற்றி பெற்று 'பாட்டிங்'குக்கு விட்டுக் கொடுத்தார். இரண்டாவது டாஸ்ஸில் தோல்வியுற்றுத் திலீப் ட்ராஃபி செமி பைனல் வெற்றியை மத்தியப் பிரிவுக்கு விட்டுக் கொடுத்து விட்டார்!

— குண்டுமணி

1. திலீப் கோப்பைப் பந்தயம் செமிபைனலில் துரானி பந்தில் விஜயகுமார் 'காச்' கொடுத்து 'அவுட்'டானார்.
2. திலீப் கோப்பை குவார்ட்டர் பைனலில் மேற்குப்பிரிவு காப்டன் அம்பர் ராயும் தெற்குப் பிரிவு காப்டன் வெங்கடராகவனும் 'பூவா, தலையா?' போட்டுத் திரும்புகின்றனர்.

3. திலீப் கோப்பை குவார்ட்டர் பைனலில் அப்துல் ஹையின் அழகான பவுண்டரி ஷாட்!
4. மேற்குப் பிரிவு சுக்லாவின் விக்கெட்டை அபித் அலி வீழ்த்தினர்.







"அவர் சொன்னார், இந்தக் கொஞ்சும் அழகை மிஞ்ச முடியாது!"
"நான் சொன்னேன், அசோக்கை மிஞ்ச முடியாது!"
நான் அசோகா பிரின்டுகளை அணிந்து எப்பொழுது புறப்பட்டாலும், அனைவரது கண்களும் என்மீதே பதிகின்றன, என்னையே பாராட்டுகின்றன. ஆகையால் நான் இப்போதெல்லாம் அசோகா மில் துணிகளையே அணிந்து வருகிறேன் அசோகாவின் பாலியெஸ்டர் கலந்த துணிகளுக்கும் இணையேது! அவை அணிவதற்கு சுகமானவை, கண்ணுக்கும் அழகானவை! நான் அவருக்காகவும் அசோகா மில்லின் அழகான கட்டம் போட்ட ஷர்ட்டிங் வாங்கித் தந்திருக்கிறேன். ஏனெனில், அவரைப் பாராட்ட எனக்கும் வாய்ப்புக் கிட்டுமே!
அசோகா மில்ஸ்
ஏற்றமிகு 7 மில்களில் ஒன்று
லால்பாய் க்ரூப் துணிகள்



மகரிஷி

மூன்றும் அத்தியாயம்

வெளிக் காம்பவுண்டுச் சுவரில் முதுகைச் சாய்த்து ஒரு காலைச் சுவரில் உதைத்து, மற்றொரு காலில் நின்று, கைகளைக் கட்டித் தலையைக் கவிழ்ந்து நின்றான் பாஸ்கர். அவன் அருகில் நெருங்கி வந்து பார்த்தாள் சாந்தா. அவன் அப்படி நின்ற நிலை நின்று கொண்டே தூங்குவது போல் இருந்தது.

''எதற்காக இப்படி கேட் அருகிலேயே நிற்கிறீர்கள்? உள்ளே வரக் கூடாது?''

முன் நெற்றியில் விழுந்து கிடந்த மயிரைப் பின்னே தள்ளி விட்டுக் கொண்டு நேராக நிமிர்ந்து நின்று சிரித்தான்.

''அப்பா பணத்துக்காகத் துரத்தினார். அன்று அம்மா போட்ட சத்தத்தில் உள்ளே வந்து கேட்கப் பயமாக இருக்கிறது'' என்றான்.

''நீங்கள் வெறுங் கையுடன் திரும்ப வேண்டியதுதான்'' என்றாள் சாந்தா.

பாண்டின் உள்ளே விட்டுப் போட்டுக் கொண்டிருந்த சட்டையை எவ்வித தயக்கமும் இன்றி வெளியே உருவி முதுகைக் காட்டினான்.

கோடு கோடாக இரண்டு பெரிய புண்கள், ஆறியும் ஆறாமலும் இருந்தன.

''சாட்டையாலே வாங்கு வாங்கு என்று வாங்கி விட்டார். ரெண்டு நாளாய்ச் சோறு இல்லை. என்னோட பாக்கெட்டும் காலி.''

சட்டையை உள்ளே விட்டுக் கொண்டு பாண்ட் பைகள் இரண்டையும் வெளியே இழுத்து உதறினான்.

''அடி வாங்கினேன் என்று சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லையா?''

பாஸ்கர் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''எங்காவது இப்படிப் போகலாம், கபன் பார்க், லால் பாக்.''

''ஐயோ, அப்பா பார்த்தால் என்ன செய்யறது?''

''பார்த்தால் அப்புறம் பேசிக்கலாம். தைரியமா வாங்க....''

அவன் அவளைப் பின்தொடர்ந்தான்.

''அடேடே! இங்கே எப்போ வந்தீர்கள்? எப்படி என்னுடைய ஆபீஸைக் கண்டுபிடிக்க முடிந்தது?'' என்று சாந்தா கேட்டாள். பாஸ்கர் நாணத்துடன் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டான்.

''போன வாரம்தானே சொன்னீர்கள், உங்கள் ஆபீஸ் இருக்குமிடம். சரி, எங்கே போகலாம்?''

''எங்கே வேண்டுமானாலும் போகலாம்.''

''முதலில் டிபன்... பிறகு...''

''இதோ இந்த டிரஸ்ஸையே எவ்வளவு நாட்களாகப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தச் சட்டை முதுகில் கிழிந்திருக்கிறதே.''

''என்னைக் கவனிக்க யார் இருக்கிறார்கள்? அவர் புதுசு புதுசா மைனர் மாதிரி டிரஸ் வாங்கிக்கவே நேரம் சரியாக இருக்கு. நான் வாய் திறந்து எதுவுமே கேட்க முடியாது. கேட்டா, 'நீ இருக்கிற லட்சணத்துக்குப் புது டிரஸ் வேணுமா?' என்பார். உங்களுக்குத் தெரியுமா?... நான் போட்டுக்கொண்டு வருகிற டிரஸ் எல்லாம் அப்பா போட்டுக்கொண்டு தூக்கி எறிந்தது! நான் கொஞ்சம் 'ஆல்டர்' செய்து போட்டுக் கொள்கிறேன். தொள தொளவென்று குரு ஷர்ட் மாதிரி இருக்கும்.''

அவன் சொல்லி விட்டுப் பெரிய ஹாஸ்யத்தைக் கூறின மாதிரி நகைத்தான்.

அவனுடன் சேர்ந்து நடப்பது அவளுக்கு அப்படியொன்றும் பெரிய தயக்கத்தை உண்டாக்கவில்லை. அவளைவிட வயது அதிகமானவனாக இருந்த போதிலும், அதிக ஊட்டம் இல்லாததால் பாதுகாப்பு தேவைப்படுகிறவன் போலத் தோற்றம் அளித்தான். அவன் மேல் அவளுக்கு ஏற்பட்ட பச்சாத்தாபத்துக்குக் காரணமே அவனுடைய அப்பாவித்தனமான தோற்றமும், அவன் வளர்க்கப்படும் விதத்தில் வெளிப்படையாகத் தெரியும் அசிரத்தையும்தான்.

அவனுக்குத் தேவையான ரெடிமேட் உடைகளை எடுத்துக் கொண்டு,

ரெடிமேட் ஸ்டோரை விட்டு வெளியே வந்தாள் சாந்தா. அவன் எவ்வித தயக்கமும் இன்றி, சாந்தா வாங்கிக் கொடுத்ததைப் பெற்றுக் கொண்டான்.

"'இவை யெல்லாம் உனக்கு ஏது?' என்று உங்கள் அப்பா கேட்டால்?"

"அதெல்லாம் அப்பா கேட்கமாட்டார். அவரிடம் எதுவும் கேட்காமல் இருந்தால் ரொம்ப சந்தோஷப்படுவார். ஆனால் எனக்குள்ள பயம் என்ன தெரியுமா? இவை நன்றாக இருக்கின்றன என்று சொல்லி அவர் இவைகளை எடுத்துக்கொள்ளாமல் இருக்க வேண்டும்."

"நீங்கள் கொடுக்காதீர்கள்."

"மாட்டேன்."

"இவற்றை யெல்லாம் நான் உங்களுக்கு ஏன் வாங்கிக் கொடுத்தேன் தெரியுமா?.... உங்களுடைய அம்மாதான் உங்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கச் சொன்னார்."

"பொய்."

"பொய்யில்லை."

"உங்கள் பேரில் உங்க அம்மாவுக்கு உயிர். நீங்க உங்கள் அம்மாவிடம் அன்போடும் ஆசையாகவும் பழகினால் உங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் வாங்கிக் கொள்ளலாம். உங்களுடைய அப்பாவின் தயவே இல்லாமல் இருக்கலாம். என்னைவிட நீங்கள் பெரியவர் இல்லையா? உங்களுக்குத் தைரியம் வர வேண்டும். யார் யார் எப்படிப் பட்டவர் என்ற விவரம் தெரிய வேண்டும். ஓரளவு படித்திருக்கிறீர்கள். ஊர் வம்பெல்லாம் அளக்கத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள்...."

அருகில் நடந்து வரும் சாந்தாவைத் திரும்பிப் பார்த்தான் பாஸ்கர்.

மல்லேசுவரம் ரயில்வே நிலையத்துக் கெதிரில் உள்ள ரஸ்தாவின் இறக்கத்தில் அவன் அலுவலகம், தொழிற்சாலை எல்லாம் இருக்கின்றன.

அலுவலகத்துக்குத் தேடிக் கொண்டு வந்து பாஸ்கருடன் பேசிக் கொண்டே நடந்து வந்தவள் மல்லேசுவரம் பிள்ளையார் கோயிலில் தன் சில நிமிஷ வழிபாட்டை முடித்துக் கொண்டு கடைத் தெருவுக்கு வந்தாள். பாஸ்கருக்குத் தேவையான உடைகளை அவனுக்கு வாங்கிக் கொடுத்துவிட்டுப் பஸ்ஸுக்காக நின்றாள்.

"நேற்று அப்பா இந்தக் கடிதத்தைக் கொடுத்துப் பழையபடியே என்னை அம்மாவிடம் போகச் சொன்னார். நான் 'முடியாது' என்று சொல்லி அப்பா கொடுத்த கடிதத்தைக் கசக்கிப் போட்டு விட்டேன்."

"பிறகு?"

சட்டையைத் தூக்கி விலாவையும், முதுகையும் காண்பித்தான். பெல்டி



ஞல். அடி வாங்கிய ரத்தக் கசிவு காய்ந்திருந்தது.

''நீங்க வாங்கிக் கொடுத்த டிரஸ்ஸை அப்பா பார்த்துவிட்டு என்னை ஒரு பார்வை பார்த்தார். 'இவைகள் ஏதுடா, யார் வாங்கிக் கொடுத்தது?' என்று கேட்பார் என்று எதிர்பார்த்துப் பதில்கூடத் தயார் செய்து வைத்திருந்தேன். நல்ல வேளை கேட்கவில்லை.''

''என்ன பதில் தயார் செய்து வைத்திருந்தீர்கள்?''

''நல்லது செய்யும் தேவதை.''

சாந்தா சிரித்தாள்.

பாஸ்கரன் பல சமயங்களில் ஓர் அசடு போலவே தோன்றினன். அவன் வயது, அவன் வளர்ச்சி இவைகளுக்கு உண்டான உணர்வுகள் அவனிடத்தில் கொஞ்சம் அதிகமாகவே இருந்தன.

சில நாட்களில் அவன் எதிரே அமர்ந்து அவளையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதும், அவளைப் பார்த்து விஷமமாக நகைப்பதும்கூட அவளுக்குக் கொஞ்சம் சங்கடமாகவே தோன்றுவது உண்டு. எனினும், மதுராம்பிகைக்காக இந்த விஷப் பரீட்சையைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

அவனைச் சிறுகச் சிறுக மாற்றுவதில் அவள் மேற்கொண்ட முயற்சியின் முதற் பயனை அன்று பார்த்தாள். அது அவளைப் பெரிதும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

''அம்மாவுக்காக இதை வாங்கிக் கொண்டு வந்தேன்'' என்று சாந்தாவைப் பார்த்தபடி சொல்லிக்கொண்டே அந்த மெல்லிய உல்லன் கம்பளிச் சால்வையைத் தாயாரிடம் வெட்கத்துடன் நீட்டினன். வெளிர் மஞ்சளில் சால்வை. பார்டர்களில் லேஸ் எம்ப்ராய்டரியினுல் பூ வேலைப்பாடு செய்திருந்தது. அதைப் பெற்றுக் கொள்ளும்போது



மதுராம்பிகைக்குப் பரவசம் தாங்க முடியவில்லை. அவனுடைய கைகளைப் பிடித்து இழுத்துக் கட்டிலில் அமர்த்திக் கொண்டாள்.

மாலை நேரங்களில் மதுராம்பிகையைக் கையைப் பிடித்து அழைத்து வந்து வெளியே நாற்காலியில் அமர வைக்கிறான் பாஸ்கர்.

டாக்டரின் மருந்துச் சீட்டைக் கடையில் கொடுத்துச் சரியான மருந்துகளை விவரம் பார்த்து வாங்கிக் கொண்டு வருகிறான்.

இது நாள் வரை யாருக்குமே தெரியாது, பாஸ்கர் இவ்வளவு அழகாக மௌத் ஆர்கன் வாசிப்பான் என்பது.

ஒரு தடவை தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து மருந்துப் பொட்டலத்தை வெளியே எடுக்கும்போது அது கீழே விழுந்தது. சாந்தாதான் அதை முதலில் எடுத்தாள். அதை எடுத்து மதுராம்பிகையிடம் தந்த போது, ''உனக்கு வாசிக்கத் தெரியுமா?'' என்று கேட்டாள் தாயார்.

''தெரியும்.''

''வாசித்துக் காட்டுகிறாயா?''

''ஆகட்டும்.''

அன்று மாலை சில அபூர்வமான ஹிந்தி ராகங்களை இனிமையுடன் வாசித்துக் காட்டினான்.

அவள் பெங்களூர் வந்து பணியில் சேர்ந்து அன்றுடன் ஓராண்டு முடிவடையப் போகிறது. நடுவில் காத்யாயினிக்கு உடம்பு சரியில்லை என்று கடிதம் வந்தது. அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று இரண்டு மூன்று நாட்கள் லீவு எழுதிப் போட்டு விட்டுப் புறப்படும் போது நான்கைந்து நாட்களில் உடல் நலம் தேறிவிட்டது என்று பதில் வந்தது. எனவே, சென்னை செல்லும் எண்ணத்தைத் தாற்காலிகமாக ஒத்திப் போட்டாள்.

''காத்யாயினி எப்படி? நல்ல மாதிரி தானே!''

'' நல்ல மாதிரி என்றால்.....''

''பழக?.... பேச.... ?''

''நல்ல மாதிரிதான். என் விஷயத்தில் கொஞ்சம் கடுமையுடன் இருந்திருக்கிறாள் என்பதைத் தவிர குறைகள் ஏதும் காண முடியாதவள்.''

''அவளை இங்கே வரவழைக்கலாம் என்றிருக்கிறேன்.''

'' எதற்கு?''

''உதவிக்கு?''

''உதவிக்கா ?''

''ஆமாம். நம்பகமான ஒரு துணை வேண்டும் போல் அடிக்கடி தோன்றுகிறது.''

'' ஏன் அப்படி ?''

''சொல்லத் தெரியவில்லை. ஆனால், ஒரு பலவீனம் கவ்விக் கொண்டது போல் பிரமை.''

'' உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். ஏன், உங்களுக்கு இங்கே யாரும் கிடைக்க மாட்டார்களா?''

'' காத்யாயினி போல் கிடைப்பார்களா என்பது சந்தேகம்.''

'' அப்படியானால் காத்யாயினியை உங்களுக்குத் தெரியுமா ?''

''பீரோவைத் திறந்து செக் புத்தகத்தை எடேன்.....''

பீரோவைத் திறந்து செக் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தாள். அந்த மாதச் செலவுக்கும், மற்றச் செலவுகளுக்குமாக ஒரு தொகையை எழுதிக் கையெழுத்திட்டுச் சாந்தாவிடம் அந்தச் செக்கைக் கிழித்துக் கொடுத்தான். ''இதில் ஐம்பது ரூபாயைக் காத்யாயினிக்கு மணியார்டர் செய்துவிடு. கடிதத்தை நான் எழுதிக் கொள்கிறேன். கூபனில் என் கடிதம் வரும் என்ற

ஹனுமத் ஜயந்தி அபிஷேக சங்கம்

நாமக்கல் *(சேலம் ஜில்லா)*

முக்கிய அறிவிப்பு

கடந்த நான்கு ஆண்டுகளாக எங்கள் சங்கத்தின் ஆதரவில் நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி ஸன்னதியில் ஸ்ரீ ஹனுமத் ஜயந்தி விழா, பூர்ணாபிஷேகம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வந்தது. நாமக்கல் ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமி தேவஸ்தான அறங்காவலர் குழுவினரின் சில நிபந்தனைகளுக்கு இணங்க முடியாமல் இருப்பதால் இவ்வருடம் ஸ்ரீ ஹனுமத் ஜயந்தி விழா எங்கள் சங்கத்தாரால் நடத்தப்பெறாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இதுவரையில் எங்களுக்கு அன்பும், ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கிய பெருமக்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ ஆஞ்சநேயர் கிருபை கூர்ந்தால் மீண்டும் தொடர்பு கொள்ளுகிறோம்.

A. K. வெங்கட்ட நாராயண ஐயர்
காரியதரிசி

Dr. K. ஜெயராமச்சந்திரன் M.B.B.S.,
தலைவர், நாமக்கல்



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வீல் ஆஃப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வீல் ஆஃப் லவ் உங்களை அலங்கரிக் கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத் திரை அது.
ஹேலோ வீல் ஆஃப் லவ் டால்க் வாசமுள்ள அன்புத்திரை... அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வீல் ஆஃப் லவ்
டால்க்
Halo

விவரம் மட்டும் எழுதிவிடு. வேறொன்றும் வேண்டாம்.''

அன்று மாலை வேறு எதையோ தேடும் போது சாந்தாவுக்கு அந்த மணியார்டர் ரசீதுகள் கொண்ட கட்டு கண்ணில் தென்பட்டது. இத்தனை என்று சொல்ல முடியவில்லை. ஏராளமாக இருந்தன.

அத்தனையிலும் பணம் பெற்றுக் கொண்ட காத்யாயினியின் சாய்வான, அழகான கோடு போன்ற கையெழுத்து.

காத்யாயினிக்கும் மதுராம்பிகைக்கும் என்ன சம்பந்தம்?

'' சாந்தா !''

வாசல் வராந்தாவிலிருந்து மதுராம்பிகையின் குரல் வந்தது.

மதுராம்பிகையின் முகத்தையே சில கணங்கள் பார்த்தாள். அந்த முகம் திடீரென்று ரகசியம் குடிகொண்ட முகத்தைப் போலத் தோன்றியது.

காத்யாயினியைப் பற்றிக் கேட்கலாமா? அவளுள் எழுந்த சில தயக்க உணர்வுகளின் தாக்குதல், எடுத்த எடுப்பில் அதைப் பற்றிக் கேட்கும் துணிவைக் கொடுக்கவில்லை.

''காத்யாயினி என் சிநேகிதி. ரொம்பவும் நல்லவள். நம்பகமானவள். வாழ்வில் கணவனால் ஏமாற்றப் பட்டவள். அவள் அன்று முதல் இன்று வரையில் ஏழை. ஏழைமைப் பின்னணியில் வளர்ந்தவள். ரொம்ப அமைதியானவள்.''

மதுராம்பிகை பேசியது, இஷிணி பேசுவது போல் இருந்தது, சாந்தாவுக்கு. எப்படி என் மனசைப் புரிந்து கொண்டு பேசுகிறார் இவர்?

''ரொம்பவும் எதிர்பாராதவிதமாக வாழ்வுப் பாதையில் ஒன்று சேர்ந்தோம். அவளுக்கு நான் உதவி செய்ய வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அவள் என்னிடம் கேட்காமலே செய்தேன். அதோடு, உன்னை வளர்த்து ஆளாக்க வேண்டிய ஒரு பொறுப்பும் அவளுக்கு வந்து விட்டது. உன்னை அவளால் புறக்கணிக்க முடியாத நிலை.... யாரும் உதவிக்கு வரவில்லை. யாரும் உதவிக்கு இல்லவும் இல்லை.''

காத்யாயினிக்கும் மதுராம்பிகைக்கும் உள்ள உறவு இவ்வளவு ஆழமானதா ! ஒரு பெரிய சங்கிலித் தொடரே வருகிறதே !

'' ஆரம்பத்தில் உன்னிடம் இவைகளைக் கூறவில்லை. ஒன்றுமே தெரியாதவள்போல் இருந்து விட்டேன் இல்



''அவசர உதவி கோரிப் பெண் போலீசுக்கும் போன் செய்திருக்கீங்களே! என்ன வேணும்?''

''நானும் என் மனைவியும் சினிமா பார்த்துவிட்டு வரும் வரை, குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டும்!''

லையா?'' என்று சொல்லிவிட்டு மதுராம்பிகை சிரித்தாள்.

"**நீ**ங்க மதுராம்பிகைக்கு என்ன உறவு?'' என்று பாஸ்கரன் வெகுளித்தனமாய்க் கேட்டான்.

''எந்த உறவும் இல்லை. இங்கே நான் ஒரு பேயிங் கெஸ்ட் — வேண்டப் படுகிற விருந்தாளி. எந்த நிமிஷத்திலும் நான் இங்கிருந்து கிளம்பலாம். ஆனால் மதுராம்பிகையின் தனிமை, அவர் என்னிடம் காட்டுகிற அளவற்ற அன்பு, இவை தான் என்னை இங்கே கட்டுப் போட்ட மாதிரி இருக்கிக் கொண்டிருக்கிறது.''

''நீங்கள் போய் விடுவீர்களா ?''

''போய்விடலாம். போகாமலும் இருக்கலாம். இரண்டும் என் விருப்பம். அதுதான் சொன்னேனே, மதுராம்பிகையின் அன்பு என்று. ஏன், எதற்காகக் கேட்கிறீர்கள் ?''

''சும்மாதான் கேட்டேன்'' என்று நகைத்தான் பாஸ்கரன்.

''திடீரென்று இக்கேள்வி கேட்கத் தோன்றுவானேன்?''

''ஒன்றுமில்லை. அம்மா உங்கள் மேலே வைச்சிருக்கிற அன்பு, உங்க கிட்டே பழகுகிற விதம் இவைகளைப் பார்க்கிற போது, நீங்க அம்மாவுக்கு ஏதேனும் உறவு முறைப் பெண்ணாக இருப்பீர்கள் என்ற சந்தேகம்.''

'' சந்தேகம் வேண்டாம். உங்க அம்மாவுக்கும், எனக்கும் எந்தவித உறவுமில்லை.....''

"**எ**வ்வித உறவும் இல்லையாம். பனிச்சென்று சொல்லி விட்டாள்'' என்றான் பாஸ்கரன், பரமேசுவரனிடம்.



ஏவுகணை :

அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது சூறாவளி ஏற்படாமல் தடுக்கப் புது வழியை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு கண்டுபிடித்துள்ளது. மேகங்கள் மீது சில்வர் அயோடைட் தூள்களைத் தெளிக்கும் ஏவுகணைகளுடன் காணப்படுகிறார் இந்த மேற்கு ஜெர்மானிய விவசாயி.

ஏவாத கணை !

அமெரிக்க அமெச்சூர் ஓட்டப் பந்தய வீரர்களும் பயிற்சியாளரும் அடங்கிய ஒரு குழு ஒரு வார காலம் சென்னையில் தங்கி ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் தமிழக ஓட்டப் பந்தய வீரர்களுக்குப் பயிற்சி அளித்தது. படத்திலுள்ள பாரி மெக்லர் அம்பு போலப் பாய்ந்து டிரிபிள் ஜம்பில் 15.38 மீட்டர் தாண்டிப் புகழ் பெற்றவர். தமிழகத்தைச் சேர்ந்த 46 'கோச்'களும் 34 ஓட்ட வீரர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். அமெரிக்க ஓட்டப்பந்தய வீரர்கள் குழு புதுதில்லி, பாடியாலா, கல்கத்தா நகரங்களிலும் பயிற்சி முகாம் நடத்தியது.



''அவன் சாதாரண விருந்தாளி தானும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் அங்கிருந்து போய்விடுவானாம். இதையும் அவன் கூறிவிட்டான்.''

பரமேசுவரன் அறையில் சிந்தனையுடன் உலவிக் கொண்டிருந்தார்.

''எங்கிருந்து வந்திருக்கிறுள் என்பதைக் கேட்டாயா ?''

''இல்லே.''

''விசாரித்துப் பார்.''

'' எதற்காக ?''

''உதை வாங்காதே ! சொன்னதைச் செய்.''

''அவள் கேட்பாளே.''

''கேட்க மாட்டாள். கேட்டால், சும்மாத்தான் கேட்டேன் என்று சமாளியேன். இதுகூட நான்தான் சொல்லித் தர வேண்டுமாம்..... இடியட்.''

'' பணம் வேண்டும்.'' — பாஸ்கரன் தன் பாண்ட் பைக்குள் கையைவிட்டு அதை வெளியே இழுத்து உதறிக் கொண்டே கேட்டான்.

''பணம் இப்போ இல்லே.''

'' எப்போ இருக்கும் ?''

பாஸ்கரை முறைத்துப் பார்த்தார் பரமேசுவரன்.

'' அங்கே வாங்கிக் கொள்.''

''அங்கே எப்படிக் கிடைக்கும்?''

''திருடு.''

பாஸ்கர் சிரித்தான்.

''ஆகட்டும்...உனக்கும் தரவா?''

''நாய் விற்ற காசு குரைக்காதடா!''

''மனம் என்று ஒன்று இருந்தால் அது உறுத்தும்.''

பரமேசுவரன் அவனை உற்றுப் பார்த்தார்.

'' உன்னைச் சொல்லவில்லே. மனம் இருப்பவர்களைப் பற்றித்தான் சொன்னேன்'' என்றுன் பாஸ்கர்.

'' நான் சொன்னதைச் செய்வாயா? நன்ருகத் தேடிப் பார்...., கிடைக்கவில்லே என்று கையை விரிக்காதே. அங்கேதான் அதற்கு உண்டான தடயம் இருக்கும். அதை கண்டு பிடித்துவிட்டால், அதன் பிறகு ஒரு பெரிய வேலே பாக்கி இருக்கு அதை முடித்துவிட்டால்....'' பாஸ்கரின் தோளின் மேல் கையை வைத்து உலுக்கினர். அப்படி உலுக்கும்போது அவர் முகத்தில் குரூரம் கலந்த நகைப்பு பரவி நின்றது. (தொடரும்)

அலுவலகத்துக்குச் செல்வதற்காக உடை மாற்றிக் கொண்டிருந்தான் செந்தில்.

''போஸ்ட்!'' தெருப் பக்கத்திலிருந்து குரல் கேட்டது.

அரைகுறை ஆடையுடன் ஓடினான் செந்தில். தபால்காரர் ஒரு கவரை அவன் கையில் திணித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

கவரின் மேல் பார்வையை ஓட்டினான்.

திருமதி மாலதி 'செந்தில்.'

அனுப்புநர் முகவரியிலிருந்து 'பூமாரி' பத்திரிகையிலிருந்துதான் அந்தக் கடிதம் வந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

ஆர்வமற்றவனும் அதைப் பிரித்தான் செந்தில்.

திருமதி. மாலதி செந்தில் அவர்களுக்கு.

வணக்கம். பூமாரி வெள்ளி விழா நாவல் போட்டிக்குத் தாங்கள் அனுப்பி யிருந்த 'அன்பின் அழைப்பு' என்ற நாவலுக்கு இரண்டாவது பரிசு அளிப்பதென நடுவர்களால் ஒருமனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. பரிசளிப்பு விழா விரைவில் நடைபெறும். —ஆசிரியர் (பூமாரி)

கடிதத்தை மடித்தான் செந்தில். கவருக்குள் போடவில்லை. அப்படியே இரண்டையும் மேஜையின் மேல் வீசியெறிந்துவிட்டு உடை அணிந்துகொள்ள உள் அறைக்குச் சென்றான்.

ஒரு கையில் பிளாஸ்கும், இன்னொரு கையில் டிபன் டப்பாவுமாகச் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள் மாலதி. ''தபால்காரரின் குரல் கேட்ட மாதிரி இருந்ததே!''

''மேஜையின் மேல் கிடக்கிறது. பார்த்துக் கொள். என்ன தொணதொணப்பு?'' — பித்தானைச் சரி செய்தபடியே ஆத்திரமாக வெளியே வந்தான் செந்தில்.

கையிலிருந்தவைகளைக் கீழே வைத்துவிட்டு மேஜைக்கு அருகில் வந்தாள் மாலதி. கடிதத்தை எடுத்துப் படித்தாள். குப்பென்று உள்ளம் பூரித்தது. அதன் பிரதிபலிப்பு முகத்துக்கு வருவதற்குள், மிகச் சிரமப்பட்டு அதை உள்ளுக்கு விழுங்கிக் கொண்டாள். கணவனின் சிடுசிடுப்புக்குக் காரணம் விளங்கிவிட்டது அவளுக்கு.

'' பல எழுத்தாளர்கள் பெண்களின் பெயருக்குள் ஒளிந்து கொள்வது ஏன் என்று புரியாமல் இருந்தது எனக்கு. இப்போதுதான் தெரிகிறது. பத்திரிகாசிரியர்கள் பெண் எழுத்தாளர்களின் கதைகளுக்குத்தான் முதலிடம் கொடுக்கிறார்கள்'' என்றான் செந்தில்.

'' என்றாலும் இதை ஒப்புக் கொள்ள முடியாது.'' தன்னை அறியாமல் சொல்லிவிட்டாள் மாலதி.

''நீ ஒப்புக் கொள்ளாவிட்டால் போயேன். உண்மை அதுதான்.''

பதிலுக்குப் பதில் பேசி மனக் கசப்பை வளர்ப்பானேன் என்று மௌனமாக இருந்தாள் மாலதி.

'' உன் நாவலைவிட என் நாவல் புதுமையான கதைக் கருவைக் கொண்டது. நியாயமாகப் பார்த்தால் என் நாவலுக்குத் தான் பரிசு கிடைத்திருக்க வேண்டும். உன் நாவல் வெறும் இலக்கியக் கோவைதான். அதற்குப் பரிசு என்றால்..... பத்திரிகை ஆசிரியர்கள் பெண்களின் எழுத்துக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது தானே பொருள்?'' செந்தில் விடாப்பிடியாக அவள் வாயைக் கிளறினான்.

வேறு வழியில்லாமல் மாலதியும் பேச வேண்டியதாயிற்று.

'' சில சமயங்களில் விறுவிறுப்பான சம்பவங்களைக் கொண்டு புனையப்பட்ட கதைகளுக்கு அதிகமான வரவேற்பு இருப்பதுண்டு.



பண்பின் பெட்டகம்

கே. ஜெயலக்ஷ்மி

அது ஒரு சீஸன். சில சமயங்களில் இலக்கிய நயம் மிகுந்த மனோதத்துவக் கதைகளுக்கு வரவேற்பு இருக்கும். அதுவும் ஒரு சீஸன். இப்போது இலக்கிய நயம் மிகுந்த கதைகளுக்கு சீஸன்போலிருக்கிறது!'' என்றாள்.

''சீஸனாவது மண்ணாங்கட்டியாவது...... அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னால் இதை நிரூபிக்க முடியும். 'பொற்குடம்' பத்திரிகையில் சிறுகதைப் போட்டி வைத்திருக்கிறார்கள் அல்லவா ?''

''ஆமாம்....''

''அந்தப் போட்டிக்கு, நாம், என் கதையை உன் பெயரிலும், உன் கதையை என் பெயரிலும் அனுப்பி வைப்போம். பரிசு யாருக்குக் கிடைக்கிறது என்று பார்க்கலாம்....'' என்று ஆலோசனை கூறினான் செந்தில்.

''வேண்டாம், வேண்டாம்.''

''ஏன் வேண்டாம்?''

''நீங்கள் கலந்து கொள்கிற எந்தப் போட்டியிலும் நான் இனிமேல் கலந்து கொள்வதாக இல்லை. ஏன்.... எழுதுவதையேகூட நிறுத்திவிடலாம் என்று தோன்றுகிறது'' என்றாள் மாலதி.

''தொடர்ந்து எழுதுவதும், எழுதுவதை நிறுத்துவதும் உன் விருப்பம் அல்ல. ஞாபகம் இருக்கட்டும்'' என்று சொல்லிக் கொண்டே அவன் நகர்ந்து விட்டான்.

வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு ஓடி வந்து படுக்கையில் பொத்தென்று விழுந்தாள். இவ்வளவு நேரமாக அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. வாய்விட்டு அழுதாள் மாலதி.

நாவல் போட்டியில் பரிசு பெறுவது எவ்வளவு பெருமைப்பட வேண்டிய விஷயம்? எல்லாம் தலை கீழாக மாறிவிட்டதே ! மாலதியின் உள்ளம் வேதனையில் புழுங்கியது.

மாலதியின் சொந்த அத்தை மகன்தான் செந்தில். திருமணத்துக்கு முன்பே இருவரும் பத்திரிகைகளுக்கு எழுதிக் கொண்டுதான் இருந்தார்கள். செந்தில் தன்னை மணக்க விரும்புவதாகத் தெரிவித்த போது, மாலதி மிக நாசூக்காக அவனுடைய விருப்பத்துக்கு மறுப்புத் தெரிவித்தாள்.

''ஏன் மாலதி, அப்படிச் சொல்கிறாய்? எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா ?'' என்று உற்சாகமாகப் பேசினான் செந்தில்.

''அப்படியானால் ஒன்று. திருமணத்துக்குப் பிறகு நான் எழுதுவதை நிறுத்திவிடுவேன்... சம்மதமானால்.....'' என்றாள் மாலதி.

''சரியாய்ப் போச்சு போ! நீ எழுதுகிறாய் என்பதற்காகத்தானே நான் உன்னை அதிகமாக விரும்புகிறேன்.....? கணவன் – மனைவி இருவருமே எழுத்தாளராக இருந்தால்.... ஆஹாஹா ! எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா மாலதி ?'' கற்பனை லோகத்தில் சஞ்சரித்தவாறே வினவினான் செந்தில்.

''அதுதான் இல்லை, அத்தான் ! கணவனும் மனைவியும் ஒரே துறையில் ஈடுபடுபவர்களாக இருந்தால் அவர்களுடைய வாழ்க்கையில் அன்பும், அமைதியும் நிறைந்த ஆனந்தம் இருக்காது. வீணான பொறாமையும், வெறுப்பும்தான் இருக்கும்.''

''நிச்சயமாக நான் அவ்வளவு சின்னத்தனமாக நடந்து கொள்ள மாட்டேன். மாலதி! நாமே ஒருவரில் ஒருவர் கலந்துவிட்ட பின்பு, பெயரும் புகழும்கூட நம்மிருவருக்குமே பொதுவானது தானே? சரியென்று சொல்.....'' என்று கெஞ்சினான் செந்தில்.

அன்பை அலட்சியப்படுத்த இயலாத நிலையில் மெள்ளத் தலையை அசைத்தாள் மாலதி.

திருமணமாகி இரண்டு வருடங்களே ஆகியிருந்தன. முதல் வருடத்தில் அவ்வளவாக அவர்களுடைய வாழ்வில் சலனம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. இரண்டாவது வருடத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறு சிறு சலனங்கள் ஏற்படத் தொடங்கின. அவைகளே கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து இன்று விசுவரூபம் எடுத்துவிட்டது.

இனிமேல் எழுதுவதை நிறுத்திவிடுவதுதான் நல்லது என்கிற முடிவுக்கு வந்தாள் மாலதி.

மாலதி எவ்வளவோ மறுத்தும் கூடக் கேட்காமல் வற்புறுத்தி அவளை ஒரு சிறுகதை எழுதும்படி செய்துவிட்டான் செந்தில். அது மட்டுமல்ல. அவள் எழுதிய கதையைத் தன் பெயரிலும், தான் எழுதிய கதையை அவள் பெயரிலும் 'பொற்குடம்' பத்திரிகையின் சிறுகதைப் போட்டிக்கு அவனே அனுப்பி வைத்து விட்டான்.

மூன்று மாதங்கள் விரைந்தன.

அன்றைய தபாலில் தன் பெயருக்கு வந்த தபாலைப் பிரித்துப் படித்தான் செந்தில். 'பொற்குடம்' பத்திரிகையின் ஆசிரியர்தான் எழுதியிருந்தார்:



திருவாளர் செந்தில் அவர்களுக்கு,

வணக்கம். சிறுகதைப் போட்டியில் தங்களுடைய 'பண்பே பகையானால்' என்ற சிறுகதை முதல் பரிசு பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ்ப் புத்தாண்டு அன்று பரிசளிப்பு விழா நடைபெறும்.

ஆசிரியர் (பொற்குடம்)

'' இப்போது என்ன சொல்கிறீர்கள்?''– கணவனின் பின்னால் நின்றிருந்த மாலதிதான் கேட்டாள் இப்படி.

''கர்வமா?'' என்று சீறினான் அவன்.

'' எதற்காக ?''

'' எந்தப் பெயரில் எழுதினாலும் பரிசு பெறுகிற தகுதி உன் கதைகளுக்குத்தான் உண்டு என்று நினைக்கிறாய் நீ! அப்படித் தானே ?'' அவளால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

'' நான் எப்படியும் நினைக்கவில்லை. எப்போதுமே பரிசு பெறுகிற தகுதி கதைக்குத் தானே தவிர அதை எழுதுபவருக்கு அல்ல என்பதே என் எண்ணம். நீங்கள் நினைக்கிறபடி பெண்பால் பெயரிலோ—ஆண் பெயரிலோ இல்லை என்பதை இதோ இந்தக் கடிதம் மெய்ப்பித்துவிட்டதல்லவா?'' கணவனின் மனோபாவத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்து பார்க்க எண்ணினாள் மாலதி.

'' அப்படியானால் என் கதைகள் நல்ல தல்ல என்கிறாய்......''

''நான் பஞ்சாயத்தாரில் ஒருவரல்லவே!''

இச்சமயம் வாசலில் படகு போன்ற ஒரு பெரிய கார் வந்து நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கி உள்ளே வந்தார்கள்.

''இதுதானே எழுத்தாளர் செந்தில்நாதனுடைய வீடு ?''

''ஆம், நான்தான் செந்தில்நாதன். என்ன வேண்டும், உங்களுக்கு ? உட்காருங்கள் !'' என்று பிரம்பு நாற்காலிகளைக் காட்டினான் செந்தில்.

''கமலவேணி பிலிம்ஸிலிருந்து வருகிறோம். உங்களுடைய 'பண்பின் பெட்டகம்' என்ற நாடகத்தை நாங்கள் திரைப்படமாக எடுக்க விரும்புகிறோம். அதற்காகத்தான்.''

ஒயிலாக மனைவியின் பக்கம் திரும்பினான் செந்தில். அவனுக்குப் பெருமை நிலைகொள்ளவில்லை.

'கடவுளே! உனக்கு நன்றி!' என்று மனதுக்குள் எண்ணமிட்டபடியே காப்பி கொண்டு வர உள்ளே சென்றாள் மாலதி.

அவர்கள் போனபிறகு கையில் நோட்டுக் கட்டுடன் மனைவியின் அருகில் வந்தான் செந்தில்.

''மாலதி! இப்போது என்ன சொல்கிறாய்? உன் நாவலுக்குப் பரிசாகக் கிடைத்தது இரண்டாயிரம்தான். என் நாடகத்தைப் படமாக எடுக்கவோ...ஐயாயிரம்....'' நோட்டுக் கட்டை அவளுடைய முகத்தருகில் தூக்கிப் பிடித்துக் காட்டினான் செந்தில்.

ஏதோ சொல்ல வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. ஆனால் சொல்லவில்லை.

சூடாக நாவின் நுனிக்கு வந்துவிட்ட வார்த்தைகளை மென்று விழுங்கினாள். ஏனெனில், அவள் ஓர் எழுத்தாளர் என்ற அளவில் நியாயமான கர்வத்துடன் மனைவி என்ற முறையில் அடக்கத்தையும் குறைவறப் பெற்றிருந்தாள்.

வட்டமேஜை

இரண்டாவது சம்பளக் கமிஷன் ஆசிரியர்களது சம்பளவிகிதம், ஓய்வு காலப் பென்ஷன், குடும்ப பென்ஷன், கிராக்கிப்படி ஆகியவற்றில் நல்ல தரவல்ல மாறுதல்களைச் செய்து ஓரளவு நியாயம் வழங்கியுள்ளது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

ஆனால், 1970ம் ஆண்டுக்குமுன் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விஷயத்தில் இந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

அவர்கள் உத்தியோகத்தில் இருந்த காலத்தில் சம்பள விகிதம் வெகு குறைவு. நாளுக்கு நாள் ஏறி நிற்கும் விலைவாசிகள் காரணமாக அவர்கள் எதுவுமே மிச்சம் பிடித்திருக்க முடியாது. தற்சமயம் பெறும் பென்ஷன் தொகையோ மிக மிகக் குறைவு.

எலிமெண்டரி கிரேட், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் விஷயத்தில், புதிய சம்பள விகிதத்தின் அதிகபட்சத்தைக் கடைப்பிடிக்காவிட்டாலும் அடிப்படை ஆரம்பச் சம்பளத்தையாவது கணக்கில் எடுத்துக் கொண்டு, 37½ சதவிகித பென்ஷனையும், பஞ்சப்படியில் பாதியையும் பென்ஷனாகத் தந்தால் அவர்களுக்கு முறையே ரூ. 78.75.ம் 101.25ம் கிடைக்கும். அதோடு குடும்பப் பென்ஷன் முதலிய மற்றச் சலுகைகளும் அவர்களுக்குக் கிட்டும்படி செய்தால் நலமாயிருக்கும்.

ஏணியாக நின்று உயரத் தூக்கிவிடும் ஏழை ஆசிரியர்கள் விஷயத்தில் அரசாங்கம் இந்தக் கௌரவமான முடிவை எடுக்கும் என்று எதிர்பார்க்கலாமா ?

விழுப்புரம்
1–12–73 எஸ். அமிர்தம்

கடந்த பல வருடங்களாகப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற பட்டதாரிகள் தினத்தன்று பட்டம் பெறுகின்ற கன்னியர்களுக்கும், காளையர்களுக்கும் இலவசமாக ''பகவத்கீதை'', ''திருக்குறள்'', ''பைபிள்'' இன்னும் பல சமய நூல்களை வழங்கிக்கொண்டிருந்தனர்.

ஆனால் இவ்வாண்டில் நவம்பர் மாதம் 9ந் தேதி நடைபெற்ற பட்டதாரிகள் தினத்தன்று இலவசமாக வழங்கிய புத்தகமோ ஈ.வெ.ரா. பெரியார் அவர்களின் கருத்துக்கள் அடங்கிய, இராமாயணத்தைத் தூற்றுகிற, கடவுளைப் பற்றியும் சமயங்களைப் பற்றியும் அவதூறான கருத்துக்களைக் கொண்ட புத்தகம்.

ஒரு மதத் தலைவரின் படத்தைப் பிரசுரித்ததற்காக ஒரு பத்திரிகையை வரவொட்டாமல் செய்த மத்திய அரசு ஒரு புறம். என்னதான் மதாபிமானிகளின் மனத்தைப் புண்படுத்தினாலும் அதைப் பார்த்தும் பாராததுபோல் நடந்துகொள்ளும் மாநில அரசு மறுபுறம்!

சென்னை–7
20–11–73 கே. மோகன்



உதயம் புரொடக்ஷன்ஸ்
"சொல்லத்தான் நினைக்கிறேன்!"
திரைக்கதை வசனம் டைரக்ஷன்
K. பாலசந்தர்
கதை:
மணியன்
இசை:
M. S. விஸ்வநாதன்
தயாரிப்பு:
மணியன்
வித்வான்லட்சுமணன்
சென்னை
ஓடியன் A.C அகஸ்தியா 70 M.M.
கமலா • சயானி
மற்றும் தமிழகமெங்கும்

பஞ்சின் மென்மையும் இரும்பின் உறுதியும்

இந்தியப் பஞ்சாலை சம்மேளனத்துக்குத் தலைவராக நடப்பு ஆண்டுக்குக் கோவை திரு ஜி. கே. சுந்தரம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதில் பஞ்சாலைத் தொழிலதிபர்கள் மட்டுமின்றித் தமிழ் நாடே மகிழ்ச்சி அடைகிறது.

திரு ஜி. கே. சுந்தரம் கோவை நகரத்திலே பிறந்து, அதனுடன் இணைந்தே வளர்ந்தவர். பரம்பரைத் தொழிலதிபர். திரு சுந்தரத்தின் தந்தை திரு குப்புஸ்வாமி நாயுடு உழைத்து சாமான்ய நிலையிலிருந்து உயர்ந்தவர். கோவையைப் பஞ்சாலை நகரமாக ஆக்கப் பாடுபட்ட பெரியார்களுள் அவரும் ஒருவர். எனவே தொழில் ஆர்வம், தொழில் நிர்வாகம் எல்லாம் திரு சுந்தரத்துக்கு ரத்தத்தில் ஊறியவை. 1935ம் ஆண்டில் கல்லூரிப் படிப்புக்குப் பின் நூற்பாலை நுண்ணறிவைப் பெற இங்கிலாந்து சென்று விசேஷப் படிப்பும் பட்டமும் பெற்றார் சுந்தரம். கால மாறுதல்களுக்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் ஏற்ப, தொழில்களைப் பஞ்சாலை, நூற்பாலை, நெசவாலையிலிருந்து விஸ்தரித்து, செயற்கை நூல் தயாரிப்பு, ஆலை யந்திரங்கள் உற்பத்தி போன்ற பல துறைகளுக்கும் திருப்பித் திறம்பட நடத்தி வருகின்றனர், திரு சுந்தரமும் அவரது சகோதரர்களும்.

தாம் பெற்ற அனுபவத்தைப் பிற ஆலைகளுக்கும் பயன்படச் செய்ய வேண்டும் என்ற சீரிய மனப்பான்மையுடன், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் காரியதரிசியாகவும், பின்னர் தலைவராகவும் சிறப்புப் பணி ஆற்றியிருக்கிறார் திரு சுந்தரம். தொழில் முன்னேற்றத்துக்கு ஆராய்ச்சி அவசியம் என்பதை நெடுநாட்களுக்கு முன்னரே உணர்ந்திருந்தார் அவர். அதற்கு உருவம் கொடுக்க வேறு பல பிரமுகர்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் தென்னிந்திய பஞ்சாலை ஆராய்ச்சிச் சங்கம்.

மென்மையான மனத்தாலும் பழகுகிற விதத்தாலும் திரு சுந்தரம் பஞ்சு போன்றவர்தான். ஆனால் ஒழுக்கக் குறைவை அண்டவிடாமலிருப்பதிலும் கடமையாற்றுவதிலும் இப் பண்புகளை மற்றவர்களிடம் எதிர்பார்ப்பதிலும் இரும்பு உள்ளம் கொண்டவர். காந்தியத்தில் சிறு வயதிலேயே பற்றுக் கொண்டார். வேதாரண்ய உப்புசத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டார். 1930ம் ஆண்டில் பதினேழு வயது மாணவராக இருந்தபோதே ஆறு மாதம் சிறைவாசம் அனுபவித்திருக்கிறார் என்றால், திரு சுந்தரத்திடம் தேச பக்தியும் காந்திய உணர்ச்சியும் எவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளன என்பது புரியும். இந்த நாட்டுப் பற்றும் காந்திய சிந்தனையுமே பூஜ்ய ராஜாஜி சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த போது அதில் சேருவதற்குக் காரணமாய் அமைந்தன: இன்று தமிழ்நாடு சுதந்திரக் கட்சியின் தலைவராக விளங்குகிறார்.

அரசியல்வாதிகளும் தொழிலதிபர்களும் அவரைப் போற்றுவது ஒருபுறமிருக்க, தொழிலாளர்களும்கூட, திரு சுந்தரத்திடம் பெருமதிப்பு கொண்டு பாராட்டுகிறார்கள். லக்ஷ்மி ஆலையின் வைர விழாவின்போது தொழிலாளர் தலைவர்கள் பலர் திரு சுந்தரத்தைப் பாராட்டியது உபசாரத்துக்காக அல்ல. மனப்பூர்வமான வார்த்தைகளே. தொழிலதிபராகட்டும், தொழிலாளர் தலைவராகட்டும் எவருக்காவது எங்கேயாவது சந்தேகம்எழுமேயானால் ஜி. கே. எஸ். என்ன சொல்லுகிறார் என்று ஆலோசனை கேட்கத் தவற மாட்டார்கள்.

ராஜ்ய சபையில் அங்கத்தினராக அவர் பணியாற்றிய ஆறு ஆண்டு காலத்தில் அந்த அரங்கில் அவர் பேசிய பேச்சுக்களில் நாட்டுப் பற்றும், நாட்டின் முன்னேற்றத்தில் அவருக்கிருந்த அக்கறையும், தவறுகளை எடுத்துக்காட்டுவதில் தீவிரமும், அவற்றைத் திருத்த முற்படுவதில் பண்பும் பளிச்சிட்டன.

காந்திய வழியில் செல்லும் திரு சுந்தரம், தாம் பெற்ற செல்வம் பிறருக்கும் பயன்பட வேண்டும் என்று, குப்புஸ்வாமி நாயுடு ஞாபகார்த்த தரும ஸ்தாபனம் ஒன்றைத் தம் குடும்பச் சொத்திலிருந்து நிதி ஒதுக்கி நிறுவியுள்ளார். அதன் ஆதரவில் ஒரு பெரிய நவீன மருத்துவ மனையும், மணி உயர்நிலைப் பள்ளியும் மக்களுக்குக் கல்விச் செல்வத்தையும் தேக நலத்தையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. அவருடைய குடும்பக் கோயிலாகவே கோவை — பாப்பா நாயக்கன் பாளையத்தில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமான் கோயிலின் தர்மகர்த்தாவாகவும் விளங்குகிறார் திரு சுந்தரம்.

நாட்டின் பெரும்பான்மையான நூற்பாலைகள் பம்பாய், ஆமதாபாத் நகர்களில் இருந்த போதிலும் அந்தத் தொழிலதிபர்களும் மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து திரு சுந்தரத்தை இந்தியப் பஞ்சாலை சம்மேளனத்தின் தலைவராக நியமித்துக் கொண்டதில் அதிசயமில்லை. திரு சுந்தரம் அப்பதவி வகிக்க முற்றிலும் தகுதி உடையவர் என்பது நமக்கே தெரியும் போது தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு அது புரியாமல் போகுமா என்ன?

புதிய தலைவர் திரு ஜி. கே. சுந்தரத்துக்கு அடுத்த ஆண்டில் அறுபதாண்டு நிறைவு விழாவும் நடக்கவிருக்கிறது. அவரது உருவப் படத்தை இவ்விதழ் மேலட்டையில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறோம்.





நிர்மால்யம்

இரண்டு முழம் பூ வாங்குகிறோம். ஒரு முழப் பூவைச் சாமி படத்துக்குச் சாத்தி மீதியுள்ள பூவை வீட்டிலுள்ள பெண்ணின் கையில் கொடுக்கிறோம். அவள் தலையில் சூடிக் கொள்கிறாள்.

இரண்டுமே மறுநாள் வாடி வதங்கிக் காட்சியளிக்கின்றன. பெண்ணின் கூந்தலிலிருந்த புஷ்பத்தைக் குப்பையில் போடுவோம். சாமி படத்துக்குப் போட்டிருந்த பூவை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு யார் காலிலும் படாதபடி வீட்டுக் கூரை மீது போட்டு வைப்போம்.

வாடிய நிலையிலும் அதற்கு ஒரு புனிதம் இருக்கிறது. அதற்குத்தான் நிர்மால்யம் என்று சொல்கிறோம்.

பகவதி கோவில் பூசாரியாகிய வெளிச்சப்பாடு வாழ்க்கையில் எவ்வளவு துன்பப்பட்டாலும் பகவதியினிடத்தில் தளராத பக்தியும் நம்பிக்கையும் கொண்டவன். அன்னை பகவதிக்குத் தன்னையே மலராக அர்ப்பணித்துக் கொண்டவன். ஆனால் அன்னை அவனுக்குத் துன்பத்துக்கு மேல் துன்பமாகவே அருளுகிறாள். கடைசியில் அவன் அன்னையின் மீது வெறுப்பே கொள்கிறான். அன்னையை நோக்கி உமிழவே செய்கிறான்!

அப்பகுதி ஆவேச ஆட்டத்தில் அப்படி உமிழ்வதும் ஒரு சடங்காம். ஆனால் ஆவேசத்தில் தன்னை மறந்த செயலாக மட்டுமின்றி, பகவதி தன்னைப் படுத்திய பாட்டுக்கு வெறுப்பைக் காண்பிக்கவே உமிழ்ந்தாற் போலிருக்கிறது.

இப்படிச் செய்தவன் குப்பையில் எறியப்பட வேண்டியவனா — இல்லை — கண்ணில் ஒற்றிக்கொள்ளப்படும் புனித நிர்மால்ய புஷ்பம் என்பதே இக்கதாசிரியரின் கருத்து. மிக அருமையாகக் கொண்டு வந்திருக்கிறார் இக்கருத்தினை இப்படத்தில்.

மேம்போக்காகப் பார்க்கிறவர்கள் இது ஒரு போர் அடிக்கும் படம் என்று சொல்லி விடுவார்கள். திரைப் படக் கலையில், அதன் தரம் உயர்வதில், ஆர்வமும் ஆசையும் உள்ளவர்கள் இதைப் பார்த்து ரசித்து மதிப்பார்கள்.

'வெளிச்சப்பாடு' என்று அழைக்கப்படும் பூசாரியின் தந்தை பாரிச வாயுவினால் நாக்கும் கால்களும் வழங்காமல், படுத்த படுக்கையாகக் கிடக்கிறார்; எதற்கும் உதவாத தத்தாரியாகச் சுற்றும் மகன்; வயது வந்த இளம் பெண். புதிதாக வந்த கோயில் குருக்கள் பையனை, அந்தப் பெண் கள்ளத்தனமாகக் காதலிக்கிறாள். இன்னும் இரண்டு குழந்தைகள். இக்குடும்பத்தை நடத்த வேண்டிய பொறுப்பிலுள்ள மனைவி.

கோயிலோ வருவோரின்றிச் சிதிலமடைந்து வரும் நிலை. தர்மகர்த்தாவோ தமது யானைக்கு நூறு ரூபாய் செலவழிப்பாரே தவிர வெளிச்சப்பாட்டுக் கோவிலுக்கு ஐந்து ரூபாய் செலவழிக்க மாட்டார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பகவதி வழி காட்டுவாள், சுபிட்சம் மிகுந்த பழைய காலம் திரும்பி வரும் என்ற நம்பிக்கையில், பகற்கனவில் வாழ்கிறான் வெளிச்சப்பாடு.

இப் பாத்திரப் படைப்பைப் பிரபல நாடக நடிகர் ஆண்டோனி ஏற்றுச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

வெளிச்சப்பாடின் மகளாகச் சுமித்ரா மிக நன்றாக, பேசாமல் பேசி நடித்திருக்கிறாள்.

இக் கதையை எழுதியவர் புகழ் பெற்ற மலையாள நாவலாசிரியர் எம். டி. வாசுதேவன். படம் எடுத்தவர், டைரக்ட் செய்தவர் எல்லாம் அவரே.

பல பல உத்திகளைக் கையாண்டு படத்தைச் சிறப்பித்திருக்கிறார். பொழுதுபோக்குப் படமல்ல. பொழுதைப் பயன்படுத்த உதவும் படம்.

—எஸ். வீ. எஸ்.



கல்லும் கனியாகும்

சுப்பிரியா



புதிதாக மாற்றப்பட்ட இடத்தில் எப்படி இருக்குமோ என்ற கவலையுடன் வந்த லலிதாவுக்குப் புதுப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரைக் கண்டதும் சற்றுப் பயம் தெளிந்தது எனலாம். தலைமை ஆசிரியர் என்றாலே ஒரு கிழம், கோட்டு, தலைப்பாகையுடன் கடுகடுத்த முகமும், குற்றம் காணும் மனப்பாங்குமாகவே கற்பனையிலும், இதுவரை அனுபவத்திலும் கண்டிருந்த அவளுக்கு நடுத்தர வயதும், கம்பீரமான தோற்றமுமாக 'ஸ்மார்ட்'டாக உடுத்திக் கொண்டு எதிரே நின்ற ராகவனைக் கண்டதும் ஓரளவு தெம்பாகக் கூட இருந்தது. மகா கண்டிப்புக்காரர், வேலையில் படு உஷார் என்றெல்லாம் அவரைப் பற்றிக் கூறியவர்கள், ''ஆனால் எல்லாத் தர்பாரும் இந்தப் பள்ளிச் சுவருக்குள்தான்... வீட்டில்... ஓ... அதனால் என்ன, மனைவிக்குத் தோழனாய், தொண்டனாய்ப் பழகி விட்டார்'' என்றும் கூறாமல் இல்லை. லலிதாவுக்கு அவரைக் கண்டதும் பிந்தைய அபிப்பிராயம்தான் முந்திக் கொண்டு நினைவில் வந்தது. இத்தனை கம்பீரமும் அழகும் உடைய அவரை ஆட்டுவிக்கும் 'அவள்' எப்படி இருப்பாள் என்று அவளால் கற்பனை செய்யாதிருக்க முடியவில்லை.

''மிஸ் லலிதா! எங்கள் தெருக் கோடியில் பழைய ஆசிரியர் இருந்த வீடு காலியாயிருக்கிறது என்று நினைக்கிறேன். என் மனைவி அந்த வீட்டுக்காரிக்கு வேண்டியவள். நீங்கள் மாலையில் வந்தால் அவளுடன் அந்த வீட்டைப் பார்க்கலாம்'' என்று நட்பு முறையில் ராகவன் பேசியபோது லலிதாவுக்குப் பிடித்திருந்தது. அத்துடன் ஏதோ ஒன்று அவள் உள்ளத்திலும் எதிரொலித்தது.

பதினைந்து வருடசர்வீஸில் இத்தனை அன்பாக அவள் பார்க்கும் இரண்டாவது 'தலைமைப் பீடம்' இது. முதல் முதல் அவள் ஆசிரியையாகச் சேர்ந்த அந்த மானேஜ்மெண்ட் பள்ளித் தலைமை ஆசிரியரை அவளால் மறக்கத்தான் முடியவில்லை. மறதி என்பது அவள் அகராதியில் 'அந்த' விஷயத்தைப் பொறுத்த வரை அழிந்து போய் விட்டதோ என்னமோ!

''போயும் போயும் அந்தத் தெருவுக்கா குடி போகிறீர்கள்? தலைமை ஆசிரியர் வேலை தெட்டி வாங்கி விடுவார். நம் பள்ளிக்கூடம் சர்க்கார் பள்ளிக்கூடம் இல்லை. ஜில்லா பரிஷத்தைச் சேர்ந்தது. நம்மிடம் ஏதாவது குறை கண்டு விட்டார்களோ — லோக்கல் பாடிஸ்' வைத்ததுதானே சட்டம் — வேண்டாத இடத்துக்கு உடனே தூக்கி விடுவார்கள். எத்தனை 'எஜுகேஷன் கமிஷன்' வந்தென்ன, இந்த 'வட்டார' அதிகாரிகளின் ஆதிக்கத்திலிருந்து நம்போன்றவர்களுக்கு விடுதலையே கிடையாது. தலைமை ஆசிரியர் தரும் வேலைகளுக்கு முகம் சுளித்தீர்களோ, மூட்டை கட்ட வேண்டியதுதான்'' என்று சக ஆசிரியை நிர்வாக ஊழலையும், தங்கள் அவல நிலையையும் பற்றி ஒரு 'லெக்சர்' அடித்து விட்டாள்.

வேறு வழியின்றி ஒண்டிக்கொள்ள ஏதாவது ஓர் இடம் வேண்டுமே என்று புறப்பட்டாள் லலிதா.

''வாருங்கள்... அவர் இதோ வந்துவிடுவார்...'' கதவைத் திறந்து வரவேற்றவளைப் பார்த்த லலிதா திடுக்கிட்டாள்.

''நீ..... நீங்கள்...மைதிலிதானே...?''

''நீங்கள்... ஓ... லலிதா டீச்சர்! அடடா! என்ன ஆச்சரியம் பாருங்கள்; இத்தனை பரந்த உலகிலும் எதிர்பாராதவர்களையும் எப்படியாவது சந்திக்கிறோம்...உட்காருங்கள்!''

லலிதா மைதிலியின் முகத்தை உற்று நோக்கினாள். தன்னைச் சந்தித்ததில் அவள் காட்டுவது உண்மையான மகிழ்ச்சியா...அல்லது? போச்சு. இனி வீடு தேடவே வேண்டாம்! ''தலைமை ஆசிரியர் வீட்டில் தோழனாய்.... தொண்டனாய்....'' அவ்வாக்கியம் நினைவில் நின்று எச்சரித்தது. ஊஹும், இந்த ஊரில் தங்கமுடியாது இனி. இவள் தங்க விடுவாளா?



''இல்லே, நான் போய் வருகிறேன்... அப்புறமாக....''

''அடடா, என்ன இது? என்னுடன் பேசக் கூடாதா? நானும் யாராவதுபேச்சுத் துணைக்கு அகப்பட மாட்டார்களா என்று தவித்துக் கொண்டிருக்கிறேன் ... உட்காருங்கள் டீச்சர்!''

''நிஜமாகவா?'' — லலிதா ஏதோ கேட்டு வைத்தாள். 'என்னுடன் பேசுவீர்களா? நான் பெண்தானே... வீட்டில் புருஷர்கள் இருந்தால்....' என்று அந்தக் குரல் கூறுகிறதோ? லலிதா நடுங்கினாள். 'பாக்' செய்த சாமான்களைக் கூடப் பிரிக்க வேண்டாம். அடுத்து எந்தத் தண்ணீர் இல்லாக் காட்டுக்கு உத்தரவு வருகிறதோ.... ஈசுவரா! வாழ்வில் செய்த ஒரு சிறு தவறுக்காக ஆயுள் தண்டனையா? லலிதாவின் மனம் எண்ணுவதெல்லாம் எண்ணியது. அவள் துவண்டுபோய் உட்கார்ந்து விட்டாள்.

''ஒரு நிமிஷம். காப்பி கொண்டு வருகிறேன். ஓ! நீங்கள் காப்பி சாப்பிட மாட்டீர்கள் அல்லவா? போர்ன்விட்டாவா?— கூல் ட்ரிங்க்ஸா?'' என்று மைதிலி எதிர் நாற்காலியில் சாய்ந்தபடி கேட்டாள்.

அப்பா! எத்தனை ஞாபகசக்தி! மைதிலி, நீ ஒன்றையும் மறக்கவில்லையா? லலிதாவுக்கு வியர்த்தது. ''பானை ஜலம் கொடுங்கள், போதும்.''

''லலிதா டீச்சர், இந்த 'ங்கள்' எல்லாம் எனக்கு எதற்கு? என் கணவர்தான் உங்கள் தலைமை ஆசிரியரே தவிர, நான் உங்கள் மாணவி மைதிலிதான். நீங்கள் என் சயன்ஸ் டீச்சர்தான்....!''

இப்படிச் சொல்லிக் கொண்டே முகத்தைக் காட்டாமல் உள்ளே போய் விட்டாள் நான் ஏமாந்து விடுவேனா? ம்... நடப்பது நடக்கட்டும்... லலிதா தன் கண்களை மூடிக் கொண்டு சாய்ந்தாள்.

''போ...போய் விடு இங்கிருந்து. ஆறு மாதங்கள் கழித்துப் போகும் பிராணனை இப்போதே எடுக்காதே. நன்றிகெட்ட துரோகி.. பெண்ணாக வந்த பேய்... பேய்...'' திடீரென்று ஒரு பெண் குரல் அலறியது.

''லட்சுமி! உனக்கென்ன பைத்தியமா? வியாதி வந்தால் புத்தியும் பேதலித்து விடுமா? இந்தப் பேச்சு அவளை மட்டும் அல்ல, என்னையும் குறை கூறுகிறது'' என்று அவள் கணவன் அதட்டினான்.

''நீங்கள் என்னை அதட்டலாம். ஆனால் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். எனக்குத் துரோகம் செய்யவில்லை? அவள் குலுக்கி மினுக்கி வந்தபோதே நினைத்தேன். அவள் முதல் நாள் மைதிலிக்குப் பாடம் சொல்ல வந்த கோலம் என்ன? இன்றைய 'மிடுக்கு' என்ன? எதற்கு இதெல்லாம்? நோயாளிப் பெண்டாட்டிக்காரன்.... அறியாத பிள்ளைகளுடன் போராடுகிறான்... அம்மா ஒரு கண் தெரியாத ஜென்மம்... அப்படீன்னு... வலை விரிச்சாள்... அவள்... ஐயோ..! என் வாழ்வுக்கு உலை வைத்தாளே... பாவி... நீங்களும்தான் ...என்னை... என்னை... ஏமாற்றி... ஐயோ!



இங்கிலாந்து - இந்திய கிரிக்கெட் டெஸ்ட்களில் ஃ. டி. ஜோன்கர் பீல்டிங் கடர் விட்டுப் பிரகாசித்தது. டெஸ்ட் கிரிக்கெட்டில் பன்னிரண்டு 'காட்ச்'களைப் பிடித்து ஒரு 'ரிகார்டு' கண்டார்.

கல்கத்தா ஏடன் கார்டனில் நடைபெற்ற இந்திய-இங்கிலாந்து டெஸ்டில் ஐந்து நாளும் 70,000 மக்கள் கூடி ஒரு 'ரிகார்டு' ஏற்படுத்தினர்.

1972-73ம் ஆண்டில் இங்கிலாந்து கோஷ்டிக்கும் இந்தியக் கோஷ்டிக்கும் நடைபெற்ற கிரிக்கெட் பந்தயத்தில் இந்தியா தாயகத்தில் 2-1 வெற்றி பெற்றுப் புகழைச் சம்பாதித்துக் கொண்டது. காப்டன் வாடேகருக்கு இது மூன்றாவது 'தொடர்ச்சி'யான வெற்றி. 1971ல் மேற்கிந்தியத் தீவுகளிலும் இங்கிலாந்திலும் இரு மாபெரும் வெற்றிகளைத்

கிரிக்கெட் பேச...

தொடர்ந்த மூன்றாவது வெற்றி இது. இதற்கு முன் வேறு எந்த இந்தியக் காப்டனுக்கும் கிடைத்திராத மாபெரும் வெற்றிகள்.

இப்படிப் பல ரசமான தகவல்களோடு, கிரிக்கெட் பேட்டிகள், விமர்சனங்கள், தேர்ந்த கிரிக்கெட் மன்னர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், உலக, இந்திய ரிகார்டுகள், ரஞ்சி, துலீப் கோப்பைப் பந்தய விவரங்கள் அனைத்தும் கொண்டு Indian Cricket-1973 வெளியாகி இருக்கிறது. இந்த ஆங்கில நூல் கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு பொக்கிஷமாகத் திகழும். கிளைவ் லைடர், பெரி சர்வாதிகாரி, ராஜு பரதன், பிரபு, என். எஸ். ராமசாமி முதலிய பிரபல கிரிக்கெட் விமர்சகர்களின் விசேஷக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கிரிக்கெட் விளையாட்டுத் துறையில் பல வருடங்கள் அனுபவம் பெற்ற விமர்சகர் திரு பி. என். சுந்தரேசன் இந் நூலைத் தயாரித்துள்ளார். கிரிக்கெட் ஆடப் பந்து, மட்டையெல்லாம் வேண்டும். கிரிக்கெட் பேச இந்தப் புத்தகம் வேண்டும். 'ஹிந்து' ஸ்தாபனத்தார் பல படங்களுடன் வெளியிட்டுள்ள இந்த ஆங்கில நூலின் விலை ரூ. 7.50. (தபால் செலவு இலவசம்)

பிரசுரம்: கஸ்தூரி அண்ட் சன்ஸ் லிமிடெட், சென்னை-600002.

போடீ...,'' நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அவள் தாழ்ந்தாள்.

''அம்மா...!''—மைதிலி பாய்ந்து அவளைத் தாங்கினாள். ''லலித்... நீ இப்போதைக்குக் கொஞ்சம் போய்விடு...'' ஆண் குரல் தவறு செய்த குரல் கெஞ்சியது.

தலை குனிந்தபடி வெளியேறினான் டியூஷன் ஆசிரியை! அவன் வாசல் புறம் போகுமுன் ''அம்மா... மோசம் செய்து விடாதே...'' என்ற அலறல் கேட்டது. ''உனக்கு யமனாக அவன் வந்தானே, அம்மா...''

அவன் திரும்பிப் பார்க்கவில்லை. நடத்தான் நடந்து கொண்டே யிருந்தான்.

தவறுதான். ஒரு குடும்பஸ்தன்; இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்று தெரிந்த பின் அவன் அன்பை நம்பியது. அதுவும் மனைவி இருக்கும்போதே ஏற்றது தவறுதான். ஏன், எப்படி அது நேர்ந்தது? ஊரெல்லாம் மாணி, குனிந்த தலை நிமிராதவர் என்று புகழப்பெற்றவர், அவளை மட்டும் ஆவலுடன் நோக்குவானேன்? வயதானதால் இளம் விதவைச் சகோதரி, வயதுக்கு வந்த சகோதரிகள் இவர்கள் முன்னிலையில் சொந்த மனைவியிடம் கூடப் பேசும் ஆசையற்ற ஆண்மகன், அவளிடம் மட்டும் சரணமாகப் பழகுவானேன்? அதுமட்டுமா? குற்றம் யாருடையது? அவன் குற்றமா? அவன் இளமையின் குற்றமா? அல்லது அவருடையதா? அவரது தீராத தாபத்தின் குற்றமா? சந்தர்ப்பக் கோளாறு? இதற்குப் பதில் அளிக்க யாரும் இல்லை.

''தலைமை ஆசிரியர் மனைவி 'படக்' கென்று போய்விட்டாளாமே! என்னமோ அதிர்ச்சியாம், ஆத்திரப்பட்டுக் கத்தினாளாம்... பிராணன் போய்விட்டதாம்... பாவம், ராமு சார்... அந்தக் குடும்பத்தில் அவர் கண்ட சுகம்தான் என்ன...?'' என்ற செய்தியைச் செவிகளில் சுமந்தபடி அன்று வண்டி ஏறியவள்தான். எங்கெங்கோ சுற்றி விட்டு....

''டீச்சர்! 'போர்ன் விட்டா'!''

திடுக்கிட்டு எழுந்தாள் லலிதா.

''தூங்கிவிட்டீர்களா என்ன? டீச்சர், அழுதீர்களா?'' மைதிலி பரிவுடன் அருகில் வந்தாள். நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

''ஒன்றும் இல்லை, மைதிலி! வீட்டைப் பார்க்கப் போகலாமா?''

''எந்த வீட்டை? யாருக்கு? எதற்கு?''

லலிதாவுக்குத் 'திக்'கென்றது. நீ இங்கு எதற்கு வீடு பார்த்துத் தங்கப் போகிறாய் என்கிறாளோ? என் தாயாரின் உயிரைப் பறித்தவள் இங்கு என்ன செய்வாளோ என்று பயப்படுகிறாளோ!

''டீச்சர்....'' மைதிலி நாற்காலியை அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு வந்து அமர்ந்தாள். லலிதாவுக்கு எழுந்து ஓடிவிடலாம் போலிருந்தது.

''டீச்சர்... தனியாகத்தான் இருக்கிறீர்களா? அப்படியானால் என் வீட்டிலேயே...''

''மைதிலி! நானு... உன் வீட்டிலா? விளையாடுகிறாயா அல்லது குத்திக் காட்டுகிறாயா?''

''அடடா! என்னைத் தப்பாக எண்ணிவிட்டீர்கள்....''

''மைதிலி, வேண்டாம். எப்படியும் மாற்றல் வரத்தான் போகிறது. நீ எனக்கு ஏதாவது செய்ய விரும்பினால் அதுவும் என் வயதான தாய்க்காகக் கேட்கிறேன்.... ரொம்ப மோசமான இடமாகப் போடாமல் உதவி செய் மைதிலி!''

''மாற்றலா? யாருக்கு? ஏன் டீச்சர், ஒரே நாளில் எங்கள் ஊர் அலுத்து விட்டதா?''

''ஊர் அலுக்கவில்லை.''

''அப்படியானால் எங்களுடன் இருக்க இஷ்டமில்லை... இல்லையா? அப்போது என் ஆசையெல்லாம் வீண்தான்!'' மைதிலியின் குரலில் உண்மையான ஏக்கம் ஒலித்தது. ''என் குழந்தைகளுக்கும் நீங்களே பாடம் சொல்லித் தருவீர்கள், என் கவலை விட்டது என்று எண்ணினேன்.''



சமைத்தல், துலக்கல், அரைத்தல், இடித்தல்... மாளாத வேலை, தாளாத சோர்வு. நாளெல்லாம் வீடே கதி. வெளி வேலைகளோ அவளுக்கு வெகு தூரம். இதற்கு விடிவு?

நீங்கள் மனது வைத்தால் நடக்கும் க்ளியர்டோன் உதவியோடு. பிரஷ்ஷர் குக்கர், இஸ்திரிப்பெட்டி மிக்ஸர், மின்விசிறி...இதுபோல் பலப் பல க்ளியர்டோன் சாதனங்கள் உள்ளன. வாங்கிக் கொடுத்துப் பாருங்களேன், டான் டான் என்று வீட்டு வேலைகளை முடித்து விடுவாள். அதிக நேரம் மிஞ்சும் வெளி வேலைகளுக்கு.

கிட்டத்திலுள்ள க்ளியர்டோன் வியாபாரியிடம் அவளை இட்டுச் சென்று காண்பியுங்கள்: வகை வகையான வீட்டுபயோக சாதனங்கள். பிடித்தமானவற்றை அவள் எடுத்துக் கொள்ளட்டும். அவள் வாழ்வே மாறிவிடும். உங்கள் வாழ்வும்தான்.



தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ்
கோ. லிட். பம்பாய் • கல்கத்தா • டெல்லி • சென்னை

Kleertone

க்ளியர்டோன்
—வீட்டுபயோக சாதனங்களின் படைப்பகம்

Creative Unit-926 -*Tam.*

பண வீக்கம்: ஒரு விளக்கம்!



சில வருடங்களுக்கு முன் ஐந்து ரூபாய்க்கு வாங்கிய பொருளை இப்பொழுது பத்து ரூபாய் கொடுத்து ரிப்பேர் செய்வது. - பாலி

''மைதிலி! நிஜமாகச் சொல்கிறாயா? உன் குழந்தைகளுக்கு நான் ஆசிரியையாக வருவதா? உங்கள் குடும்பத்துக்கு யமனாக வந்தவள் அல்லவா நான்?'' லலிதாவால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை.

''டீச்சர்...'' ஆதுரத்துடன் அவள் கையைப் பற்றினாள் மைதிலி. ''அப்படி நினைத்தது அறியாப் பருவத்தில் டீச்சர்!''

''அப்படி யென்றால்?''

''டீச்சர்....அன்று எனக்குத் தாய்தான் உலகம்....அவள் செயல்கள் எல்லாமே சரியானவை என்று என் தந்தையைக்கூட எதிரியாக நினைத்த நாட்கள் அவை. ஆனால், காலக் கிரமத்தில் உலகை ஓரளவு உணரும் பருவம் பெற்றபின் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது... நடந்தது தவறல்ல... ஏன், நியாயம்தான் என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.''

''மைதிலி....!''

''டீச்சர்... அன்று என் தந்தையின் நிலைமையை இன்று நான் புரிந்துகொள்ளும் பக்குவம் பெற்றுவிட்டபோது, அவரைத் தூற்றியதும், உங்களை ஏசியதும் எத்தனை தவறு என்று உணர்கிறேன். என் தந்தை 'கர்ம யோகி' போல்தான் வாழ்ந்தார். என்னை மன்னித்து அணைத்தார். நீங்களும் மன்னித்து விடுங்கள் டீச்சர்!''

''நீ என்னம்மா சொல்கிறாய் — புரியவில்லையே!''

''பார்க்கப் போனால் உங்களை நான் பாராட்டிப் போற்ற வேண்டும். என் தந்தையின் வாழ்க்கை ஒரு சோக நாடகம். அதில் இன்ப யாழ் மீட்டியவர்கள் நீங்கள்தான். நான்கு பெண்களுக்கு நடுவில் பிறந்து, ஆறும் வயதில் அவர் தம் தந்தையை இழந்தார். எத்தனை அவல அனுபவங்களிடையே அவர் படித்து உத்தியோகம்ஏற்றார்! இருப்பதைக் கொண்டு சகோதரிகளைக் கடைத்தேற்றித் தாமும் மணந்தார். இயந்திரம், இயந்திரம்தான் அவர் வாழ்வே! சாப்பிடுவது, சம்பாதிப்பது, தூங்குவது, ஏன், மனைவியுடன் உறவாடுவது எல்லாமே ஓர் இயந்திர கதியில் இருந்தது அவருக்கு. அதுவும் ஆறு வருட வாழ்வு. அதன் பின் என் தாய் தீராத இதய நோய்க்கு ஆளானாள். என் தந்தை மறுபடியும் பிரம்மச்சாரியானார். மனைவிக்கும் சேர்த்துச் சேவை செய்யும் பாக்கியம்தான் அவருக்கு மிஞ்சியது. அவரது உணர்ச்சிகள் எல்லாம் என்றும் யாருக்கும் புரியாத கருங்கற்கள்! அவரை ஒரு 'மனிதராக' யாரும் நினைத்ததே கிடையாது. தங்கள் விருப்பத்துக்கு முடுக்கி விட்டு வேலை வாங்கும் ஒரு கருவியாக அவர் தாய், சகோதரிகள், மனைவி எல்லோரும் நினைத்தனர். அவரும் உழைத்தார்.

அந்தக் கல்லில் ஓர் ஈரக் கசிவை, அந்த மரத்த மனசில் ஓர் இனிமை உணர்வைத் தட்டி எழுப்பியவர்கள் நீங்கள். அந்த வாழ்வு, இனிய அனுபவம் அவரைப் பொறுத்தவரை ஓரிரு மாதங்களே யானாலும் அவை காலாந்தரத்துக்கும் மறக்க முடியாத அளவு சுவையானவை என்பதை ஒப்புக் கொள்கிறேன், டீச்சர். அதன் பின் அந்தக் கல் மறுபடியும் இறுகிவிட்டது. அந்த இயந்திரம் பிசாசாக இயங்கியது. உங்களிடம் அவருக்கு ஏற்பட்டது தூய உணர்வு. அது வெறும் இனக் கவர்ச்சி அல்ல. ஏனெனில் என் தந்தை அதற்கு அப்பாற் பட்டவர் என்று ஊர் சொல்லும். நீங்களும் அதற்கு அப்பாற்பட்டவர் என்பதை இதோ இன்றுவரை தனித்திருப்பதன் மூலம் எடுத்துக் காட்டிவிட்டீர்கள். ஆனால் கணவனுக்கு உதவாமல் பல வருடங்கள் படுக்கையாகக் கிடந்த என் தாய், அவரது உழைப்பைப் படுக்கையில் கிடந்தபடிகூட அதிகாரம் செய்து பெற்ற அந்த மனைவி, ஒருசில கணங்களைக் கூடக் கணவனுக்கு என்று ஒதுக்கிவிடத் தயாரா யிருந்ததில்லை. நன்றாக இருந்த நாட்களிலேயே அவர் வாழ்வை நரகமாக்கிக் கொண்டிருந்தாள் அவள். வீட்டில் தன் நாத்தனார்கள், மாமியாருடன் சதா சண்டை. விதவையாகி, படித்து, உத்தியோகம் பார்க்கும் அத்தையும் ஏதோ 'சிறிசு'கள் என்று விட்டதில்லை. தன் இழப்பைப் பிறர் அனுபவிப்பதாவது என்பது போல் கலைக்கு உதவாத கட்சிகள் பேசுவாள். ஆக இந்தச் சூழலில், பாலையில் பசுஞ்சோலையாக வந்தவர் நீங்கள், அவர் வாழ்வுக்கு. ம்... முடிந்த கதை அவை...அன்று அதற்கு ஆத்திரப்பட்டதற்கு என்னை மன்னித்துவிடுங்கள். ஆசிரியை மாணவியாக இன்று நாம் பேசவில்லை. ஒரு பெரும் பிரச்னையை அலசி ஆராயும் பெண்களாக நினைத்துப் பார்ப்போம். அந்த அளவில் என் தந்தைக்காக நீங்கள் செய்தது அதிகம்.''

''என்ன மைதிலி! புது டீச்சருக்குக் கோடி வீடு பிடித்ததா?'' என்று உள்ளே நுழைந்த தலைமை ஆசிரியரைக் கண்டு திடுக்கிட்டு எழுந்தாள் லலிதா.

''அட்டா... நீங்கள் இருங்கள்.... அவர் உங்கள் (மாப்)பிள்ளை போல...'' மைதிலி அவளை அமர்த்தினாள். ''லலிதா டீச்சர் நம் வீட்டு முன் போர்ஷனில் தங்குவார். இனி ரகு, ரமா பொறுப்பு அவருடையது.''

அவளுடைய சுபாவத்துக்கு மீறி உற்சாகமாக, புது நபரிடம் சரளமாகப் பேசும் மனைவியை வியப்புடன் பார்த்தார் தலைமை ஆசிரியர்.


பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
டிசைன்கள்

டாக்டர் ரமேஷ் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு கிளம்பினான். வழியில்தான் ஹேமாவின் வீடு. கடந்து செல்லும்போது அவன் பார்வை அங்கே ஒரு கணம் நூலாடும். அவள் குளிர்ந்த புன்னகையை ஒரு நிமிடம் பார்த்துவிட்டுப் போனால்தான் அவனுக்கு வேலை ஓடும். அப்புறம் சின்னச் சின்னதாக அந்தக் கனவுகளின் பொம்மலாட்டம் மனதில் நிழலாடும். அன்றும் ஸ்கூட்டரின் வேகம் அங்கே சற்று மங்கியது.

''டாக்டர் ஸார் !''

ஹேமாதான் கையை உயர்த்தி அசைத்தாள். காம்பவுண்டு ஓரம் பூத்திருந்த குண்டு ரோஜாவைப் போல் அந்த முகமும் தென்றல் அசைவாக ஆடிற்று. ''ஒரு நிமிடம் உள்ளே

உன்னைவிட நான்……

வாருங்களேன்'' என்று அழைப்பது போல் ஒரு பார்வை. அவனால் மேலே தொடர்ந்து போக முடியவில்லை.

ஸ்கூட்டரை வெளியே நிறுத்திவிட்டு 'கேட்'டைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே போனான். அவன் ஐந்து அடி ஐந்து அங்குல உயரம். தன்னால் முடிந்த அளவு கம்பீரத்துடன் அந்த வாலிபன் நடந்தான்.

ஹேமா தோட்டத்தில் கம்பி நாற்காலிகளைச் சுற்றிப் போட்டு வைத்திருந்தாள். நடுவில் ஆவி பறக்கும் தேநீர் வைத்த சிறு மேஜை. அவளுக்கு அருகே நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான், அந்தச் சற்று வாலிபம் முதிர்ந்த இளைஞன்.

''ஒரு கப் டீ டாக்டர் ஸார் ! இவர் என் அத்தான். காப்டன் சுரேஷ் !''

காப்டன் சுரேஷ் எழுந்து கைகுலுக்கினான். சுமார் ஆறு அடி உயரம். போர்முனையைக் கண்ட முரட்டுக் கைகள் அவன் கை விரல்களைப் பலமாகப் பற்றி உலுக்கின. அளவாக நறுக்கினாற்போல் ஒரு தலை அசைப்பு. மீசையின் அடியில் சற்றே விரிந்து கொடுத்த புன்சிரிப்பு.

''இவர் டாக்டர் ரமேஷ். எங்கள் குடும்ப டாக்டர் !''

ஹேமாவின் சிரிப்பு நட்சத்திரப்பூவாக இருந்தது. இருவரையும் மாறி மாறிப் பெருமையுடன் பார்த்தபடியே நின்றாள். ரமேஷ் கைகுலுக்கியவரின் முகத்தை அண்ணாந்து பார்த்தான். அப்படிப் பார்க்க வேண்டி இருந்ததை எண்ணிய நினைப்பில் நெற்றி சுளித்தது. நிதானமாக உட்கார்ந்தான். அவனுக்கு அந்த அளவு கம்பீரம் வர முடியாதுதான்.

ஹேமா கொடுத்த தேநீரை வாங்கிக் கொண்டு உட்கார்ந்தான். காலை மடித்துப் பின்னால் நாற்காலியில் முதுகு செங்குத்தாய் வரும்படி அமர்ந்தான். அந்த நிலையில் அவனைப் பார்ப்பவர் யாரும் உயரக் குறைவு என்று சொல்லிவிட முடியாது. பேச்சு ஓடிக் கொண்டிருந்தது. சுரேஷைப் பார்த்தபோது அவன் மனத்தில் தலைநீட்டிய உருவங்கள் அமிதாப் பச்சன், பௌலர் ஜான் ஸ்நோ, டென்னிஸ் சாம்பியன் நியூகோம்ப் — கொஞ்சம் பொறாமை தலைதூக்கியது.

'' சுரேஷ் இன்னும் மணம் செய்து கொள்ளவில்லை. பொருத்தமான பெண்ணைத் தேடிக் கொண்டிருக்கிறான். பிடிவாதத்தில் சரியான மிலிட்டரி!'' ஹேமாவின் சிரிப்பு குலுங்கிற்று. ரமேஷின் நெஞ்சில் ஓர் ஏக்கம் தோன்றிற்று. இந்த உருவத்துக்கும், இத்தனை உயரத்துக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும் என்றால் இலேசுப்பட்ட காரியமா ? எந்த அழகான பெண்ணுக்கு வாய்த்திருக்கிறதோ அந்த அதிர்ஷ்டம் ? ஹேமாவின் பிடி பூப்போட்ட சைனாக் கோப்பையின் மேல் மெல்லப் படிந்திருந்தது. அவன் கண்கள் அந்தக் காட்சியை இமையாது பருகின. ஜாலம் நிறைந்த விரல்கள் தனித்தனியாக உயிர் கொண்டு பேசுவது போல் இருந்தன. ஹேமாவும் ஒரு வேளை—

அந்த நினைப்பில் அவன் முகச் சுளிப்பில்கூட ஓர் அலரிக் குறுகுறுப்பு.

அன்று வந்த நோயாளிகளில் கடைசியாக அவனுக்காகக் காத்திருந்து பேசிவிட்டுப் போனவர் ஒரு வங்காளிக்காரர். சென்னைக்குப் புதிதாகக் குடி வந்திருப்பவர். அவருடைய பிரச்னையும் புது மாதிரியானதுதான். அவருக்கு ஒரே பையன். எட்டு வயது இருக்கலாம். எதையும் தெரியாமல் செய்வதில் ஓர் ஆசை ; பெற்றோர்கள் சொன்னபடி கேட்காமல் இருப்பதில் ஓர் ஆர்வம் ; சாப்பிடுவது, படிப்பது, தூங்குவது, உடை அணிவது எல்லாவற்றிலும் ஒரு பிடிவாதம். தாய் கண்டிப்பாகப் பேசினால் கண்ணாடி தம்ளர் உடையும்; பீங்கான் தட்டு நொறுங்கும் ; புத்தகப் பக்கங்கள் கிழியும்.

'' உடம்பு ஆரோக்கியம் எப்படி ?'' என்று விசாரித்தான் ரமேஷ்.

''பரவாயில்லை. ஆனால் அவன் விருப்பப்படி விட்டால்தான் சாப்பிடுவான்.''

சற்று அமைதி கொடுக்கும் மாத்திரை ஒன்றை வாங்கிக் கொடுக்க 'பிரிஸ்கிரிப்ஷன்' எழுதித் தந்தான் ரமேஷ். ''வந்து பார்த்துக் கொண்டிருங்கள். அடுத்த தடவை வரும்போது பையனையும் அழைத்துக் கொண்டு வாருங்கள்'' என்றான் இழுத்தாற்போல்.

'' அவனாக வந்தால்தான். முடியாது என்றால் இல்லைதான்'' என்றார் தந்தை.

''பரவாயில்லை. நானே வந்து பார்க்கிறேன். அவனைக் கூப்பிடுகிறேன். என்னுடன் சிநேகம் செய்து கொள்கிறானா என்று பார்க்கலாம்.'' ஒரு புன்சிரிப்புடன் அவருக்கு ஆறுதல் சொல்லி அனுப்பினான்.

அந்தக் கட்டடத்தை இரண்டு டாக்டர்களாகப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள். மற்றவர் ஒரு குழந்தை வைத்திய நிபுணர்.

அவனைவிட ஐந்தாறு வயது பெரியவர். மணமாகி மனைவி இப்போது பிறந்தகம் போயிருந்தாள். கொஞ்ச நாட்களில் திரும்பி வரும்போது அவர்களிடையே ஒரு குழந்தைக் குரலும் கேட்கும். தினம் தினம் அவர் தொட்டுப் பார்க்கும் குழந்தைகளைப் போல் அவருடைய வீட்டிலும் ஒன்று.

அவர்கள் வீட்டுக்கு ரமேஷ் போயிருக்கிறான். பொருத்தமான ஜோடி அது. உயரம், உருவம், நிறம், அமைப்பு எல்லாவற்றிலும் ஓர் ஒற்றுமை. அது அவர்கள் மனப்பாங்கிலும் படர்ந்திருந்தது. இதமான குளுமை தெரியும் அமைதியான வாழ்க்கை. அவனும் ஆசைப்படுவதுண்டு. அவனுடைய நாளைய குடும்பம் இப்படித்தான் இருக்க வேண்டும். எல்லா விதத்திலும் ஒரு பொருத்தமும், ஒற்றுமையும் அமைய வேண்டும்.

சட்டென்று ஹேமாவின் முகம் மனத்தில் நிழல் காட்டிற்று. கிட்டத்தட்ட அவனுடைய உயரம் இருப்பாள் ஹேமா. கிட்டே நின்று பார்த்ததில்லை. ஒரு விரற்கடை உயரம் கூடுதலாகக்கூட இருக்கலாமோ என்னவோ? பொருத்தம் என்று அமைய வேண்டுமானால் ஹேமாவுக்குக் காப்டன் சுரேஷைப் போலத்தான் இருக்க வேண்டும். அவனை அறியாமல் அவனுடைய உள்ளம் கற்பனைகளில் லயித்தது.

அங்கே அவனைப் பார்க்க ஹேமா வருவதுண்டு. முன் அறையில் உட்கார்ந்து வருபவர்களைக் கவனிக்கும் மஞ்சுளாவுடன் பேசிக் கொண்டிருப்பாள். ஹேமாவுக்கு மஞ்சுவிடம் ஒரு நெருக்கமான நட்பு. சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவது தெரியாது.

மலையாளத்துப் பெண்ணானதால், மஞ்சு கூந்தலைப் பின்னி முடிவதே அபூர்வமாகத்தான் இருக்கும். பட்டுப் போன்ற கூந்தலைக் கழுத்து வரையில் மெத்து மெத்தென்று வாரி அங்கே குறுக்காகக் கட்டி மணி முடிச்சு போட்டுக் கொண்டிருப்பாள். அதற்குக் கீழே இடைவரையில் அது தோகையாக விளையாடும். தவழும் புன்னகையுடன் அவள் கூந்தல் அசைய எழுந்து நடப்பதே ஒரு தனி அழகு. ஹேமாவின் பார்வையில் அந்தக் கருங் கூந்தல் படும்போதெல்லாம் இலேசான பொறாமை மின்னும்.

அன்று மஞ்சுவின் தாய்க்கு உடம்பு சரியாக இல்லை. கையில் மருந்து வாங்கிக் கொண்டு அவள் சற்று முன்னதாகவே வீட்டுக்குப் போய் விட்டாள். ரமேஷ் தனியாக உட்-

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



கார்ந்து கொண்டிருந்தாள். வெளியே மழை பெய்யத் தொடங்கிற்று.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது. நனைந்த புடவையுடன் குளிரில் நடுங்கிக் கொண்டு உள்ளே வந்து நின்றாள் ஹேமா. ''இந்தப் பக்கம் வந்தேன். மழை பிடித்துக் கொண்டு விட்டது.'' — கைக்குட்டையால் நெற்றியையும் கழுத்தையும் மாறி மாறி ஒற்றிக் கொண்டாள். அவன் ஒரு டவலை எடுத்துக் கொண்டு வந்தான். '' உள்ளே போய் நன்றாகத் துடைத்துக் கொள், ஹேமா'' என்று நீட்டினான்.

அவள் திரும்பி வருவதற்குள் இரண்டு மாத்திரைகளையும் கொஞ்சம் வெந்நீரையும் எடுத்துக் கொண்டு வந்தான். '' எதற்கும் சாப்பிட்டு வை ஹேமா. சளி பிடித்துக் கொள்ளப் போகிறது'' என்று நீட்டினான்.

'' உட்கார் !'' என்று நாற்காலியைப் போட்டுவிட்டு ரமேஷ் எதிரே உட்கார்ந்தான். ''ஒரு விநோதமான கேஸ். கேட்டால் சுவாரசியமாக இருக்கும்'' என்று அந்த வங்காளி பாபுவின் பையன் நிரஞ்சனின் கேஸைச் சொன்னான்.

'' நீங்கள் அவன் வீட்டுக்குப் போயிருந்தீர்களா ?''

''போனேன், நல்ல பையன். பார்க்க அழகாக, சூடிகையாக இருக்கிறான். ஆனால் பிடிவாதம் வந்தால் போக்கிரி. கூச்சல் போட ஆரம்பித்தால் நிற்பதில்லை. சுவர் எல்லாம் கிறுக்கி வைத்திருக்கிறான்.''

'' நான் சொல்லட்டுமா ? இது ஏதோ ஒரு 'காம்ப்ளெக்ஸ்'. தன்னம்பிக்கை இல்லாத குறை. பெரியவர்களுக்கும் இருப்பது தான். ஆனால் அவர்கள் அடக்கி வைத்துக் கொள்கிறார்கள். சிறுவர்கள் இப்படிப் பிடிவாதம் பண்ணுகிறார்கள்'' என்று அவனைப் பார்த்தாள் ஹேமா. அவனுக்கு நெஞ்சில் இலேசாக ஏதோ இடித்தது. அவனையும் அவள் குத்திக் காட்டுகிறாளா ?

'' என்ன செய்யலாம் இதற்கு?''

''நீங்கள் டாக்டர். உங்களுக்குத் தெரியாதது இல்லை. உடம்பில் கட்டி வந்தால், உடையச் செய்தால்தான் குணமாகிறது. அவசியமானால் அறுத்தும் எடுக்க வேண்டி இருக்கிறது. மனத்தில் கட்டிப் போட்டிருப்பவைகளை உடைத்துப் பேசினால்தான் நல்லது. அந்தப் பையன் தாராளமாகத் தன்னை வெளியிட்டுப் பேச அனுமதிக்கட்டும். அதைப் பெற்றோர்கள் தூண்டட்டும். கொஞ்சம் கொஞ்சமாகச் சரி ஆகிவிடும்.''

''எப்படி இதை ஆரம்பிப்பது ?''

''அடுத்த தடவை அவன் இங்கே வரும் போது எனக்குத் தகவல் கொடுங்கள். நானே ஆரம்பிக்கிறேன், பாருங்கள்.''

ரமேஷ் அவளை வியப்புடன் பார்த்தான். அழகான பெண் மட்டும் அல்ல இவள். புத்திசாலித்தனமும் கூப்பிட்ட இடத்தில் வந்து இவளிடம் .சேவகம் செய்கிறது. கொடுத்து வைத்தவன் யாரோ ?

மழை சற்று நின்றது. ''நீ புறப்படு, ஹேமா. உனக்கு ரொம்பச் சிரமம்'' என்றான்.

சிரமமா? அவனிடம் அப்படித் தனியே உட்கார்ந்து பேசுவது சிரமமா? ரமேஷும் கூட அந்தச் சிறுவனைப் போலத்தானா?

அவள் உதட்டிலிருந்து ஒரு சின்னச் சிரிப்புத் தெறித்தது. டவலைச் சுழற்றி மடித்து நாற்காலியின் முதுகில் போட்டாள். அவன் மனத்தைத் தேடுவது போல் ஒரு பார்வை.

ஏன் இந்தப் பார்வை? எதற்காகப் பாலைக் கண்டுவதைப் போல் சிரித்தாள்?

''வருகிற ஞாயிற்றுக் கிழமை இரவு எங்கள் வீட்டில் விருந்து. சுரேஷுக்காகத்தான். நீங்களும் வாருங்களேன். மறுநாள் அவன் கிளம்பிப் போகிறான்.'' என்று அழைத்தாள் ஹேமா. பார்வையிலும் அந்த அழைப்பு கனிந்து நின்றது.

''நான் எதற்காக ஹேமா?'' என்று பார்வையை அவன் திருப்பிக் கொண்டான்.

''ஏன் வரக்கூடாதா?''

''அப்படி இல்லை. அன்று மாலை எனக்கு ஒரு மீட்டிங் இருக்கிறது. போகாவிட்டால் மற்ற டாக்டர்கள் கோபிப்பார்கள். சீக்கிரம் முடிந்துவிட்டால்வர முயலுகிறேன்.''

அவளுக்குத் தெரியும். அவன் வரமாட்டான். உள்ளூற அவளுக்கு ஓர் அவா துடித்தது. வெளியிட்டுப் பேசத்தான் மனத் துணிவு இல்லை.

அடுத்த வாரம் மாலை நேரம். சற்றுக் கூட்டம் அதிகமாகவே இருந்தது. மற்றவர்கள் எழுந்து போன பின் நிதானமாக உள்ளே வந்தார் அந்தப் பெரியவர். கைப் பிடியில் நிரஞ்சன்.

''டாக்டர், இது எங்கள் தாத்தா'' என்று அறிமுகம் செய்தான்.

''உட்காருங்கள்'' என்று சொல்லிவிட்டு மஞ்சுவிடம் ஹேமாவுக்குத் தகவல் அனுப்பச் சொன்னான். பையன் துடியாக இருந்தான். மேஜையில் ஒரு பொருளாவது அவன் கைக்கு அகப்படாமல் இல்லை. கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது. அவன் கண்ணாடிக் கதவை ஆட்டியதைப் பார்த்தபோது.

''உள்ளே வரலாமா?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தாள் ஹேமா. நிரஞ்சனின் பக்கம் திரும்பி இரு கைகளையும் நீட்டினாள். ஒரு கணம் தயங்கிவிட்டு அந்த விரிந்த கைகளின் அணைப்பில் ஆவலோடு புகுந்து கொண்டான் குழந்தை.

''உனக்கு இந்த 'ஆன்டி'யைப் பிடித்திருக்கிறதோ?''

''ஓ'' தலையை ஆட்டினான் நிரஞ்சன்.

''டாக்டர் உனக்கு மருந்து கொடுக்கிறேன் என்று சொன்னாரா?''

'' இல்லை, இல்லை. அவர் என்னுடைய நண்பர்.

''அப்படியானால் நான் உனக்கு ஒரு கதை சொல்லட்டுமா, கேட்கிறாயா?''

''சொல்லு 'ஆன்டி' ''

''நான் காலேஜில் படித்தபோது ரமா என்று எனக்கு ஒரு தோழி. இருவரும் ஒரே அறையில் குடியிருந்தோம். அவளுக்கு ரொம்ப நீளமான தலைமயிர். எழுந்து நின்று கூந்தலை அவிழ்த்து விட்டால் முழங்காலில் இடிக்கும். எனக்கு ரொம்பப் பொறாமை!

''ஒரு நாள் அவள் தூங்கிக் கொண்டிருந்த போது கூந்தலைக் கத்திரித்து விட்டேன். மறுநாள் அவள் உட்கார்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். என்னைத் திட்டி

உங்கள் குடும்பத்தினரின்
உடல்நலம் ஓங்கியிருக்க
அவசியம் அளியுங்கள் மிகச்
சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.



ASP/JIL-V-1A/73 TAM

விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்ய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

ஏனெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விட்டமின்கள் மற்றும் கனிம சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வசீகர பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.


விவாவையே தேர்ந்தெடுங்கள்.

விவா

உற்சாகமான ஆரோக்ய வளர்ச்சிக்கு தினமும் விவா.

இந்தியாவில் தயாரிப்போர்,
ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

அறிமுகப்படுத்துகிறோம் ஆக்பா ஐஸோலி 1
முதன்முறையாக இந்திய அமெச்சூர்
புகைப்படக் கலைஞர்களுக்கு



Agfa® ISOLY-I

1. மூன்று ஷட்டர் வேகப் பொருத்தங்களுடன் மிகவும் இயக்குவது இலகு. 2. நுட்பத் தெளிவுடன் சோபிக்கும் படங்களுக்கான அக்ரோமாட் f8 லென்ஸ். பாதகமான சூழ் நிலைகளிலே எடுக்கப்படும் படங்களின் சரியான எக்ஸ்போஷருக்கு உறுதி தரும் 2 லென்ஸ் ஸ்டாப்கள். 4. 120 சைஸ் ரோல் பிலிமிலே 16 (4x4 செமீ) படங்களைத் தருகிறது (6x6 செமீ சைஸ் உடையதை விட 4 அதிகம்). விசேஷ லாக்கிங் பொதி அமைப்பை உடைய பிலிம் சுருட்டும் குமிழ். இரட்டை எக்ஸ்போஷரைத் தடுத்திடுகிறது. 5. 'இரட்டை எக்ஸ்போஷர் லாக்' இயக்க நிலையில் இருப்பதை காட்டுகிறது சிவப்புநிற எச்சரிக்கை விளக்கு.

திரையிடலுக்கெனப் பளிச்சென்ற ஆக்பா
கலர் டிரான்ஸ்பேரென்ஸிகளையும் எடுக்கிறது
ஆக்பா ஐஸோலி I. தெள்ளத் தெளிவுள்ள
பிரின்டுகளுக்கும், என்லார்ஜ்மென்டுகளுக்கும்
எப்போதுமே குறிப்பிட்டுக் கோருவீர்
ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களே.

தயாரிப்பாளர்கள் : நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்,
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை
• புகைப்படச் சாதனங்களின் தயாரிப்பாளர்களான
ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லிவர்குஸன்
அவர்களின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

AGI

விலை:
ரூ. 143/-
எக்ஸைஸ்
தீர்வை
உள்ளிட்டது.
பிற வரிகள்
தனி.

ஆக்பா ஐஸோலி I—
ஆர்வத் துடிப்புள்ள
அமெச்சூர்களுக்கான
காமிரா.

Simoes/AG/14C-TAM



பிரதமரின் சாகசம்!

புதுதில்லியில் காஸ்ட்ரோவை வரவேற்று உபசரித்தார் நமது பிரதமர். காஸ்ட்ரோ இந்திய விருந்தோம்பலைத் துஷ்பிரயோகம் செய்து அமெரிக்காவைத் தூற்றும் போது நமது பிரதமர் உற்சாகமூட்டுவது போல் அருகிலிருந்தார். பின்னர் அமெரிக்க 'ஸெனட்'டில் இந்தியாவுக்குப் பாதகமான ஒரு தீர்மானம் மிகப் பெருவாரியான வோட்டு வித்தியாசத்தில் நிறைவேறியது. இந்தியா அந் நாட்டுக்குத் தர வேண்டிய ஏராளமான கடன்களை டாலருக்கு நூறு சென்டுக்குக் குறைவாகத் திருப்பித் தருவதை ஏற்கவே முடியாது என்பது அந்தத் தீர்மானம். அறுபத்தேழுக்கும் பதினெட்டு என்ற வோட்டு வித்தியாசத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆக மொத்தம் நமது பிரதமரின் சாகசத்தால் நம் நாட்டுக்குப் பல மில்லியன் டாலர்கள் நஷ்டம்!

— எம். ஆர். மஸானி
ஒரு கட்டுரையில்

யிருக்கலாம். ஆனால் அவன் ஒன்றுமே சொல்லவில்லை. அதுவே எனக்கு மனசில் பாரமாக இருந்தது. அவன் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அழுதேன்.

"'பரவாயில்லை ஹேமா. என் தலைமயிர் மறுபடியும் வளர்ந்து விடும். கவலைப்படாதே. ஆனால் நீ மறுபடியும் இப்படித் தப்புச் செய்யாதே' என்று சொன்னான். அதற்குப் பிறகு நான் யாரையும் பார்த்துப் பொறாமைப் படுவதில்லை. தப்புச் செய்வதில்லை. தப்புச் செய்ய நேர்ந்தாலும் பளிச்சென்று அப்பாகிட்டே போய்ச் சொல்லிவிடுவேன்."

"சொல்லிவிட்டால்?"

"சொல்லிவிட்டால் அப்புறம் மனசில் குறுகுறுப்பு இருக்காது. மறுபடியும் அந்தத் தப்பைச் செய்யத் தோன்றாது."

நிரஞ்சனின் விழிகள் பெரிதாகி அவளையே பார்த்தன. அவனுக்கு ஏதோ புரிவது போல இருந்தது. "இனிமேல் நான் தப்புச் செய்தால் உங்ககிட்டே வந்து சொல்லட்டுமா?"

"தாராளமாகச் சொல்லு. ஏன், அம்மாகிட்டேயும் சொல்லலாமே?"

"அம்மா கேட்க மாட்டாள்."

"அம்மா கேட்பாள். நான் வந்து சொல்கிறேன். தாத்தாகிட்டேயும் சொல்கிறேன். ஆனால் மறுபடியும் அந்தத் தப்பை நீ பண்ணக் கூடாது. செய்வாயா?"

"செய்ய மாட்டேன்."

பின்னால் சிரிப்புக் கேட்டது. மஞ்சுளா நின்று கொண்டிருந்தாள். கதவுக்கு வெளியே ரமேஷின் நிழல் உருவம் தெரிந்தது. நிரஞ்சனை அழைத்துக் கொண்டு தாத்தா போய் விட்டார்.

"குழந்தைக்கு ஏற்ற நல்ல கற்பனைக் கதை" என்றாள் மஞ்சு ஹேமாவிடம்.

"எப்படிக் கண்டுபிடித்தாய்?"

"பொறாமைக்காகக் கூந்தலைக் கத்தரிப்பது என்றால் என்றைக்கோ என் முடியும் பறி போயிருக்கும். இல்லையா ஹேமா? ஆன்பத் திரியில் கத்திரிக்கோலுக்கும் பஞ்சமில்லை!"

"குழந்தைக்காகச் சொன்னேன் மஞ்சு."

"தெரியும்" என்று ஹேமாவின் கூந்தலைத் தொட்டு நெருடி, அர்த்தமுள்ள புன்னகையுடன் மஞ்சு போய்விட்டாள். அவளும் புறப்பட வேண்டியதுதான்.

"வெல்டன் ஹேமா. நீ செய்தது நல்ல வேலை. குழந்தையின் மனம் திருந்த இது ஒரு நல்ல ஆரம்பம் என்றுதான் நினைக்கிறேன்."

அவன் குரலில் தெரிந்த கனிவும், அந்தப் பாராட்டும், நெஞ்சில் இதழ்கள் சொரிவது போல் உதிர்ந்தன. ரமேஷின் மனம் மாறுவதற்கும் இது ஓர் ஆரம்பமாக இருக்கும்.

"நான் உங்களுடனேயே ஸ்கூட்டரில் வருகிறேன். வரலாமா? உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?"

"வேண்டாம் ஹேமா! நீ போகலாம். உனக்கும் எனக்கும் அப்படி..." ரமேஷின் குரல் கூசி அடங்கியது. அவளை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

ஹேமா புன்னகை புரிந்தாள். செருப்பைக் கழற்றி விட்டு அவன் அருகே வந்து நின்றாள். ஆச்சரியத்துடன் அவன் பார்வை திரும்பிற்று. அவனைவிட ஓர் அங்குலம் உயரக் குறைவாக இருந்தாள் ஹேமா. அந்தக் குறையே அவளை உயரமாகக் காட்டிற்று.

"பார்த்தீர்களா? நான் அணிந்து கொண்டிருந்தது 'ஹை-ஹீல்' வைத்த உயரத்தைக் கூட்டிக் காட்டும் செருப்பு. அவ்வளவுதான். நீங்களும் சமாளித்துக் கொள்ளலாம். ஏங்குவதில் அர்த்தமில்லை. ஏன் விழுங்குகிறீர்கள்? வெளியிட்டுப் பேசுங்கள். நிரஞ்சனுக்கு நான் சொன்னது உங்களுக்கும் பொருந்தும்."

"நீ இல்லையாக்கும்? மஞ்சு தன் கூந்தலை ஒவ்வொரு தடவை வாரும்போதும் பார்த்து ஏங்கிக் கொண்டு—"

"இருக்கலாம். ஆனால் நான் ஏங்குவதில்லை. இன்றைக்கு மஞ்சுவும் அதைப் புரிந்து கொண்டு விட்டாள். என் கூந்தலை தொட்டுப் பார்த்து விட்டுச் சிரித்தாள்."


"போக்கிரி! கூந்தலில் சவுரியா?" என்று பின் முடியை ஆசையோடு பிடித்தான்.


ஆள்காட்டி விரலை உதட்டில் வைத்துக் கண்களை அகல விரித்துப் பார்த்தாள் ஹேமா. "உஷ்..இது பெண்களின் ரகசியம்!" ஒரு புது ஒளி மெருகிட்டது. "இப்போது எனக்கும் புரிகிறது. எதையும் 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொள்ளலாம் ஹேமா. எனக்கும் சொல்லிக் கொடுத்து விட்டாய் இன்றைக்கு" என்றான் ரமேஷ்.

"ஆமாம். அப்படி 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொள்வதற்குப் பெயர்தான் தாம்பத்தியம்" என்று சொகுசாக நீட்டிய அவன் கைவிரல்களில் தன் கைவிரல்களைக் கலந்து சேர்த்துக்கொண்டாள் ஹேமா. நல்ல பெண்! அவனுக்கு எப்போதும் ஒரு படி முன்னாலேயே அவள் போகிறாளோ?



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam





கடும் அதிவெப்பத் தேவைகளுக்கு நம்பகமானவை



ஃபயர்க்ரீட் மற்றும் ஃபயர்க்ரீட் சூபர்

ஏசிசி யின் காஸ்டபிள் ரிஃப்ராக்டரிகள்

எவ்வடிவத்திலும் வார்க்கலாம். எந்த அளவிற்கும் உருவமைக்கலாம். சிறு நுணுக்குமாறல் மற்றும் தேய்மானம் இவற்றைத் தவிர்ப்பதோடு வெப்ப அதிர்ச்சிகளையும் தாங்க வல்லவை.

1350° செ. வரையிலுமான வெப்பநிலைகளுக்கு ஃபயர்க்ரீட், 1550° செ. வரையிலுமான வெப்பநிலைகளுக்கு ஃபயர்க்ரீட் சூபர்.

வாடிக்கையாளரின் தேவைக்கு தகுந்தவாறு காஸ்டபிள் ரிஃப்ராக்டரிகள் கிடைக்கின்றன.

ஏசிசி—தரமான தயாரிப்புகளுக்கு நம்பகமான உத்தரவாதம்

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்

ACC. [illegible]

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

